REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2020 ஒக்டோபர் 21 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 88 இல. 250 | October 21,Wednesday, 2020 | 32பக்கங்கள் | 30/-

ஆர்ஜன்டீனாவில் ஒரு மில்லியனை தொட்டது கொரோனா 02

நல்லாட்சி ஏற்படுத்திய பாதிப்பு கொரோனாவை விட பாரதூரம் 05

முத்தாரம் 08

லங்கா ப்ரீமியர் லீக் அணிகளுக்கு கெயில், ரசல், அப்ரிடி 16

20ஆவது திருத்தம் அரசியலமைப்புக்கு உட்பட்ட விடயம்

- மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும்
- 04 சரத்துக்களை நிறைவேற்ற மட்டுமே சர்வஜன வாக்கெடுப்பு

உயர்நீதிமன்ற தீர்ப்பு சபாநாயகரால் அறிவிப்பு

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் அரசியலமைப்புக்கு உட்பட்டதெனவும் அதனை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியுமெனவும் உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

20ஆவது திருத்த சட்டமூலம் அரசியலமைப்பிற்கு உட்பட்டது

04 சரத்துக்களை அதே நிலையில் நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு அவசியம். உயர் நீதிமன்ற தீர்ப்பை சபாநாயகர் 06

பாதாள உலக நபர் மதுஷ் துப்பாக்கி சூட்டில் பலி

மாளிகாவத்தை தொடர்மாடி தொகுதியில் அதிகாலை சம்பவம்

பாதாள உலக நபரான பிரபல போதைப் பொருள் வர்த்தகர் சமரசிங்க ஆரச்சிகே மதுஷ் லக்ஷித என்ற மாகந்துரே மதுஷ் துப்பாக்கிச் சூட்டில் நேற்று பலியானார். நேற்று அதிகாலை 3.08 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாளிகாவத்தை அப்பள் தோட்டம் தொடர்மாடி வீட்டுத் தொகுதியில் 22 கிலோ ஹெரோயின் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்ததை அடுத்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் நேற்று அதிகாலை இது தொடர்பில் தகவல் வழங்கிய மாகந்துர மதுஷை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இதன்போது அங்கிருந்த போதைப்பொருள் வர்த்தகர்கள் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். 06

பாராளுமன்றம் ஒரு பொது இடம் அல்ல;

கூடுவதற்கு எவ்வித தடையுமில்லை என்கிறார் அமைச்சர் பவித்திரா

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

பாராளுமன்றத்திற்குள் சமூக இடைவெளியையும் முகக்கவசங்களையும் எவரும் அணியவில்லை. சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய விசேட வர்த்தமானி அறிவிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ள விடங்கள் பாராளுமன்றத்திற்கு பொருந்தாதா?. பாராளுமன்றத்திற்குள் ஒரு சட்டமும் பாராளுமன்றத்திற்கு வெளியில் ஒரு சட்டமும் பின்பற்றப்படுகிறதா? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வியெழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் கேள்வியால் ஆளும் எதிர்தரப்புகளுக்கும் இடையில் சபையில் கடும் வாக்குவாதங்கள் ஏற்பட்டன. துறைசார் அமைச்சர் 06

மேலும் ஐந்து பொலிஸ் பிரிவுகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

குளியாப்பிட்டி பகுதிலுள்ள மேலும் 5 பொலிஸ் பிரிவுகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நேற்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குளியாப்பிட்டிய, பன்னல, தும்மலசூரிய, கிரியுல்ல மற்றும் நாரம்மல பொலிஸ் பிரிவுகளுக்கே மறு அறிவித்தல் வரையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நேற்று அமுல்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

குளியாபிட்டிய பகுதியில் உள்ள மத ஸ்தலத்தில் தடையை மீறி சமய நிகழ்வில் கலந்து கொண்ட பலருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதகனகளின் பின்னர் அதில் பங்கேற்ற 14 பேர் கொவிட் 06

சுகாதார நடைமுறைகளை சபாநாயகரும் மீறியுள்ளார்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபையில் சாடல்

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

பாராளுமன்றத்திற்குள் சமூக இடைவெளியையும் முகக்கவசங்களையும் எவரும் அணியவில்லை. சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய விசேட வர்த்தமானி அறிவிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ள விடயங்கள் பாராளுமன்றத்திற்கு பொருந்தாதா?. பாராளுமன்றத்திற்குள் ஒரு சட்டமும் பாராளுமன்றத்திற்கு வெளியில் 06

'800' திரைப்படத்திற்கு

முற்றுப்புள்ளி வைத்தார் நடிகர் விஜய் சேதுபதி

சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றுதிரைப்படமான 800 படத்திலிருந்து விலகியதாக விஜய் சேதுபதி அறிவித்துள்ளார். பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்ததால், 800 திரைப்படத்திலிருந்து விலகிக்கொள்ளுமாறு விஜய் சேதுபதியை முத்தையா முரளிதரன் கேட்டுக் கொண்டிருந்தார். 06

ரிஷாட் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் தன்னை கைது செய்வதை தடுக்குமாறு கோரி உத்தரவு பிறப்பிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தாக்கல் செய்த மனுவை நவம்பர் மாதம் 06 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இம் மனு நேற்று (20) 06

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள

விளை நிலங்களை விடுவிக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

சி.பி.ரத்னாயக்கவுடன் விசேட கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களங்களின் கட்டுப்பாட்டிலுள்ள விளை நிலங்களை விடுவித்து விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை 06

மத்திய மாகாண உதவி ஆசிரியர் நியமனம் 23இல்

ஜீவன் தொண்டமான் அறிவிப்பு

மத்திய மாகாண உதவி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி வழங்கப்படுமென இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேற்று அறிவித்துள்ளார்.

நீண்ட காலமாக மத்திய மாகாணத்தில் நிலவி வந்த உதவி ஆசிரியர் நியமனம் தொடர்பான பிரச்சினைகள் 06

முரளியின் 800 க்கு நல்ல பப்ளிசிட்டி, படத்தை எடுத்தால் 800 நாள் சக்கை போடு போடும்....!!
உண்மைதான், ஆனாலும் ரெண்டு பேருமே தாங்கள் பெரிய மனுஷங்களெண்டு காட்டிப்போட்டாங்கள்...
படம் இப்பவே எடுத்த மாதிரிதான்...!

நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட ரிஷாட்

14 நாட்கள் தனிமைப்படுத்த உத்தரவு

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன், தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர் நீர்கொழும்பு பள்ளஞ்சேனை சிறைச்சாலைக்கு நேற்றுமுன் தினம் இரவு மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். 06

ரிஷாட்டுக்கு பாராளுமன்றம் வர அனுமதிக்க வேண்டும்

எதிரணி பிரதம கொரடா

ஷம்ஸ் பாஹிம், நிசாந்தன் சுப்பிரமணியம்

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் எம்.பிக்கு பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க அனுமதி வழங்குமாறு எதிர்க்கட்சி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று சபையில் கோரினார். 06

யாழ்.மாநகர சபை;

உறுப்பினர் பதவியிலிருந்து மணிவண்ணன் நீக்கம்

யாழ். மாநகர சபையின் உறுப்பினர் பதவியில் இருந்து சட்டத்தரணி வி.மணிவண்ணன் நீக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர் அறிவித்துள்ளார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்புரிமை முடிவுறுத்தப்பட்டுள்ளது என அந்தக் கட்சியின் செயலாளரால் கடந்த 13ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் ஊடாக அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து இந்த 06

அனைவரும் இணைந்து கொழும்பு நகரத்தை சுத்தமாக வைத்திருப்போம்!

உங்கள் கழிவுகளை பின்வரும் முறைமைக்கு அமைவாக பிரிந்திடுங்கள்.



உக்கும் கழிவுகள்

உங்கள் இல்லத்தில் சேரும் கழிவுகளில் நீங்கள் உரம் தயாரிக்கவில்லை என்றால் தயவுசெய்து அதை CMC யிடம் கையளிக்கவும்.

- சமையலறை காய்கறி கழிவுகள் மற்றும் பழக்கழிவுகள், எஞ்சிய கழிவுகள், தேங்காய் சக்கைகள், பயன்படுத்திய தேயிலை கழிவுகள், பைகள், முட்டை ஓடுகள், மாமிச கழிவுகள்.
- வீட்டுத்தோட்டத்தில் சேரும் குப்பைகள் மர இலைகள், பூக்கள்
- துண்டாக்கப்பட்ட இளநீர் மட்டைகள்

மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்

பின்வரும் பொருட்கள் சுத்தமாக இருக்கவேண்டும்.

- கண்ணாடிகள்
- கார்ட்போட் / கடதாசி
- சுத்தமான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- உலோகங்கள்
- சுத்தமான தேங்காய் சிரட்டைகள்
- சுத்தமான டின்கள்
- சுத்தமான யோகட் மற்றும் பிளாஸ்டிக் கோப்பைகள்
- மறுசுழற்சி செய்யக்கூடிய சமையலறை உபகரணங்கள்

மறுசுழற்சி செய்யமுடியாத கழிவுகள்

- மண்ணான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- சுகாதார நப்கின்கள்
- அழுக்கான யோகட் கோப்பைகள்
- பால் பேக்கட்டுகள்
- பயன்படுத்திய சவே பேக்கட்டுகள் (ஷம்பூ, சோஸ், மைலோ மற்றும் பல)
- தலைமுடி
- ஷேவர் மற்றும் பிளேடுகள்
- சுத்தமற்ற டின்கள்
- செரமிக் பாத்திரங்கள்
- இறப்பர்
- மண் பாத்திரங்கள்
- மருந்துப் பொருட்கள்

திண்மக்கழிவு முகாமைத்துப் பிரிவு
கொழும்பு மாநகர சபை
வெப்: www.colombo.mc.gov.lk
தொ.பே: 0112 431 694

மாவட்டம் D2A
கொழும்பு கோட்டை மற்றும் புறக்கோட்டை

141, கிருல வீதி, கொழும்பு 05
ஈ-மெ: info@cleantech.lk
தொ.பே: 0112 368 768

cleantech because we care

சர்வதேச செய்திகள்

ஆர்ஜன்டீனாவில் கொரோனா ஒரு மில்லியனைத் தொட்டது

ஒரு மில்லியன் கொரோனா வைரஸ் தொற்று சம்பவங்கள் பதிவான உலகின் ஐந்தாவது நாடாக ஆர்ஜன்டீனா இடம் பிடித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்திற்குள் புதிதாக 12,982 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அந்நாட்டின் மொத்த தொற்றுச் சம்பவங்கள் 1,002,662 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தவிர, ஆர்ஜன்டீனாவில் நோய்த் தொற்றினால் மேலும் 451 பேர் உயிரிழந்திருக்கும் நிலையில் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கையும் 26,716 ஆக உயர்ந்துள்ளது.

45 மில்லியன் மக்கள் தொகை கொண்ட ஆர்ஜடீனா உலகில் ஒரு மில்லியன் நோய்த் தொற்று சம்பவத்தை கடந்த மிகச் சிறந்த நாடாகவும் உள்ளது.

இந்த எண்ணிக்கையை இதற்கு முன்னர் கடந்த அமெரிக்கா, இந்தியா, பிரேசில் மற்றும் ரஷ்யா அனைத்தும் மிகப் பெரும் மக்கள் தொகை கொண்ட நாடுகளாகும்.

நோய்த் தொற்றுக்கு எதிராக தென் அமெரிக்காவில் எல்லைகளை மூடி ஏனைய கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்த முதல் நாடுகளில் ஒன்றாக ஆர்ஜன்டீனா இருந்தபோதும் அந்நாட்டில் கடந்த சில மாதங்களில் நோய்ப் பரவல் அதிகரித்துள்ளது.

சூடானை 'தீவிரவாத' பட்டியலில் இருந்து நீக்க அமெரிக்கா திட்டம்

சூடான் 335 மில்லியன் டொலர் இழப்பீடு வழங்கினால் அந்நாட்டை தீவிரவாதத்திற்கு அனுசரணை வழங்கும் நாடுகள் பட்டியலில் இருந்து நீக்குவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்திருக்கும் சூடான் பிரதமர் அப்தல்லா ஹம்டொன், நிதி பரிமாற்றப்பட்டதாகவும் அமெரிக்கா உடன் அதனை உறுதி செய்யவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சூடான் அரசின் விருந்தாளியாக அல் கொய்தா தலைவர் ஒசாமா பின் லாடன் அங்கு வாழ்ந்து வந்த 1993 ஆம் ஆண்டு தொடக்கம் சூடான் இந்தப் பட்டியலில் உள்ளது.

ஆபிரிக்காவில் அமெரிக்க தூதரகங்கள் மீது 1998 ஆம் ஆண்டு அல் கொய்தா நடத்திய குண்டுத் தாக்குதலுடன் தொடர்புபட்டே இழப்பீடு கோரப்படுகிறது.

தன்சானியா மற்றும் கென்யாவில் உள்ள தூதரங்கள் மீது இடம் பெற்ற இந்தத் தாக்குதல்களில் 220க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பத்தினருக்கே இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று டிரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

ஆர்ப்பாட்டங்களை அடுத்து சூடான் ஜனாதிபதி ஒமர் அல் பஷீர் கடந்த ஆண்டு பதவி கவிழ்க்கப்பட்டது தொடக்கம் அமெரிக்கா மற்றும் சூடானுக்கு இடையிலான உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

டிரம்ப், பைடனின் விவாதத்தை கட்டுப்படுத்த புதிய விதிமுறை

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்புக்கும், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடனுக்கும் இடையே நடைபெறவிருக்கும் 2ஆவது அரசியல் விவாதத்தில் புதிய அம்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒருவர் பேசும்போது மற்றவரது ஒலிபெருக்கியின் செயல்பாட்டை முடக்கும் 'மியுட்' பொத்தான் அறிமுகம் செய்யப்படுகிறது.

முதல் விவாதத்தின்போது இருவருக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றம் சரிவர இல்லை. அதைத் தவிர்க்க, அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் துறை புதிய நடைமுறையைக் கொண்டுவந்துள்ளது.

அதன் மூலம், ஒவ்வொரு வேட்பாளரும் முதல் இரண்டு நிமிடங்களுக்கு எந்தக் குறுக்கீடும் இல்லாமல் தாராளமாகப் பேச முடியும்.

ஒருவர் மற்றவர் பேசுவதற்கு அளிக்கப்படும் நேரத்தை மதித்து நடப்பார்கள் என நம்புவதாகத் தேர்தல் துறை குறிப்பிட்டது. கடந்த செப்டெம்பரில் இருவரும் விவாதத்தில் ஈடுபட்டபோதும் டிரம்ப் 71 தடவை பைடனின் பேச்சை இடையூறு செய்ததோடு முன்னாள் துணை ஜனாதிபதியான பைடன் 22 தடவைகள் டிரம்புக்கு இடையுறு செய்தார்.

இறுதிநேர விதிமுறை மாற்றங்கள் இருந்தாலும் பைடனுடன் விவாதிக்க டிரம்ப் தயாராக உள்ளார் என்று அவரது நிர்வாகம் தெரிவித்தது. இரு வேட்பாளர்களும் கடந்த வியாழக்கிழமை இரண்டாவது தொலைக்காட்சி விவாதத்தில் ஈடுபடவிருந்தனர். எனினும் டிரம்புக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதால் அந்த விவாதத்தை ஒன்லைன் விவாதமாக வைப்பதற்கு விவாதத்திற்கு பொறுப்பான ஆணைக்குழு தீர்மானித்தது. எனினும் டிரம்ப் அதனை நிராகரித்தார். இதனால் இருவரும் தனித்தனியே தொலைக்காட்சியில் உரை நிகழ்த்தினர்.

இந்நிலையில் வரும் வியாழக்கிழமை இருவரும் கடைசி விவாதத்தில் பங்கேற்கவுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வரும் நவம்பர் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது. கருத்துக் கணிப்புகளின்படி ஜோ பைடன் சிறு எண்ணிக்கையில் முன்னிலையில் உள்ளார்.

தொடரும் ஆர்ப்பாட்டம்:

தாய்லாந்தில் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்துவதற்கு அரசு முயற்சி

தாய்லாந்தில் பிரதமருக்கும், மன்னராட்சி அதிகாரங்களுக்கும் எதிரான ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைந்துவரும் வேளையில் சமூக ஊடகங்கள் சிலவற்றை அரசாங்கம் தடைசெய்யத் திட்டமிட்டு வருகிறது.

ரகசிய அரசாங்க ஆவணங்கள் அந்தச் சமூக ஊடகங்களில் வெளியாகியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. அது தற்போது மக்களிடையே பரவிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

தாய்லாந்தில் இணையத்தைத் தணிக்கை செய்யும் அதிகாரம் கொண்ட மின்னிலக்கப் பொருளியல் அமைச்சு, அந்த ஆவணத்தைத் தேசிய ஒளிபரப்பு, தொலைத்தொடர்பு ஆணையத்துக்கு அனுப்பியுள்ளது.

டெலிகிராம் செயலியின் மூலம் அந்த ஆவணம் கசிந்ததாக நம்பப்படுகிறது. ஆர்ப்பாட்டங்களை விரைவாகத் திட்டமிட்டு நடத்த மாணவர்கள் டெலிகிராம் செயலியையே பயன்படுத்தி வருகின்றனர். அதனால் அந்தச் செயலி தடை செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையே, 'பிரீ யூத்' என்ற டெலிகிராம் குழுவைக் கட்டுப்படுத்துமாறு, காவல்துறை தனிப்பட்ட முறையில் மின்னிலக்கப் பொருளியல் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் குழு கடந்த சில மாதங்களாக நடந்துவரும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஏற்பாடு செய்ததில் பெரும் பங்காற்றியதாக நம்பப்படுகிறது.

ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் இதுவரை 80க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

சிரிய அரச படை சுற்றிவளைத்த பகுதியில் இருந்து துருக்கி வாபஸ்

வட மேற்கு சிரியாவில் உள்ள துருக்கியின் மிகப்பெரிய இராணுவ முகாமை அரச படை சுற்றிவளைத்திருக்கும் நிலையில் துருக்கி அங்கிருந்து வாபஸ் பெற ஆரம்பித்துள்ளது.

சிரியாவின் வடமேற்கு மாகாணமான ஹமாவின் மோரெக் பகுதியிலேயே துருக்கியின் இந்த இராணுவ முகம் உள்ளது. எனினும் அந்தப் பிரதேசத்தின் பெரும்பகுதி சிரிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.

சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அரச படை கடந்த ஆண்டு முன்னெடுத்த படை நடவடிக்கையின்போது இந்தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டது.

இங்கிருந்து வாபஸ் பெறும் துருக்கி துருப்புகள் இத்லிப் புறக்காவல் பகுதியில் நிலைநிறுத்தப்படவுள்ளதாக துருக்கி ஆதரவு சிரிய கிளர்ச்சித் தளபதி ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

சிரிய அரசுக்கு எதிராகப் போராடும் கிளர்ச்சியாளர்களுக்கு துருக்கி ஆதரவு அளிப்பதோடு, அதன் வடக்கு எல்லையை ஒட்டி இருக்கும் சிரிய பகுதிகளில் பல இராணுவ நடவடிக்கைகளையும் முன்னெடுத்தது. கடந்த 2018 செப்டெம்பர் தொடக்கம் துருக்கி வடமேற்கு சிரியாவில் 12 கண்காணிப்பு முகாம்களை நிறுவி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐ.அ.இ – இஸ்ரேலுக்கு இடையே முதல் வர்த்தக விமானப் பயணம்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து இஸ்ரேலுக்கு இயக்கப்பட்ட முதல் பயணிகள் விமானம் டெல் அவிவ் சென்றடைந்தது. எட்டிஹாட் ஏர்வேய்ஸ் விமானம் 9607 இஸ்ரேலின் பென்கூரியன் சர்வதேச விமானநிலையத்தில் கடந்த திங்கட்கிழமை காலை தரையிறங்கியது. இஸ்ரேல் சுற்றலா பிரதிநிதிகளை ஏற்றியே அபூதாபியில் இருந்து அந்த விமானம் புறப்பட்டுச் சென்றுள்ளது.

"இஸ்ரேலுக்கு பயணிகள் விமானம் ஒன்றை இயக்கிய முதல் வளைகுடா விமானசேவையாக எட்டிஹாட் பதிவாகியுள்ளது. இது ஆரம்பம் மாத்தரமாகும்" என்று அந்த விமானசேவை ட்விட்டரில் பதிவிட்டுள்ளது.

இரு தரப்புக்கும் இடையே தொடர்ச்சியான விமான சேவையை ஆரம்பிக்கவிருப்பதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு இடையே இராஜதந்திர உறவை ஏற்படுத்தும் ஒப்பந்தம் அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் கடந்த மாதம் இடம்பெற்றது.

அது தொடக்கம் இரு தரப்புக்கும் இடையிலான உறவுகள் அதிகரித்திருப்பதோடு அதன் தொடர்ச்சியாக வர்த்தக விமானப் பயணங்கள் தொடர்பில் நேற்று உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்தானது. இதன் போது இருநாடுகளுக்கும் இடையே வீசா இன்றி பயணிப்பதற்கான உடன்படிக்கையும் எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்:

புளோரிடாவில் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பு

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு முன்கூட்டியே ஆரம்பமாகியுள்ளது.

புளோரிடா மாநிலத்தின் பல்வேறு இடங்களில் வாக்களிப்பு நிலையங்களுக்கு முன் மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர். அமெரிக்கச் சட்டத்தில், தேர்தலுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரே மாநில அளவில் வாக்களிப்பை நடத்த அனுமதி உள்ளது.

27 ஜனாதிபதி மன்ற வாக்குகளைக் கொண்ட புளோரிடா மாநிலம், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் டொனால்ட் டிரம்புக்கு மிக முக்கியம் என்று கருதப்படுகிறது. வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி பதவியைத் தக்கவைத்துக்கொள்ள டிரம்புக்கு 270 ஜனாதிபதி மன்ற வாக்குகள் தேவை.

அதிக மக்கள்தொகையைக் கொண்ட புளோரிடா மாநிலத்தில் தோல்வியடைவது டிரம்பின் அரசியல் போட்டியாளர் ஜோ பைடனின் வெற்றியை உறுதிப்படுத்தக்கூடும் என்று கருதப்படுகிறது. புளோரிடா மாநிலத்துக்குக் கடந்த வாரம் நேரில் சென்ற டிரம்ப், இந்த வாரம் வெள்ளிக்கிழமை மீண்டும் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

2016 ஜனாதிபதி தேர்தலில் பதிவான 136 மில்லியன் வாக்குகளில் சுமார் 20 வீத வாக்குகள் முன்கூட்டி பதிவானவையாகும். இம்முறை அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு குழந்தைகளை ஆற்றில் வீசிய ஈராக்கிய தாய் கைது

தனது கணவரை தண்டிப்பதற்காக இரு குழந்தைகளையும் டைக்ரிஸ் நதியில் வீசி எறிந்த ஈராக் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணின் மூன்று வயது மகன் மற்றும் இரண்டு வயது மகள் நதியில் மூழ்கியதாக நம்பப்படுவதோடு அவர்களின் உடல்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவம் பாதுகாப்பு கெமராவில் பதிவாகி இருப்பதோடு அது சமூக ஊடகத்தில் பரவி ஈராக்கியர் மத்தியில் கோபத்தைத் தூண்டியுள்ளது.

கடந்த செப்டெம்பரில் தனது கணவர் விவாகரத்து செய்ததற்கு பழிவாங்கும் வகையிலேயே அவர் குழந்தைகளைக் கொன்றிருப்பதாக குடும்ப உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். தலைநகர் பக்தாதின் வடக்காக இருக்கும் அல் அயிமா பாலத்தில் இருந்தே அந்தத் தாய் குழந்தைகளை வீசி எறிந்திருப்பதோடு அங்கு தந்தை கதறி அழும் வீடியோ ஒன்றும் சமூக ஊடகத்தில் பரவியுள்ளது.

தாய்வான்–சீன அதிகாரிகள் பீஜிங்கில் நேரடியாக சண்டை

நீண்ட காலமாக பதற்றம் நீடித்து வரும் தாய்வான் மற்றும் சீன இராஜதந்திரிகள் பீஜிங்கில் ஒருவருக்கு ஒருவர் நேரடியாக சண்டியிட்டுள்ளனர்.

இந்த மாத ஆரம்பத்தில் தமது தேசிய தினக் கொண்டாட்டத்தில் இரு சீன தூதரக அதிகாரிகள் நுழைவாயிலில் சண்டைபிடித்ததாக தாய்வான் குற்றம்சாட்டியுள்ளது.

இந்த சண்டையில் தமது அதிகாரிகள் காயமடைந்ததாக இரு தரப்பும் குறிப்பிட்டுள்ளன. பீஜிங் பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தாய்வான் தமது பிரிந்து சென்ற மாகாணம் என்று சீனா கூறும் நிலையில் தாம் இறைமை கொண்ட ஒரு நாடு என்று தாய்வான் வலியுறுத்துகிறது.

பீஜிங்கில் இருக்கும் தாய்வானின் வர்த்தக அலுவகலகத்தில் கடந்த ஒக்டோபர் 8 ஆம் திகதி இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

எனினும் இந்த சம்பவம் பற்றி சீனா மாறுபட்ட விளக்கத்தை அளித்துள்ளது. குறித்த நிகழ்வு இடம்பெறும் இடத்திற்கு வெளியில் பொதுவான பகுதியிலேயே தமது அதிகாரிகள் இருந்ததாகவும் தாய்வான் அதிகாரிகளே மோதலை தூண்டும் வகையில் செயற்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2020 ஒக்டோபர் 21 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

இன்றைய சுபதினம்

சார்வரி வருடம் ஆவணி 27

ராகுகாலம் : காலை : 8:00 - 9:00வரை
சுபநேரம் : மாலை : 3:00 - 4:30வரை

யோகம்: சித்தயோகம்

நட்சத்திரம்: அனுசம், காலை 9:37

திதி: சதுர்த்தி

தொழுகை நேரம்

17 முதல் 22 வரை

சுபஹ் - 04.41
லுஹர் - 11.57
அஸர் - 03.16
மஃரிப் - 05.55
இஷா - 07.05

வடக்கு மாகாண கல்வி சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கு விரைவில் தீர்வு

கல்வி அமைச்சர் டக்ளஸிடம் உறுதி

யாழ். பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தை மேலும் செழுமைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதுடன் வடக்கின் கல்விச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுகள் பெற்றுத்தரப்படுமென்றும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் உறுதியளித்துள்ளார்.

இப்பிரச்சினைகள் தொடர்பாக முன்வைத்த பல்வேறு விடயங்கள் குறித்து கடந்த வெள்ளிக் கிழமை (16) கல்வி அமைச்சரை சந்தித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடிய போதே கல்வி அமைச்சர் இந்த உறுதியை வழங்கியுள்ளார்.

நல்லாட்சியென கூறப்பட்ட ஐ.தே.க. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்த ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற அதிபர் சேவை தரம் – 3க்கான ஆட்சேர்ப்பின்போது முறைகேடு இடம்பெற்றுள்ளதாகவும் மொழி வாரியாக ஆட்சேர்ப்பு இடம்பெற வேண்டும் என்ற நியமங்களுக்கு மாறாக தெரிவுகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில், சுமார் 610 தமிழ்மொழி மூல வெற்றிடங்கள் இருக்கின்ற போதும் 167 பேர் மாத்திரமே உள்வாங்கப்பட்டுள்ளதாவும்

06

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கொவிட் நிதியத்திற்கு ரூ15 மில். பிரதமரிடம் கையளிப்பு

தேசிய நீர்வழங்கல் வடிகால மைப்புச் சபையின் ஊழியர்கள் தங்களது ஒருநாள் சம்பளத்தை ஒன்று சேர்த்து ரூபாய் 15 மில்லியன் நிதியை, இடுகம கொவிட் 19 நிதியத்திற்காக (19) பிற்பகல் அலரிமாளிகையில் வைத்து பிரதமரிடம் வழங்கினர்.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அனைத்து ஊழியர்கள் மற்றும் நிர்வாகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அதற்கான காசோலையை தேசிய நீர்வழங்கல் வடிகால மைப்புச் சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வழங்கினார். இடுகம கொவிட்19 சுகாதார, சமூக பாதுகாப்பு

06

இலங்கைக்கு வருமாறு

தென் கொரிய பிரதமருக்கு பிரதமர் மஹிந்த அழைப்பு

தென் கொரிய பிரதமர் சுங் சைகியூனை இலங்கைக்கு வருமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்றுக் (20) காலை நடைபெற்ற தொலைபேசி மூலமான கலந்துரையாடலின் போது, இரு நாடுகளுக்கிடையிலான உறவை மேலும் மேம்படுத்துவதற்கான விருப்பத்தை இரு தலைவர்களும் வெளிப்படுத்தியுள்ளனர்.

சமீபத்தில் முடிவடைந்த பொதுத் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றதற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த தென் கொரியாவின் பிரதமர் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இலங்கையுடன் தொடர்ந்து பணியாற்ற விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

06

ஜனாதிபதியின் ஒரு இலட்சம் தொழில் வழங்கும் திட்டம்;

முதற்சுற்றில் 34,818 பேருக்கு நியமன கடிதங்கள் வழங்கி வைப்பு

சமூகத்தில் மிகக்குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு இலட்சம் பேருக்கு தொழில் வழங்கும் திட்டத்தின் கீழ் பயிலுனர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு (19) ஆரம்பிக்கப்பட்டது. முதற் சுற்றில் 34,818 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நியமனம் பெறுவோருக்கு அவர்களின் திறன்கள் மற்றும் விருப்பத்தின் பேரில்

06 மாத பயிற்சியுடன் ரூ. 22,500 கொடுப்பனவு

06

உலகில் கொரோனா பாதிப்பு நான்கு கோடியை தாண்டியது

மொத்தம் 72,652 பேரின் நிலை கவலைக்கிடம்

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 4.06 கோடியைத் தாண்டியுள்ளது. சீனாவின் வூகான் நகரில் கடந்த ஆண்டு இறுதியில் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 210 நாடுகளுக்கு மேல் பரவியுள்ள இந்த வைரஸ் பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

உலகம் முழுவதும் 04 கோடியே 06 இலட்சத்து 29,806 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 3,03,39,832 பேர் குணமடைந்துள்ளனர். வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 11 லட்சத்து 22 ஆயிரத்து 734 பேர் உயிரிழந்துள்ளனர். வைரஸ் பரவியவர்களில் 91 லட்சத்து 67 ஆயிரத்து 240 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 72 ஆயிரத்து 652 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

அனுமதிப்பத்திரங்கள் செல்லுபடியாகும் காலம்

டிசம்பர் 31 வரை நீடிப்பு

கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக சாரதி அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலத்தை மூன்று மாதங்களுக்கு நீடிக்குமாறு போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இதற்கமைய விஷேட வர்த்தமானியொன்றை வெளியிடும்போது அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங்களும் செல்லுபடியாகும் காலத்தை இவ்வாண்டு டிசம்பர் 31 வரை நீடிப்பதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

கிழக்கு ஆளுநர் வெளியிட்ட அறிக்கை எம்மை இனவாதிகளாக காட்டும் முயற்சி

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

மயிலத்தமடு, மாதவனை பிரசேங்களில் உள்ள மேய்ச்சல் நிலம் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுனருடன் நாம் நடத்திய சந்திப்பு தொடர்பில் ஆளுநர் வெளியிட்டுள்ள கருத்துகள் சிங்கள மக்கள் மத்தியில் எம்மை இனவாதிகளாக காட்டும் வகையில் அமைந்துள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை சிறப்புரிமை பிரச்சினையொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

மயிலத்தமடு, மாதவனை பிரசேங்களிலுள்ள மேய்ச்சல் நிலம் கிழக்கு மாகாண ஆளுநர் வெளிடப்படவுள்ளதாக கூறும் வர்த்தமானி குறித்து எழுந்துள்ள சிக்கல் நிலைமைகளை கலந்துரையாடுவதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் அநுராத யஹம்பத்தை கடந்த 14ஆம் திகதி காலை 10 மணியளவில் சந்தித்திருந்தோம்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஆளுநர் ஊடங்களுக்கு விடுத்த அறிவிப்பில், பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இனங்கள் அடிப்படையில் இங்குள்ள மேய்ச்சல் நிலங்களை பிரித்துக்கொடுக்குமாறு அழுத்தம் கொடுத்ததாகவும் இனங்கள் அடிப்படையில் காணிகளை ஒதுக்கீடு செய்வது எமது

06

மாகந்துர மதுஷின் கொலையின் பின்னணியில் பல மர்மங்கள்

நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருப்பின் பல அரசியல்வாதிகளின் பெயர்கள் அம்பலமாகியிருக்கும்

பாராளுமன்றில் எதிரணியினர் குற்றச்சாட்டு

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரரான மாகந்துர மதுஷின் கொலையின் பின்புலத்தில் பல மர்மங்கள் உள்ளதாகவும் அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தால் அவருடன் தொடர்பை பேணியுள்ள பல அரசியல்வாதிகளின் பெயர்கள் வெளிவந்திருக்குமென எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டின. பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழான கட்டளைகள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹெஷா விதானகே, நளின் பண்டார, விஜித ஹேரத் ஆகியோரே இவ்வாறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹெஷா விதானகே, சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரரான மாகந்துர மதுஷின் கொலையின் பின்புலத்தில் பாரிய நாடகமொன்று அரங்கேற்றப்பட்டுள்ளது. ஒருவேளை மாகந்துர மதுஷை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தால் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புபட்ட பல அரசியல்வாதிகளின் பெயர்கள் வெளிவந்திருக்கும் என்ற காரணத்தினாலே அவர் கொலை செய்யப்பட்டுள்ளாரா எனக் கேள்வியெழுப்பியதுடன், இந்த நாட்டில் குற்றவாளிகளை தண்டிக்க வழிமுறைகள் இருந்தும், நாய்களை சுட்டுத்தள்ளுவதை போல மக்களை கொன்று குவிப்பது இந்த நாட்டு மக்கள் எதிர்பார்த்த ஒரே நாடு ஒரே சட்டம் இதுவா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார

06

மினுவாங்கொடை கொரோனா; மேலும் 60 பேருக்கு தொற்று

மொத்த எண்ணிக்கை 2,222ஆக உயர்வு

மினுவாங்கொடை கொரோனா தொற்று உறுதியானோருடன் நெருங்கிய தொடர்புடைய மேலும் 60 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

அதன்படி, மினுவங்கொடை ஆடை தொழிற்சாலையில் கொரோனா தொற்று உறுதியானதை அடுத்து அங்கு அடையாளம் காணப்பட்ட மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 2,222 ஆக அதிகரித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 685 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில்

06

கொவிட் வைரஸ் பரவலின் பின்னர்

எந்தவொரு இந்தியருக்கும் இலங்கை வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

கொவிட் 19 வைரஸ் பரவலின் பின்னர் இந்திய ஊழியர்கள் அல்லது தொழில்நுட்பவியலாளர்களுக்கு இலங்கை வர கைத்தொழில் அமைச்சின் ஊடாக எவ்வித அனுமதியும் அளிக்கப்படவில்லையென்பதுடன், முதலீட்டுச் சபை மற்றும் குடிவரவு – குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரிகளின் தகவல்களின் பிரகாரம் எந்தவொரு இந்தியருக்கும் இலங்கைவர அனுமதியளிக்கப்பட்டிருக்கவில்லையென கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் துசார இந்துனில் எழுப்பிய இடையீட்டு கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் துசார இந்துனில், பிரெண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையின் மூலம்தான் கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை இலங்கையில் ஏற்பட்டுள்ளதாக அனைவரும் கூறுகின்றனர். 22 பேர் விமானமொன்றின் மூலம் மத்தள விமான நிலையத்திற்கு வந்துள்ளனர். இவர்கள் எவ்வித தனிமைப்படுத்தல்

06

பி.சி.ஆர் பரிசோதனையை காண்பித்து

ரிஷாத் பாராளுமன்றம் வருவதை தடுக்க முயற்சி

முஷார்ரப் எம்.பி. சபையில் குற்றச்சாட்டு

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

பி.சி.ஆர்.பரிசோதனையைக் காரணம் காட்டி ரிஷாத் பதியுதீனின் பாராளுமன்றம் வரும் உரிமையை தடுப்பதற்கு சதித்திட்டம் மேற்கொள்ளப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஷர்ரப் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீனின் கைதை ஏதோ சர்வதேச பயங்கரவாதியை பிடித்ததுபோல் சித்திரிக்கின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழான கட்டளை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

எமது கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீனின் கைதை ஏதோ சர்வதேச பயங்கரவாதியை பிடித்ததுபோல் சித்திரிக்கின்றனர். ரிஷாத் என்ற பெயரை உச்சரிக்காது அரச இயந்திரம் இயங்கமுடியாத நிலையில் உள்ளது. பாராளுமன்றமும் அரசும்

06

தென் மாகாணத்தில் திடீர் சோதனை;

18 இலட்சம் அபராதம் விதிப்பு

வெலிகம தினகரன் நிருபர்

தென் மாகாண நுகர்வோர் அதிகார சபைஅதிகாரிகளினால் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் கடந்த (ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர்) ஆகிய மூன்று மாதங்களில் மேற் கொண்ட திடீர் சோதனையில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களிடமிருந்து நீதிமன்றத்தின் மூலம் ரூ. 18,70,000 (பதினெட்டு இலட்சத்து எழுபதாயிரம்) அபராதமாக அரசுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இம் மாவட்டங்களில் இக்காலப்பகுதிக்குள் 526 விற்பனை நிலையங்கள் சோதனையிடப்பட்டுள்ளன. விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை,

06

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	120.37	126.14
கனடியன் டொலர்	132.20	138.18
யூரோ	201.26	209.00
ஜப்பான் யென்	1.6887	1.7628
சிங்கப்பூர் டொலர்	128.46	133.83
ஸ்டேலிங் பவுன்ஸ்	224.45	232.40
சுவிஸ் பிராங்க்	187.86	195.81
அமெரிக்க டொலர்	183.51	188.61

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	492.89	கட்டார் ரியால்	50.73
குவைத் டினார்	603.09	சவூதி ரியால்	49.54
ஓமான் ரியால்	483.42	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	50.66

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சார்வரி வருடம் ஐப்பசி மாதம் 05ம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரபீஉனில் அவ்வல் பிறை 03

குறள் தரும் சிந்தனை

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

அனிச்சப்பூ மோந்தவுடன் வாடி விடும்: அதுபோல் முகம் மலராமல் வேறு பட்டு நோக்கியவுடன் விருந்தினர் வாடி நிற்பார்.

மக்கள் மத்தியில் இன்னும் தொடரும் அலட்சியம்

சீனாவின் வுஹான் நகரில் 2019 டிசம்பர் மாத பிற்பகுதியில் தோற்றம் பெற்று மிக வேகமாக உலகம் முழுவதும் பரவியுள்ள கொவிட் 19 தொற்று இன்று வரைக்கும் பெரும் சவாலாகவே விளங்கிக் கொண்டிருக்கிறது. வளர்முக நாடுகள் மாத்திரமல்லாமல் அபிவிருத்தி அடைந்த நாடுகள் கூட இத்தொற்றின் சவாலுக்கு முன்பாக நிலைகுலைந்து போயுள்ளன.

இவ்வைரஸ் தொற்று கடந்த மார்ச் மாதம் நடுப் பகுதியாகும் போது வளர்முக நாடான இலங்கையிலும் பரவத் தொடங்கியது. ஆனால் திட்டமிட்ட அடிப்படையில் விரிவான முறையில் முன்னெடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகளின் பயனாக மக்களின் ஒத்துழைப்போடு குறுகிய காலத்திற்குள் இத்தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை பெருவீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டது. இது இலங்கைக்கு பெருமையை தேடிக் கொடுத்ததோடு உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட பல சர்வதேச அமைப்புகளதும், நாடுகளதும் பாராட்டுக்களையும் பெற்றுக் கொடுத்தது.

அத்தோடு ஜூலை, ஓகஸ்ட் மாதமாகும் போது வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு அழைத்து வரப்படுபவர்களுக்கு மாத்திரம் பதிவாகக் கூடிய ஒரு தொற்றாக இலங்கையில் கொவிட் 19 தொற்று மாற்றப்பட்டிருந்தது. அதிலும் செப்டம்பர் மாத இறுதியாகும் போது 150 க்கும் குறைவானோரே இத்தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு இத்தொற்று கட்டுப்பாட்டு நிலைக்குள் கொண்டு வரப்பட்ட போதிலும், செப்டெம்பர் ஆகும் போது கொவிட் 19 தொற்றுத் தவிர்ப்புக்கான வழிமுறைகளை கையாள்வது தொடர்பில் மக்கள் மத்தியில் அலட்சியப் போக்கும் கவனயீனமும் அதிகரிக்கத் தொடங்கின. இதனை பரவலாக அவதானிக்க முடிந்தது. குறிப்பாக முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி, கைகழுவுதல் போன்ற சுகாதார வழிமுறைகளைப் பேணல் என்பவற்றில் பெரும் அலட்சியப் போக்கு தலைதூக்கியிருந்தது.

இவ்வாறான சூழலில்தான் மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் பெண் ஒருவருக்கு இவ்வைரஸ் தொற்று ஒக்டோபர் 4ஆம் திகதி உறுதியானது. அதனைத் தொடர்ந்து இற்றை வரை நாட்டிலுள்ள 20 க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் இவ்வைரஸ் தொற்று பதிவாகியுள்ளது. இந்நாட்டில் இதுவரை பதிவான மிகப் பெரிய கொத்தணித் தொற்றாக மினுவாங்கொடை தொற்று விளங்குகின்றது. இத்தொற்றுக்கு நேற்று நண்பகல் வரையும் 2222 பேர் உள்ளாகியுள்ளனர். ஆனால் ஆரம்பம் முதல் இற்றை வரை இத்தொற்றுக்கு 5600 இற்கு மேற்பட்டோர் உள்ளாகியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தொற்று தலைதூக்கிய மினுவாங்கொடை, திவுலப்பிட்டிய உள்ளிட்ட கம்பஹா மாவட்டத்தின் 19 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. களுத்துறை மாவட்டத்திலுள்ள மத்துகம பிரதேசத்தில் மூன்று கிராமங்கள் முடக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சூழலில் குருநாகல் மாவட்டத்திலுள்ள குளியாப்பிட்டி, பன்னல, கிரிஉல்ல, நாரம்மல, தும்மலசூரிய ஆகிய ஐந்து பொலிஸ் பிரிவுகளிலும் நேற்று முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அத்தோடு இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதோடு, அவர்களோடு தொடர்பைப் பேணியவர்கள் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தி இத்தொற்று தொடர்பில் கண்காணிக்கப்படவும் செய்கின்றனர். நாட்டின் பல பிரதேசங்களிலும் இத்தொற்று பதிவாகி வருகின்ற தற்போதைய சூழலில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் பரந்த அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இச்சூழலிலும் இத்தொற்றை தவிர்ப்பதற்கான வழிமுறைகளை கடைப்பிடிப்பதில் கவனயீனமும் அலட்சியப் போக்கும் மக்கள் மத்தியில் காணப்படவே செய்கின்றது. இதன் விளைவாக சுகாதார அமைச்சு கடந்த வாரம் விசேட வர்த்தமானியொன்றை வெளியிட்டு கொவிட் 19 தவிர்ப்புக்கான வழிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் மற்றும் உதாசீனம் செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகை செய்திருக்கிறது.

இது முற்றிலும் வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். கொவிட் 19 தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக எல்லாவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இவை வீண் நடவடிக்கைகளாக நோக்கப்படலாகாது. தற்போதைய சூழலில் இத்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பெரிதும் உதவக் கூடிய வழிமுறைகளாகவே இவை விளங்குகின்றன. இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே இத்தொற்றை தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் விசேட கவனம் செலுத்த வேண்டும். அதனை தம் பொறுப்பாகவும் கடமையாகவும் கருதி செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படுவது தமதும் தம் குடும்பத்தினரதும் தாம் வாழும் சமூகத்தினரதும் ஆரோக்கியத்துக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு ஏற்பாடாக அமையும். அது நாட்டுக்கு அளிக்கப்படுகின்ற பாரிய சேவையாகவும் விளங்கும்.

editor.tkn@lakehouse.lk

அலட்சியம் கூடாது!

நாட்டில் கொவிட் 19 வைரஸ் தொற்றாளர்கள் புதிதாக இனங்காணப்பட்டதையடுத்து நாடு முழுவதும் அச்சுறுத்தலான சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையில் கொவிட் 19 வைரஸ் தொற்றின் பயங்கரத்திலிருந்து ஒவ்வொருவரும் தன்னையும் மற்றையோரையும் பாதுகாத்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

இலங்கையில் கொவிட் 19 அலையின் தாக்கம் மீண்டும் ஆரம்பித்திருப்பதால் அரசும், சுகாதாரத்துறையினரும் நாட்டு மக்களிடமிருந்து எதிர்பார்க்கும் சுகாதார, பாதுகாப்பு விடயங்களில் மக்கள் அலட்சியம் காட்டக் கூடாது. மக்கள் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கி பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்றின் பரவல் தொடர்பில் நாட்டு மக்களை விழிப்படையச் செய்யும் நோக்கில் அவ்வப்போது பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், இவ்விடயம் தொடர்பில் பலர் நடந்து கொள்ளும் விதம் கவலை கொள்ளச் செய்கின்றது. அரசு மற்றும் சுகாதாரத்துறையினர் வழங்கும் அறிவித்தல், அறிவுறுத்தல்கள் தொடர்பில் அவர்கள் அலட்சியப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர்.

சுகாதார நடைமுறைக்கு அமைவாக முகக்கவசம் அணிதல், அனைத்து சந்தர்ப்பங்களிலும் சமூக இடைவெளி பேணுதல், முறையாக கைகளைக் கழுவிக் கொள்ளுதல், தேவையற்ற ஒன்றுகூடல்களைத் தவிர்த்துக் கொள்ளுதல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றுவது நமது பாதுகாப்பிற்கும், சமூகத்திலுள்ள ஏனையவர்களது பாதுகாப்பிற்கும் உத்தரவாதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

ஐரோப்பிய நாடுகளில் கொவிட் 19 இரண்டாவது அலையினால் ஏற்பட்ட உயிர்ச்சேதங்களும், பொருளாதார நெருக்கடிகளும் எதிர்பார்த்திராத அளவுக்கு பாரிய எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன. ஆனால், இந்நாடுகள் தற்பொழுது இரண்டாவது அலையின் தாக்கத்திலிருந்து மீண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, மத்திய கிழக்கு நாடுகளில் நாளுக்கு நாள் கணிசமான கொவிட் 19 நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் இறப்பு வீதம் கணிசமானளவு குறைவடைந்துள்ளது எனலாம்.

கொவிட் 19 வைரஸுடனான கடந்த 9 மாத கால அனுபவத்திலிருந்து மருத்துவ உலகம் பல விடயங்களை புதிதாக அறிந்து கொண்டுள்ளது. கொவிட் 19 வைரஸினால் ஏற்படக் கூடிய நோய்த் தாக்கங்கள், அதன் பாரதூரமான விளைவுகள் பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளன.

கொரோனாவின் சமூக பரம்பல் அதிகரிக்கின்ற பொழுது நிலைமைகள் மாறுபடும். ஒருவருக்கு தொற்றக் கூடிய வைரஸின் அளவைக் கட்டுப்படுத்த முடியாது போகும். சமூகப் பரம்பல் அதிகரிக்கின்ற பொழுது ஒரவரிடமிருந்து மற்றவருக்கு தொற்றுகின்ற Virus Load அளவும் அதிகரிக்கும். அது மனிதர்களுக்கு ஏற்படுத்துகின்ற நோய்த் தாக்கங்களும் அதிகரிக்கும். வைத்தியசாலைகள் நிரம்பி வழியும். இறுதியில் அதிகரித்த மரணங்கள் எற்படலாம். மேற்கு நாடுகள் இவ்வாறான நெருக்கடியைச் சந்தித்தன.

இவ்வாறான ஆபத்தான நிலைமை ஏற்படுவதிலிருந்து எங்களையும், எங்களது குடும்பத்தையும் சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவருக்குமுள்ள தலையாய கடமையாகும். குறிப்பாக, மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் கொவிட் 19 தொற்று ஒருவருக்கு ஏற்பட்டால் ஓரிரு மணித்தியபலங்களில் மிக விரைவாகப் பரவி விடும் அபாயம் காணப்படுகின்றது. அதன் காரணத்தினாலேயே இந்நோய் தொடர்பில் இறுக்கமான பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

சுகாதார அறிவுறுத்தல்களை உரியவாறு பேணுவதே ஆபத்தைத் தவிர்க்கும் வழி

கொவிட் 19 சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பில் அட்டாளைச்சேனை ஜூம்மாப் பெரிய பள்ளிவாயலில் பொதுமக்களுக்கு விளக்கமளித்த அட்டாளைச்சேனை அனைத்துப் பள்ளிவாயல்கள் சம்மேளனத் தலைவரும், அட்டாளைச்சேனை ஜூம்மாப் பெரிய பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபைத் தலைவருமான சட்டத்தரணி எம். எஸ்.ஜூனைதீன் கூறுகையில், ஐவேளை தொழுகைக்காக பள்ளிவாயலுக்கு வருகை தரும் பொதுமக்கள் மிகவும் அவதானம், விழிப்புணர்வுடன் நடந்து கொண்டு நிறைவான ஒத்துழைப்பு நல்க வேண்டும். எம்மையும், ஏனையவர்களையும் வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். கொவிட் 19 தொடர்பில் அரசாங்கம், சுகாதாரத்துறை, இலங்கை வக்பு சபை, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா என்பன அவ்வப்போது வழங்கும் அறிவுரைகள், சுகாதார ஆலோசனைகளை பொதுமக்கள் முறையாகப் பின்பற்றி பள்ளிவாசல்களின் நிர்வாகத்தினருக்கு நிறைவான ஒத்துழைப்பு நல்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

பள்ளிவாயல்களில்; தொழுகைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் பல்வேறு நிபந்தனைகள், மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில்; இலங்கை வக்பு சபை, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்பன எழுத்து மூலம் தெளிவாக வலியுறுத்திள்ளன. இதில் பள்ளிவாயல் நிர்வாகத்தினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள்; தொடர்பிலும், பொதுமக்கள் தினசரி கடைப்பிடிக்;க வேண்டிய ஒழுங்குமுறைகள் தொடர்பிலும் தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்;ளது.

கூட்டுத் தொழுகையில் கலந்து கொள்ளும் மக்கள் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பள்ளிவாயல்களுக்கு தொழுகைக்காக வருகை தரும் பொதுமக்கள் வீட்டிலயே 'வுழு' செய்து கொண்டு வருகை தருவதுடன், கைகளை நன்றாகக் கழுவிக் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் கட்டாயம் முகக்கவசம் அணிந்து வருவதுடன், தொழுகை விரிப்பொன்றையும் வீட்டிலிருந்து கொண்டு வருதல் வேண்டும். சமூக இடைவெளி பேணும் நோக்கில் பள்ளிவாயலில் அடையாளமிடப்பட்டுள்ள இடத்தில் தொழுகைக்காக அமர்ந்து கொள்ளுதல் வேண்டும். இந்நடைமுறைகளை பொதுமக்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

ஐவேளைத் தொழுகைக்காக பள்ளிவாயலுக்கு வயோதிபர்கள், சிறுவர்கள் வருகை தர வேண்டியதில்லை. அத்துடன் வாகனத்தில் வருகை தருவதை முடிந்தளவு தவிர்த்துக் கொள்ளவும் எனவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. கொவிட் 19 நடைமுறைகளை ஜமாஅத்தினர்; அவசியம் பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும். தவறினால் நாங்கள் மாத்திரமன்றி முழு ஊரும், மொத்த நாடும் தவிக்க நேரிடும்.

அரசாங்கம், சுகாதாரத் துறையினர், பள்ளிவாசல்களின் நிர்வாகத்தினர் அவ்வப்போது வழங்கும் அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை பொதுமக்கள் முறையாகப் பின்பற்றி எம்மையும், ஏனையவர்களையும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இவ்விடயங்களில் யாரும் தளர்வுப் போக்கைக் கடைப்பிடிக்காது அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அவல நிலையில் உடுவல தோட்ட குடியிருப்புகள்

மத்திய மாகாணத்தின் தலை நகரமான கண்டி நகருக்கு அருகில் அமைந்துள்ள ஹந்தான குறுப், உடுவல தோட்டத் தொழிலாளர்களது குடியிருப்புகள் மிகவும் மோசமான நிலைமையில் காணப்படுகின்றன.

இந்தக் குடியிருப்புகள் கட்டப்பட்டு இன்றைக்கு நூற்று ஐம்பது வருடங்களுக்கு மேலாகின்றன. இக்குடியிருப்புகளின் கூரைகள் கடந்த பல தசாப்த காலமாக திருத்தம் செய்யப்படவில்லை. கூரைத் தகரங்கள் துருப்பிடித்து உக்கிப் போயுள்ளன.

அத்தகரங்களில் பெரிய அளவிலான துவாரங்கள் காண்ப்படுகின்றன. இந்த துவார்கள் ஊடாக மழைநீர் உட்புகுவதால் மழைக் காலங்களில் தொழிலாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

உணவுப் பொருட்கள், உடைகள், பிள்ளைகளின் பாடப் புத்தகங்கள் உட்பட உ டைமைகள் அனைத்தும் கூரையின் ஒழுக்கினால் நனைந்து சேதமடைந்து விடுகின்றன. ஒழுகும் மழைநீர் கூரையில் உள்ள புகை மற்றும் அழக்குகளையும் கழுவியபடி வருவதால் உடைகளும் அழுக்காகி விடுகின்றன. இந்த அழுக்கான நீர் ஆடைகளிலும் ஏனைய உடைமைகளிலும் படுவதால் அவை பயன்படுத்த முடியாதபடி போகின்றன.

சிறிய காற்றில் கூட கூரைத் தகடுகள் வீசிச் செல்லப்படுகின்றன. மண் மற்றும் கற்களை கொன்டு கட்டப்பட்ட சுவர்கள் ஒழுகும் மழைநீரில் நனைந்து ஊறிய நிலையில் அதன் கற்கள் கழன்று விழுகின்றன.

பல தசாப்தமாக திருத்தம் செய்யப்படாத கூரைகளால் வீட்டுக்குள் நீர் ஒழுக்கு

இந்த வீடுகளில் மின்சார இணைப்பு உள்ளதால் ஒழுகும் மழைநீர் மின்கட்டமைப்புகளில் படுவதால் மின்ஒழுக்கு ஏற்படும் அபாயமும் உண்டு என தொழிலாளர்கள் அச்சமடைந்துள்ளனர். இவ்வாறு மின்ஒழுக்கு ஏற்ப்பட்டு அண்மையில் லயக் குடியிருப்புகள் தீக்கு இரையாகிய சம்பவமும் நடந்துள்ளது. இச்சம்பவத்தில் வீடுகளை இழந்தவர்களுக்கு இதுவரை வீடுகள் வழங்கப்படவில்லை.

இங்கு நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களுக்கு நீர் விநியோக வசதிகள் இல்லை. மழைகாலத்தில் சேறும் சகதியுமான நீரை பருக வேண்டியுள்ளது. வெயில் காலங்களில் நீரை பெற்றுக் கொள்ள நீண்ட தூரம் செல்ல வேண்டி உள்ளது. நீர் ஊற்றெடுக்கும் மலையடி வாரத்தில் வசிக்கும் தங்களால் நீரைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

ஆர். நவராஜா...✍
(தெல்தோட்டை தினகரன் நிருபர்)

கொரோனாவை விட பாரிய பொருளாதார பாதிப்பை நாட்டுக்கு ஏற்படுத்தி விட்டது நல்லாட்சி அரசாங்கம்

கொவிட் 19 வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது. அனைத்து கொரோனா தொற்றாளர்களிலும் இறுதி தொற்றாளர் யார் என்பதைக் கண்டுபிடிப்பதில் சுகாதார அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாக வாகன ஒழுங்கு விதிகள், பஸ் போக்குவரத்து சேவை மற்றும் மோட்டார் கார் கைத்தொழில் ஆகிய துறைகளுக்கான இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கூறினார். இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அண்மையில் எமக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு கூறினார்.

கேள்வி: 20 வது திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளும் நிலையில் அரசாங்கம் இல்லையென்று எதிர்க் கட்சியினர் ஒரு தோற்றத்தை உருவாக்க முயற்சித்து வருவதாகக் கூறப் படுகிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: எந்தவொரு அரசாங்க பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது அரசின் பங்காளிக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரோ தான் 20வது திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக இதுவரை கூறவில்லை. நாம் முதலில் 19ஆம் திருத்தத்தை ஒழிக்க வேண்டும்.

கேள்வி: முன்னாள் நல்லாட்சி அரசாங்கத்தினால் சீரற்ற முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்த பொருளாதாரம் நாட்டைப் பெரிதும் பாதித்தது. தற்போது கொவிட்19 காரணமாக நாட்டின் பொருளாதாரம் மேலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கம் எந்தெந்த திட்டங்களை வைத்திருக்கிறது?

பதில்: நிதி தந்திரோபாயங்கள் சிலவற்றுடன் ரூபாவின் மதிப்பு குறைவதையும் தடுக்க நாம் ஏற்கனவே சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். தற்போதைக்கு ரூபாவின் மதிப்பை நிலையாக வைத்திருக்க முடிகிறது. ஆனால் எதிர்காலத்தில் எதுவும் நடக்கலாம். கொவிட்19 நோய்த் தொற்று பரவலுக்கு இடையே அரசாங்கத்தின் மீண்டு வரும் தந்திரோபாயங்கள் நன்றாக உள்ளன. கொவிட் 19 எமது பொருளாதாரத்தின் மீது பாதிப்பை ஏற்படுத்தும் என்பது எமக்குத் தெரிந்திருந்தது. எனினும் நல்லாட்சி அரசாங்கம் எமது பொருளாதாரத்துக்கு ஏற்படுத்திய பாதிப்பு அதை விட மோசமானது. கொரோனா பாதிப்பு எமக்கு மட்டுமல்ல, முழு உலகத்துக்கும்தான். எமது அண்டை நாடுகள் மோசமாக பாதிக்கப்பட்ட நிலையில், எமது பாதிப்பு மிகவும் மோசமாக மாறவில்லை. எமது பொருளாதாரத்தை முன்னேற்ற புதிய வருடத்துக்காக ஒரு வரவு செலவு திட்டம் தேவை, அதன் மூலம் எமது அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். 2021 இல் அதனை நாம் ஆரம்பிப்போம்.

கேள்வி: மற்றுமொரு கொவிட் 19 அலை உருவாகியுள்ளதே... இந்த நிலையை கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னென்ன?

பதில்: நிலைமையை கட்டுப்படுத்த எடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது. கடந்த கொரோனா கொத்தணிகளில் கடற்படை கொத்தணியே அதிக அளவைக் கொண்டிருந்தது. இம்முறை பிரான்டிக்ஸ் கொத்தணி அதிக அளவில் உள்ளது. பிரான்டிக்ஸ் தொழிலாளர்கள் நாட்டின் அனைத்து இடங்களிலும் இருந்துள்ளனர். அவர்கள் வெவ்வேறு தொழிற்சாலைகளில் வேலை செய்தாலும் அவர்கள் தங்கும் விடுதிகள் ஒரே இடத்தில் அமைந்துள்ளன. இதனால் பரவும் வேகம் அதிகமாக உள்ளது. இந்த கொத்தணியை விரைவில் கட்டுப்படுத்த முடியும் என்று நம்புகின்றேன். இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும் மற்றொரு கொத்தணி வேறொரு இடத்தில் உருவாகலாம். அப்படியானால் இப்போதைய நிலைதான் மீண்டும் உருவாகும். உலகளாவிய ரீதியில் இதே நிலைதான் உள்ளது. எனவே நாம் கொரோனாவுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

கேள்வி: நிலைமையைப் பொறுத்து அரசாங்கம் முழுமையான முடக்கத்துக்குச் செல்லுமா?

பதில்: இந்த நிலையில் நாம் முழுமையான முடக்கத்துக்கு செல்வோம் என்று நான் நினைக்கவில்லை. தற்போது கொரோனாவினால் பீடிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரம் என்ற அளவில் தான் உள்ளது. அவர்களில் பலர் தமது வீடுகளுக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். எனவே உண்மையான தொற்றாளர்கள் 3 ஆயிரம் என்ற அளவில்தான் உள்ளனர். உயிரிழப்பு மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளது. உதாரணத்துக்கு நாம் முழுமையான முடக்கத்துக்கு சென்று ஒரு மாதத்துக்குப் பிறகு மீண்டும் திரும்பும் போது வேறு ஒரு இடத்தில் மற்றொரு கொரோனா கொத்தணி தோன்றக் கூடும். ஆனால் முழுமையான முடக்கத்துக்கு போகும் தேவை ஏற்பட்டால் கட்டாயமாக அதற்கு செல்லத்தான் வேண்டும். நிலைமை அந்த அளவுக்கு மோசமில்லை என்றுதான் சுகாதாரத்துறை கூறுகிறது. பொதுப்போக்குவரத்து துறைக்காக இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் பொதுப் கோக்குவரத்தை கொரோனா காரணமாக நிறுத்த வேண்டுமா என்று சுகாதார அதிகாரிகளிடம் நான் ஒவ்வொரு நாளும் கேட்டு வருகிறேன். ஆனால் மொத்தமாக பொதுப் போக்குவரத்தை நிறுத்த வேண்டிய நிலைமை இப்போது ஏற்படவில்லை என்று சுகாதாரத்துறையினர் கூறி வருகின்றனர்.

'கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை; முழுமையான முடக்கத்துக்கு போகும் அளவுக்கு நிலைமை மோசமடையவில்லை' என்று கூறுகிறார் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம

கேள்வி: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை தொடர்பான உங்கள் கருத்து என்ன?

பதில்: ஆணைக்குழுவின் விசாரணையின் போது மேற்படி தாக்குதலுக்கு பிரதான காரணம் அப்போதைய ஜனாதிபதி, பிரதமர், பொலிஸ், பாதுகாப்புப் படையினர், புலனாய்வு சேவை இடையே கூட்டிணைப்பு இல்லாமையும், நிர்வாக சீர்கேடுமே ஆகும். 19ஆம் திருத்தச் சட்டம் காரணமாகவே இவ்வாறு நடைபெற்றது. மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை சம்பவம் தொடர்பாக விளக்கமாக ஆராய்ந்துள்ளது. இதன் இறுதிக் கட்ட விசாரணையில் பல தகவல்கள் வெளிவரும். சம்பவத்துக்குப் பொறுப்பானவர் யாரோ அவர் சட்டத்துக்கு முன் நிறுத்தப்படுவார். இதில் இரண்டு தரப்பினர் உள்ளனர். முதல் தரப்பு சம்பவத்துடன் தொடர்புடைய தீவிரவாத தரப்பினர். மற்றையது பொறுப்பற்றவாறு நடந்து கொண்ட அரசியல் துறையினர். இவர்கள் இரு தரப்பும் சட்டத்தின் முன் கொண்டு வரப்படுவார்கள்.

கேள்வி: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் மீது விசாரணை நடத்துமாறு நூற்றுக் கணக்கான அரசாங்க எம். பிமார் ஜனாதிபதியை கடிதம் மூலம் கேட்டுள்ளனரே... இது பற்றி விளக்க முடியுமா?

பதில்: எமக்கு கிடைத்த தகவல்கள் அனைத்தும் பொலிஸார் மூலமே கிடைத்தன. ஆனால் அவர்களுக்கு எதிராக எந்த சாட்சியமும் இல்லை என்று ஒரு சில பொலிஸாரே கூறியுள்ளனர். அதேநேரம் சம்பந்தப்பட்டவர் இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்ததாக முதலில் கூறியதும் பொலிஸார்தான்.

கேள்வி: திறைசேரி ஊழல் தொடர்பான குற்றவாளிகளை அரசாங்கம் நீதியின் முன் நிறுத்த தவறி விட்டதாக கூறுகின்றார்கள். உங்கள் கருத்து என்ன?

பதில்: சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். அவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் அவர்களை இலங்கைக்கு அரசாங்கத்தால் கொண்டு வர முடியும். தீவிரவாதிகள் சிலர் தொடர்பான விடயத்தில் நாம் அவர்களை இங்கு கொண்டு வந்துள்ளோம். அது போல குற்றம் இழைத்தவர் யாராக இருப்பினும் அவரை இலங்கைக்கு அழைத்து வந்து அவர் தொடர்பாக விசாரணை நடத்த அரசாங்கத்தால் முடியும்.

கேள்வி: முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் கைது விவகாரம் ஒரு அரசியல் நாடகம் என்று கூறப்படுகிறதே... அதில் ஏதேனும் உண்மை இருக்கின்றதா?

பதில்: அது அரசியல் என்றோ அரசியல் அற்றது என்றோ எவரும் எதனையும் கூற முடியும். ஆனால் தேவாலயங்களிலும், ஹோட்டல்களிலும் குண்டுகள் வெடித்து சுமார் 400 பேர் வரை கொல்லப்பட்டது உண்மை. அவ்வாறு நடந்ததை எவரும் மறுக்க முடியாது. இச்சம்பவம் உண்மையாக இருந்தாலும் அச்சம்பவம் தொடர்பாக எவரும் இப்போது தடுப்புக்காவலில் இல்லை. புலனாய்வு எச்சரிக்கைகளில் தெரியவந்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் சம்பவம் இடம்பெற்று 400 பேர் வரை கொல்லப்பட்ட போதும் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் தடுப்புக்காவலில் வைக்கப்படாத ஒரு நாடு இது. ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சிலர் சாட்சியம் அளிக்கின்றனர். எனினும் இதுவரை எவரும் சம்பவத்துக்கு பொறுப்புக் கூறவில்லை.

உதித்த குமாரசிங்க...✍
தமிழில்: என். ராமலிங்கம்

இலக்கிய உலகில் தனித்துவ அடையாளம் முகில்வண்ணன்

நாடறிந்த எழுத்தாளர், கலாபூசணம், வித்தகர் என்றெல்லாம் எம்மத்தியில் பேசப்படும் 'முகில் வண்ணன்' என்ற புனைபெயருடன் கடந்த 60 வருட காலமாக ஈழத்து இலக்கியவானில் உலாவந்த வேலுப்பிள்ளை சண்முகநாதன் அவர்கள் இன்றில்லை. அவர் மறைந்த 31 வது அந்தியேட்டி தினம் கடந்த 17ம் திகதி கல்முனை, பாண்டிருப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

உலகில் 78 வருடங்கள் வாழ்வாங்கு வாழ்ந்த முகில்வண்ணனோடு நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்புக் கிடைத்தமை அவரது நண்பர்களுக்கு ஒரு பேறாகும். அத்தகைய மனிதநேயம் கொண்ட மனிதர் அவர். எதையும் சிரித்த முகத்துடன் நிதானமாக அணுகும் சுபாவம் அவருக்கு இருந்தது. தற்பெருமையில்லாத, இடாம்பீகமில்லாத, ஆரவாரமில்லாத ஓர் இலக்கியவாதி அவர்.

'முகில்வண்ணன்' தமிழ் வாசகரிடையே இடையீடின்றி நித்தமும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு நாமமாகும். ஈழத்து வட்டாரச் சொல் தேடுவோருக்கும், மண்ணோடு குழைந்த சொற்பிரயோகங்களைத் தேடுவோருக்கும் ஊற்றுக்கண்ணான இலக்கியம் படைத்தவர் அவர்.

பஞ்சபாண்டவர் புகழ் பாடும் வரலாற்று நாயகி குடிகொண்டிருக்கின்ற பாண்டிருப்பிலே பிறந்த முகில்வண்ணன் நாடறிந்த எழுத்தாளராகத் தடம் பதித்தவர். 1960களில் எழுத்துலகில் காலடி எடுத்து வைத்தவர். மென்குணம் படைத்த சிறந்த பேச்சாளர். அனைத்திற்கும் அப்பால் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் ஈடுபாட்டால் ஒரு சீரிய ஆன்மிக கொள்கைவாதியாகவும் திகழ்ந்தார்.

கல்முனை, பாண்டிருப்பைச் சேர்ந்த முகில்வண்ணன் சிறுகதை, கவிதை, நவீனம், கட்டுரை, நாவல் என இலக்கியப்பரப்பில் 30 நூல்களை எழுதி வெளியிட்டவராவார். எழுத்துலகில் 50ஆண்டுகள் எழுதி பொன்விழா கண்ட எழுத்தாளன் எனப் பெயரெடுத்தவர்.

'ஆனந்தக்கண்ணீர்', அவள் ஒரு தமிழ்ப் பெண்', 'இனியும் நான் இராமன்தான்', 'செல்லக்கிளி', 'முருகனருள்', 'பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மனாலயம்', 'பாவைநோன்பு', 'பளிங்கு மாளிகை', 'பொங்கல் கவிதைகள்', 'சிங்கராஜா', 'ஒரு தேடல்', 'கட்டுரைக் களஞ்சியம்', 'நீறுபூத்த நெருப்பு', 'எழுத்துலகில் 50ஆண்டுகள் 'போன்ற காலத்தை வென்ற பல இலக்கியப் படைப்புகளை அவர் வெளியிட்டவராவார்.

அன்று இப்பிரதேசத்தில் கல்முனை 'எலக்ரோன்' என பிரபலமான பெயரோடு இருந்த அவர் தொழிலில் பொறியியலாளராவார். பஞ்சாயக்குழு உபதலைவராகவிருந்தவர். 1966களிலிருந்து எழுதத் தொடங்கியர்.

இலக்கியப் பரப்பில் கலாபூசணம், வித்தகர் எனப் பல விருதுகளுக்கு சொந்தக்காரன். பாண்டிருப்பு திரௌபதை அம்மனாலய தலைவராக சில காலம் இறைபணியாற்றியவர். இலங்கை பிரம்மகுமாரிகள் அமைப்பின் முக்கிய பிரமுகராக இருந்த ஓர் ஆன்மிகவாதி. திருவாசகம், கந்தசஷ்டி போன்ற தமிழ் நூல்களை மொழிபெயர்த்து சிங்களத்தில் எழுதியுள்ளார். இதற்கு இந்து கலாசார திணைக்களம் யாழ்ப்பாணத்தில் 2016 இல் நடத்திய ஸ்ரீ லஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாட்டில் வைத்து பாராட்டிக் கௌரவிக்கப்பட்டவராவார்.

தான் சார்ந்த மண்ணின் வாசனையையும் அங்கு வாழ்கின்ற மனிதர்களையும் அவர்களது பல்வேறு செயல்களையும், உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் இலாவகமாகக் கையாண்டு இலக்கிய உலகிற்கு பல காத்திரமான படைப்புகளைப் படைத்திருக்கிறார் .

'தான் அறிந்த நல்லவற்றை பிறருக்கும் தெரியப்படுத்த வேண்டும். இல்லையேல் முன் ஏழு பிறவிக்கும் பின் ஏழு பிறவிக்கும் பாவங்கள் சூழும் ' என மகாபாரதம் கூறி நிற்கின்றது.

அந்த வகையில் முகில்வண்ணன் ஒருபல்பரிமாண ஆளுமை பொருந்திய மும்மொழிப்புலமை வாய்ந்த ஓர் இலக்கியவாதி. எழுத்துலகில் 60ஆண்டுகள் வலம் வருவது சாமானியமானதொன்றல்ல. அதுவும் இலக்கியத்தில் ஒருதுறையில் மட்டுமல்ல கவிதை, கட்டுரை, கதை, சிறுகதை, நாவல் என்று பல முகங்களில் தன்னைப் பதித்தவர்.

அவரது நாவல் முகம் அவரது பல்வேறுபட்ட இலக்கிய திறமை முகங்களில் ஒன்று மட்டுமே. பொதுமைப் படுத்தப்பட்ட செம்மை சிந்தனை சார்ந்த, சேவை மனப்பாங்குடைய நேர்மைமிகு செயற்பாட்டாளர் உலகில் வலுகுறைவு. இக்குறைபட்டியலுள் அவர் முதன்மை பெறுகிறார்.

இலக்கிய இலஞ்சம் கொடுத்து படைப்புகளை வெளியிட விரும்பாத அவர், தனது பல நூல்களை வெளியீட்டு விழா இல்லாமலே பரப்பியிருக்கிறார். முழுக் குடும்பத்தின் ஆணிவேராகத் திகழ்ந்த அவர் 78 வயதில் காலமானார்.

'தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் பெறப்படும்' என்று வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். நல்ல பிள்ளைகளை இப்பூவுலகிற்களித்து பேரப்பிள்ளையையும் கண்டு இப்பூவுலகை விட்டு பிரியா விடை பெற்றுச் சென்றுள்ளார்.

தேசமான்ய
வி.ரி.சகாதேவராஜா...✍
(உதவிக் கல்விப் பணிப்பாளர், சிரேஷ்ட ஊடகவியலாளர்,காரைதீவு)

கொரோனாவின் பிடியில் இருந்து துரிதமாக மீண்ட சீன தேசம்

கொரோனா என்னும் கொடிய அரக்கனை உலகிற்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியது சீனாதான். இந்த கொரோனாவினால் இன்று உலகமே அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டுள்ளது. ஒரு புறம் மிகப் பெரிய வல்லரசு நாடும் கூட கொரோனாவின் பிடியில் சிக்கி சீரழிந்து வருகின்றது. ஆனால் சீனாவிலிருந்துதான் கொரோனா முதன் முதலாக பரவியது என்ற நிலையில், மூன்றாவது காலாண்டில் அந்நாட்டின்வளர்ச்சி அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதாரமாக விளங்கும் சீனா, தற்போது தனது பொருளாதார வளர்ச்சியினை மிக தீவிரமாக முடக்கி விட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த காலாண்டினை விட மூன்றாவது காலாண்டில் வளர்ச்சி சற்று வலுவானதாக இருக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. ஏனெனில் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதைக்கு திரும்பியுள்ளது.

மால்கள் திறக்கப்பட்டுள்ளன. நுகர்வோர் பழைய நிலைக்கு திரும்பியுள்ளனர். முக்கிய வர்த்தக நிலையங்கள் வணிகத்திற்காக திறக்கப்பட்டுளன. இது இந்த ஆண்டு தொடக்கத்தில் காணப்பட்ட வரலாறு காணாத சாதனையை வீழ்த்தி வளர்ச்சி கண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் நிபுணர்கள் உலகின் மிகப் பெரிய பொருளாதாரமான இது கடந்த ஜூலை செப்டம்பர் காலாண்டில் 5.2% வளர்ச்சியினை பதிவு செய்யலாம் என்றும் கணிக்கப்பட்டது.

ஆனால் மூன்றாவது காலாண்டில் சீனா 4.9% வளர்ச்சியினை பதிவு செய்துள்ளது. இது நிபுணர்கள் கணித்த வளர்ச்சி வீதத்தினை விட சற்று குறைவானாலும், இரண்டாவது காலாண்டில் 3.2% தான் வளர்ச்சி கண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ஆக இதனுடன் ஒப்பிடும் போது, மூன்றாவது காலாண்டில் வளர்ச்சி மிக வேகமாக அதிகரித்துள்ளது எனலாம்.

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதத்தில் சீன பொருளாதாரம் 6.8% அளவு வீழ்ச்சி கண்டது. அப்போது கொரோனாவின் காரணமாக நாடு முழுவதும் உள்ள தொழில் சாலைகள் மற்றும் வணிக வளாகங்கள், உற்பத்தி ஆலைகள் என பொருளாதார வளர்ச்சி குறித்ததான நடவடிக்கைகள் அனைத்தும் முடங்கின. ஆக அக்காலகட்டத்தில் வளர்ச்சி வீதம் 1992ம் ஆண்டில் பதிவு செய்த வளர்ச்சியினை விட மோசமான சரிவினைக் கண்டது. இது 28 ஆண்டுகளுக்கு பிறகு ஏற்பட்ட மோசமான சரிவு எனலாம்.

கொரோனாவின் பிடியில் இருந்து மிக வேகமாக மீண்ட சீனா தற்போது வளர்ச்சி பாதையில் உள்ள ஒரே நாடாக உள்ளது. ஆனால் மற்ற நாடுகள் இன்றளவிலும் கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கித் தவித்து வருகின்றன. அதிலும் இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகள் மோசமான பொருளாதார சரிவினை கண்டு வருகின்றன. இனியாவது இந்த சரிவில் இருந்து மீளுமா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

முற்றுப்புள்ளி வைத்தார்...

இதனையடுத்து அவரது அறிக்கையை தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்த விஜய் சேதுபதி, நன்றி வணக்கம் என பதிவிட்டிருந்தார இந்த நிலையில், சென்னையில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த விஜய்சேதுபதி, நன்றி வணக்கம் என்றால் எல்லாம் முடிந்து விட்டதாகவே அர்த்தமென தெரிவித்தார். அதற்கு முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

உறுப்பினர் பதவியிலிருந்து...

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, சட்டத்தரணி வி.மணிவண்ணனுக்கு யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலகருக்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அனுப்பிய கடிதத்தில், “அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற அரசியல் இயக்கத்துடன் இணைந்து பயணிக்கின்றது.

அதனடிப்படையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சிபாரிசின் அடிப்படையில் 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் விஸ்வலிங்கம் மணிவண்ணன், எமது கட்சியின் நியமன உறுப்பினராக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு நியமிக்கப்பட்டார்.

எனினும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஒழுக்காற்று நடவடிக்கையால் விஸ்வலிங்கம் மணிவண்ணன், அந்தக் கட்சியிலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டுள்ளார்.

அதனால் அவரை யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்புறுப்புரிமையிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரிஷாத்துக்கு பாராளுமன்றம்...

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் தலைமையில் கூடியது.

தினப் பணிகளை தொடர்ந்து ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்த லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., ரிஷாட் பதியுதீன் எம்.பிக்கு பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க உரிமையுள்ளது. அதற்கு சபாநாயகர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று கூறினார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இது தொடர்பில் கோரிக்கை முன்வைக்குமாறு கோரினார்.

நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு...

சிறைச்சாலைக்கு வரும் கைதிகள் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன், கொழும்பு மெகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்க வேண்டும்.

எனினும் அவர் கொழும்பு சிறைச்சாலைகளிலுள்ள சிறைக்கைதிகள் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக நீர்கொழும்பு பள்ளஞ்சேனை சிறைச்சாலைக்கே அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

அதற்கமைவாகவே பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன், அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய மாகாண உதவி ...

உதவி ஆசிரியர்களினால் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானிடமும் மத்திய மாகாண தமிழ் கல்வி ஒருங்கிணைப்பாளர் கணபதி கனகராஜிடமும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இக் கோரிக்கைகளின் விளைவாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், மத்திய மாகாண ஆளுநருடன் கடந்த மாத முற்பகுதியில் இது தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார். இதனைத் தொடர்ந்து மத்திய மாகாண ஆசிரிய உதவியாளர்களின் நியமனங்கள் எதிர்வரும் 23ஆம் திகதி வழங்கப்படுமென மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே நேற்று (20) காலை இராஜாங்க அமைச்சரிடம் தொலைபேசியூடாக அறிவித்துள்ளார்.

இதனையடுத்தே இராஜாங்க அமைச்சர் அந்த அறிவிப்பையும் நேற்று விடுத்துள்ளார்.

இதற்காண சகல நடவடிக்கைகளையும் வெகுவிரைவில் பூர்த்திசெய்யப்படுமெனவும் அவர் அறிவித்தார் .

மேலும் ஐந்து பொலிஸ் பிரிவுகளுக்கு...

வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளதாக குளியாபிட்டி சுகாதார அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் உட்பட குளியாபிட்டி மருத்துவ அலுவலக பகுதியில் மொத்தமாக கோவிட் 19 ஆல் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே உடன் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரிஷாத் செய்த மனு மீதான...

குமுதினி விக்கிரமசிங்க மற்றும் சோபித ராஜ கருண ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, மனுதாரரை கைது செய்யுமாறு அறிவுறுத்தல் வழங்க சட்ட மாஅதிபருக்கு அதிகாரம் இல்லையென நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் தன்னுடைய கட்சிக்காரர் தற்போது கைது செய்யப்பட்டுள்ள காரணத்தால் மனுவை தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்துவதா? இல்லையா? என தனக்கு இதுவரையில் எவ்வித அறிவுத்தலும் வரவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார். அதன்படி மனு மீதான விசாரணையை நவம்பவர் 06 ஆம் திகதி வரையில் ஒத்திவைத்ததுடன் அன்றைய தினம் மனுதாரர் சார்பான உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வின்... 03ஆம் பக்க தொடர்...

பாதிக்கபட்டவர்களினால் கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

அதேபோன்று, கடந்த காலங்களில் அனுபவத்தின் அடிப்படையில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டு வடமாகாணத்தின் 12 கல்வி வலயங்களில் கடமையாற்றி வரும் அதிகாரிகள், இலங்கை கல்வி நிர்வாகச் சேவை தரம் 03 (SLEAS 3) இனுள் உள்வாங்கப்படுவதற்கான நேர்காணல் 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற போதிலும் இதுவரை உள்வாங்கப்படவில்லை.

இந்நிலையில் தங்களுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றித் தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளினால் கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டிருந்தது.

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை செழுமைப்படுத்துவற்கான உட்கட்டமைப்பு உபகரணங்களுக்கு உதவியளிப்பதற்கு ஒஸ்ரியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளும் லைக்கா போன்ற தனியார் நிறுவனங்களும் முன்வந்துள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத் தரப்பிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய அனுமதிகளை பெற்றுத் தருமாறு யாழ். மருத்துவ பீடத்தின் துறைத் தலைவர் வைத்திய கலாநிதி எஸ். ரவிராஜ் கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை முன் வைத்திருக்கறார்.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கொண்டு செல்லப்பட்ட கோரிக்கைகளை சாதகமாக பரிசீலிப்பதாக உறுதியளித்த கல்வி அமைச்சர், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தேவையான அறிவுறுத்தல்களையும் வழங்கினார்.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு... 03ஆம் பக்க தொடர்...

நிதியத்திற்காக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் 07ஆயிரத்து 500 ஊழியர்கள் பங்களிப்பு செய்துள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க, பொதுமேலாளர் திலின விஜேதுங்க, முன்னாள் பொது மேலாளர் ஆர்.எச்.ருவினஸ், மேலதிக பொதுமேலாளர் (மனிதவள முகாமைத்துவம்) ஜீ.கே.இத்தமல்கொட உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு ஆளுநர் வெளியிட்ட... 03ஆம் பக்க தொடர்...

பணியல்ல எனவும் கூறியுள்ளார். இந்த செய்தி பல ஊடகங்களில் வெளியாகியுள்ளது. இந்த செய்தி எனது சிறப்புரிமையை மீறும் வகையில் அமைந்துள்ளது. ஆளுனருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையெடுக்க வேண்டும்.

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலகத்திற்கு உரித்தான மயிலத்தமடு, மாதவனை பிரசேங்களில் மகாவலி பி பிரிவில் சில காணிகள் உள்ளன. இதில் 02 இலட்சம் பசுக்கள் மேய்க்கப்படுகின்றன.

தினமும் 17ஆயிரம் லீட்டர் பால் உற்பத்தி இங்கு நடைபெறுகிறது. கிராம சேவகர், பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர் ஆகியோரை சந்தித்தோம். இந்த பிரச்சினை தொடர்பில் பேசியதால் அரசாங்க அதிபரையும் மாற்றியுள்ளனர். மகாவலி திட்டத்திற்குப் பொறுப்பான பணிப்பாளரையும் சந்திதோம்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடமும் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளோம்.

20ஆயிரம் ஏக்கர் நிலத்தை வர்த்தமானியில் பிரசுரித்து ஐந்து ஐந்து ஏக்கர் மாடு மேய்ச்சலுக்காக பிரித்துக் கொடுக்கவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுனர் கூறியுள்ளார். ஐந்து ஏக்கர் என்ற அடிப்படையில் பிரித்துக்கொடுப்பதால் அவை மேயும் மாடுகளுக்குத் தெரியுமா?. எனது சிறப்புரிமை தொடர்பில் பொய்களை கூறுகின்றனர். நான் பாராளுமன்றத்தில் சிங்கள மொழியிலும் உரையாற்றி இனவாதியல்ல என்பதை உணர்த்தியுள்ளேன்.

சிங்கள மக்களுக்கு தவறான செய்திகள் செல்லக்கூடும். குறிப்பாக தமிழ் எம்.பிக்கள் இனங்கள் அடிப்படையில் காணிகளை பிரித்துக்கொடுக்குமாறு கூறுவதாக செய்திகள் செல்லக்கூடும் என்றார்.

மாகந்துர மதுஷின் கொலையின்... 03ஆம் பக்க தொடர்...

தமது உரையின் போது, மாகந்துர மதுஷை நாட்டிற்கு கொண்டுவந்த நேரம் நானே சட்ட ஒழுங்கு பிரதி அமைச்சராக கடமையாற்றினேன். ரஞ்சித் மத்தும பண்டாரவே விடயத்திற்கு பொறுப்பான அமைச்சராக கடமையாற்றினார். மாகந்துர மதுஷ் நாட்டிற்கு வரவில்லை, நாமே அவரை கொண்டுவந்தோம். சர்வதேச பொலிஸின் உதவியுடன் டுபாய் நாட்டில் இருந்து கைது செய்து நாட்டிற்கு கொண்டுவந்தோம். இப்போது எமக்குள்ள பிரச்சினை மாகந்துர மதுஷின் மரணம் அல்ல. இந்த கொலை உண்மையில் ஒரு நாடகமாகும். ஆனால் இந்த நாடகத்தை சரியாக பொலிஸார் இயக்கவில்லை என்பதே உண்மையாகும். இதனை விட அழகாக இந்த நாடகத்தை இயக்கியிருக்க முடியும். ஆனால் எமக்குள்ள பிரச்சினை அதுவல்ல. மாகந்துர மதுஷ் கொலை செய்யப்பட்டதன் மூலம் இந்த நாட்டில் குடு வியாபாரிகள், அரசியல் தொடர்புகளை கொண்டவர்கள், மற்றும் அரசியல் வாதிகள் பெயர்கள் மூடி மறைக்கப்பட்டுவிட்டன. மாகந்துர மதுஷை வைத்து இயக்கியவர்கள் பலர் பெயர்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளன.

காண்பித்து ரிஷாத்... 03ஆம் பக்க தொடர்...

ரிஷாத் என்ற ஒரு பெயரைச் சுற்றியே இயங்குகின்றது. நாட்டுத்தலைவரின் பெயர் உச்சரிக்கப்படுவதைவிடவும் ரிஷாத் பதியுதீன் என்ற பெயரே அதிகம் உச்சரிக்கப்படுகின்றது. ரிஷாத் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். அவர் கைதானாலும் பாராளுமன்றம் வருவதற்கான உரிமை உள்ளது. அதற்கான கோரிக்கையையும் அவர் முன்வைத்தார். அதற்கான அனுமதியை சபாநாயகர் வழங்கியபோதும் றிஷாத்துக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமெனக்கூறி பாராளுமன்றம் வருவதற்கான அவரின் உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் தவறான முடிவுகள் வெளிவருவதனையும் இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன் என்றார். இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோரும் ரிஷாட் பதியுதீனை பாராளுமன்றத்திற்கு அழைத்துவர நடவடிக்கையெடுக்கப்படுமா? என சபாநாயகரிடம் கேள்வியெழுப்பியிருந்தனர். இதற்கு பதிலளித்திருந்த சபாநாயகர், கோரிக்கை விடுக்கப்பட்டால் அதற்கு நடவடிக்கையெடுப்பதாக பதிலளித்திருந்தார்.

தென் கொரிய பிரதமருக்கு... 03ஆம் பக்க தொடர்...

இந்த பேச்சுவார்த்தையின் போது முதலீடு மற்றும் சுற்றுலா ஆகியவை தொடர்பாகவும் இருநாட்டு தலைவர்களும் கலந்துரையாடியதாக பிரதமரின் ஊடக பிரிவு அறிவித்துள்ளது. அத்தோடு கொரோனா நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தபின், பிரதமர் சுங் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ள வேண்டுமென்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார்.

மினுவாங்கொட கொரோனா;... 03ஆம் பக்க தொடர்...

தொற்றுக்குள்ளான 2,215 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். மேலும் இந்தத் தொற்றிலிருந்து இதுவரையில் 3 ஆயிரத்து 457 பேர் குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

கொரோனா தொற்று சந்தேகத்தில் 297 பேர் தொடர்ந்தும் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன் கொரோனா தொற்றினால் இலங்கையில் இதுவரையில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தென் மாகாணத்தில் திடீர்... 03ஆம் பக்க தொடர்...

காலாவதியான பொருட்களை வைத்திருந்தமை, கூடியவிலைக்கு விற்பனை செய்தமை, அத்தியவசிய பொருட்களை பதுக்கி வைத்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தன. இவர்களுள் குற்றவாளியாக காணப்பட்டவர்களிடம் இருந்தே மேற்படி அபராத தொகை அறவிடப்பட்டுள்ளது.

எந்தவொரு இந்தியருக்கும் இலங்கை... 03ஆம் பக்க தொடர்...

சட்டங்களைளும் பின்பற்றாது நடந்துக்கொண்டுள்ளனர். இந்த சம்பவத்துக்கு அரசாங்கம்தான் காரணமென்பதை கைத்தொழில் அமைச்சர் ஏற்கிறாரா? எனக் கேள்வியெழுப்பினார்.

பிரெண்டிக்ஸ் நிறுவன முதலீட்டுச் சபையின் கீழ்வரும் ஒரு நிறுவனமாகும். முதலீட்டுச் சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் கைத்தொழில் அமைச்சின் கீழ் வராது.

கைத்தொழில் செய்ற்பாடுகள் அல்லது வேறு செயற்பாடுகளுக்கான நிறுவனமொன்று வெளிநாட்டிலிருந்து எவரும் அழைத்துவரப்பட்டால் அந்தநிறுவனம் முதலீட்டுச் சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தால் முதலீட்டுச் சபையின் அனுமதியை பெற்றிருக்க வேண்டும். வேறு நிறுவனங்கள் என்றால், கைத்தொழில் அமைச்சின் அனுமதியை பெற்றிருக்க வேண்டும்.

கைத்தொழில் அமைச்சின் அதிகாரிகள் மூலம் ஆய்வுக்கு உட்படுத்தியதில் எந்தவொரு வெளிநாட்டினரும் பணியாளராகவோ தொழில்நுட்ப அதிகாரியாகவோ இலங்கைக்குவர அனுமதியளிக்கப்பட்டி ருக்கவில்லையென்பதுடன், அவ்வாறான கோரிக்கைகளும் விடுக்கப்பட்டிருக்கவில்லை. முதலீட்டு சபையின் அதிகாரிகளிடம் வினவிய போது, கொவிட் 19 பரவலின் பின்னர் இந்திய நிறுவனங்களின் ஊழியர்களுக்கு இங்குவர அனுமதியளிக்கப் படவில்லையென கூறினர்.

குடிவரவு – குடியகல்வு திணைக்களத்திடமும் இதுதொடர்பில் நான் கோரிக்கை விடுத்து ஆராய்ந்தமையின் பிரகாரம் இந்தியர்களுக்கு இங்குவர அனுமதியளிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த விடயத்திற்கு பொறுப்பானவர்களிடம்தான் கேள்விகளை கேட்க வேண்டும் என்றார்.

ஜனாதிபதியின் ஒரு இலட்சம்... 03ஆம் பக்க தொடர்...

இனங்காணப்பட்டுள்ள 25 துறைகளின் கீழ் 06 மாதங்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. தேசிய பயிலுனர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபை பயிற்சி திட்டத்திற்கு பொறுப்பாகவுள்ளது.

பயிற்சியை வெற்றிகரமாக நிறைவுசெய்யும் பயிலுனர்களுக்கு NVQ III தரச் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தின் போது பயிலுனர்களுக்கு 22,500 ரூபா மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்படும். ஒரு இலட்சம் தொழில் வழங்கும் திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ‘வறுமையற்ற இலங்கை’ என்ற எண்ணக்கருவிற்கு ஏற்ப திட்டமிடப்பட்ட திட்டமாகும். அது பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. குறைந்த வருமானம் பெறுவோரின் வருமானத்தை அதிகரித்தல், சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்தி வறுமையை ஒழித்தல், வருமான ஏற்றத்தாழ்வை முடியுமானளவு சமப்படுத்தி மக்கள் மைய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

சுகாதார நடைமுறைகளை...

ஒரு சட்டமும் பின்பற்றப்படுகிறதா? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வியெழுப்பினார். எதிர்க்கட்சித் தலைவரின் கேள்வியால் ஆளும் எதிர்தரப்புகளுக்கும் இடையில் சபையில் கடும் வாக்குவாதங்கள் ஏற்பட்டன. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 பத்து மணிக்கு கூடியது. இதன்போது விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,

சுகாதார அமைச்சர் கடந்த 15ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தார். வர்த்தமானியின் பிரகாரம் அனைத்து சந்தர்ப்பங்களில் முகக்கவசங்கள் அணிந்திருக்க வேண்டும் என்பதுடன், இருவருக்கு இடையிலான சமூக இடைவெளி குறைந்தது ஒரு மீற்றராவது பேணப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தை மீறுவது என்பது நோய் தடுப்பு சட்டத்தின் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ஆறுமாதகாலம் வரை சிறை தண்டனையும் 10,000 ரூபாவுக்கு அதிகமாகத தண்டப்பணத்தை விதிக்கவும் முடியுமென கூறப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் கூடியுள்ள இந்த சந்தர்ப்பத்தில் சமூக இடைவெளியை பேணுதல் மற்றும் முகக்கவசங்களை அணியும் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ஆறுமாதகாலம் வரை சிறை தண்டனையும் 10,000 ரூபாவுக்கு அதிகமாகத தண்டப்பணத்தை விதிக்கவும் முடியுமென கூறப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் கூடியுள்ள இந்த சந்தர்ப்பத்தில் சமூக இடைவெளியை பேணுதல் மற்றும் முகக்கவசங்களை அணியும் சுகாதார வழிகாட்டல்களை எவரும் பின்பற்றவில்லை. நாட்டில் சட்டங்களை உருவாக்கும் உயரிய சபையில் உருவாக்கப்பட்ட சட்டங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார வழிக்காட்டல்களை பின்பற்றவில்லை. இங்கு சட்டம் மீறப்படுகிறது. சபாநாயகர்கூட முகக்கவசத்தை அணியாதுள்ளார். சபாநாயகரும் சட்டத்தை மீறுகிறார். உருவாக்கப்பட்டுள்ள சட்டங்கள் பாராளுமன்றத்தில் ஒருவிதத்திலும் பாராளுமன்றத்துக்கு வெளியில் ஒருவிதத்திலும் நடைமுறைப்படுத்தப்படுகிறதா?.

சுற்றுநிரூபத்தில் உள்ள வழிகாட்டல்களின் பிரகாரமும் சமூக இடைவெளியை பேணும் வகையிலும் சபையில் கதிரைகள் ஒழுங்கமைக்கப்பட்டு பாராளுமன்ற செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வோம் என்றார்.

சஜித் பிரேமதாசவின் கேள்விக்கு அரச தரப்பின் சார்பில் பதிலளித்த அமைச்சர் தினேஸ் குணவர்தன, பாராளுமன்றம் கூடுவதற்கு முன்பு சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர் கூட்டம் நடைபெற்றது.

இதில் எதிர்க்கட்சித் தலைவர்களை போன்று ஆளுங்கட்சி பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இதன்போது பாராளுமன்ற செயற்பாடுகளை எவ்வாறு கொண்டுசெல்வதென தீர்மானிக்கப்பட்டது. இதற்கு இணக்கத்தை வெளியிட்ட பின்னர்தான் கட்சித் தலைவர் கூட்டம் முடிவடைந்தது என்பதை எதிர்க்கட்சித் தலைவருக்கு தெளிவுப்படுத்த விரும்புகிறேன் என்றார்.

கூடுவதற்கு எவ்வித தடையுமில்லை...

பவித்ரா வன்னியாராச்சி கருத்து வெளியிடுகையில்,

எதிர்க்கட்சித் தலைவர் சுகாதார வழிக்காட்டல்கள் அடங்கிய வர்த்தமானியை முறையாக படிக்க வேண்டும். பொது இடங்கள் எவையென வர்த்தமானியில் தெளிவாக வரையறுத்துள்ளோம். அதில் பாராளுமன்றம் அடங்காது என தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 பத்து மணிக்கு கூடியது. இதன்போது விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சுகாதார அமைச்சர் கடந்த 15ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தார். வர்த்தமானியின் பிரகாரம் அனைத்து சந்தர்ப்பங்களில் முகக்கவசங்கள் அணிந்திருக்க வேண்டும் என்பதுடன், இருவருக்கு இடையிலான சமூக இடைவெளி குறைந்தது ஒரு மீற்றராவது பேணப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தை மீறுவது என்பது நோய் தடுப்பு சட்டத்தின் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ஆறுமாதகாலம் வரை சிறை தண்டனையும் 10,000 ரூபாவுக்கு அதிகமாகத தண்டப்பணத்தை விதிக்கவும் முடியுமென கூறப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் கூடியுள்ள இந்த சந்தர்ப்பத்தில் சமூக இடைவெளியை பேணுதல் மற்றும் முகக்கவசங்களை அணியும் சுகாதார வழிகாட்டல்களை எவரும் பின்பற்றவில்லை. நாட்டில் சட்டங்களை உருவாக்கும் உயரிய சபையில் உருவாக்கப்பட்ட சட்டங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார வழிக்காட்டல்களை பின்பற்றவில்லை. இங்கு சட்டம் மீறப்படுகிறது. சபாநாயகர்கூட முகக்கவசத்தை அணியாதுள்ளார். சபாநாயகரும் சட்டத்தை மீறுகிறார். உருவாக்கப்பட்டுள்ள சட்டங்கள் பாராளுமன்றத்தில் ஒருவிதத்திலும் பாராளுமன்றத்துக்கு வெளியில் ஒருவிதத்திலும் நடைமுறைப்படுத்தப்படுகிறதா?.

சுற்றுநிரூபத்தில் உள்ள வழிகாட்டல்களின் பிரகாரமும் சமூக இடைவெளியை பேணும் வகையிலும் சபையில் கதிரைகள் ஒழுங்கமைக்கப்பட்டு பாராளுமன்ற செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வோம் என்றார். சஜித் பிரேமதாசவின் கேள்விக்கு அரச தரப்பின் சார்பில் பதிலளித்த அமைச்சர் தினேஸ் குணவர்தன, பாராளுமன்றம் கூடுவதற்கு முன்பு சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர் கூட்டம் நடைபெற்றது. இதில் எதிர்க்கட்சித் தலைவர்களை போன்று ஆளுங்கட்சி பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இதன்போது பாராளுமன்ற செயற்பாடுகளை எவ்வாறு கொண்டுசெல்வதென தீர்மானிக்கப்பட்டது. இதற்கு இணக்கத்தை வெளியிட்ட பின்னர்தான் கட்சித் தலைவர் கூட்டம் முடிவடைந்தது என்பதை எதிர்க்கட்சித் தலைவருக்கு தெளிவுப்படுத்த விரும்புகிறேன் என்றார். துறைசார் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கருத்து வெளியிடுகையில், எதிர்க்கட்சித் தலைவர் சுகாதார வழிக்காட்டல்கள் அடங்கிய வர்த்தமானியை முறையாக படிக்க வேண்டும். பொது இடங்கள் எவையென வர்த்தமானியில் தெளிவாக வரையறுத்துள்ளோம். அதில் பாராளுமன்றம் அடங்காது. இதன்போது குறிக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முழுநாட்டின் முன்பும் உலகத்தின் முன்பும் அவர் கூறுவதாவது, பாராளுமன்றத்திற்குள் ஒரு சட்டமும் பாராளுமன்றத்திற்கு வெளியில் ஒரு சட்டமும் உள்ளதென்பதையா?. இது ஒரு புதிரான சட்டமாகவுள்ளதே.

இதன்போது எழுந்த அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, பாராளுமன்றத்திற்குள் ஒரு சட்டமும் பாராளுமன்றத்திற்கு வெளியில் ஒரு சட்டமும் உள்ளதென நான் கூறவில்லை. வர்த்தமானியில் பொது இடங்களை தெளிவாக அடையாளப்படுத்தியுள்ளோம் என்றே கூறினேன். பொது இடங்களுக்குள் பாராளுமன்றம் அடங்காது என்றார்.

மீண்டும் எழுந்த சஜித் பிரேமதாச, எனது கோரிக்கையின் சபாநாயகர் முகக்கவசம் அணிந்தமையையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் அறிவிப்பின் பிரகாரம் பாராளுமன்றில் முகக்கவசங்களை அணியாது இருக்க முடியுமா? எனக் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், அது உங்கள் விருப்பம். அணியாமலும் உரையாற்றலாம் என்றார்.

20ஆவது திருத்தம்...

பாராளுமன்றத்தில் நேற்று அறிவித்தார். 20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் நான்கு சரத்துக்களை நிறைவேற்ற சரத்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனவும் உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. அவற்றில் இரு சரத்துக்களை குழு நிலையில் திருத்தி மாற்றம் செய்ய முடியுமெனவும் மற்றொரு சரத்தை உச்ச நீதிமன்ற வியாக்கியானத்திற்கமைய திருத்தி நிறைவேற்ற முடியுமெனவும் உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

20ஆவது திருத்தத்தின் ஏனைய சரத்துக்களில் அரசியலமைப்பின் 82 (1) பிரிவிற்குட்பட்டதெனவும் இவற்றை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியுமெனவும் உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் அறிவிததார். பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது. முதல் அம்சமாக சபாநாயகரின் அறிவிப்பு இடம்பெற்றது. 20ஆவது திருத்தம் தொடர்பான உச்ச நீதிமன்ற வியாக்கியானம் எனக்குக் கிடைத்துள்ளது. இதனை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன். இந்த சட்டமூலம் அரசியமைப்பின் 82 (1) யாப்பிற்கு உட்பட்டது.

இதனை விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும்.ஆனால் சட்டமூலத்தின் 3,5,14 மற்றும் 22 ஆம் சரத்துக்களை அதே நிலையில் நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு மேற்கொண்டு நிறைவேற்ற வேண்டும்

கொவிட் -19 அச்சம்; மில்லகாமுல , கோணட்டுவல கிராமம் முடக்கம்

கொரோனா தொற்றாளர்கள் இருவர் அடையாளம், 35 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தல்

கம்பளை நிருபர்

கம்பளை, தொலுவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட மில்லகாமுல – கோணட்டுவல கிராமம் நேற்றுமுதல் முடக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றாளர்கள் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தும் நோக்கிலேயே சுகாதார அதிகாரிகளால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மில்லகாமுல – கோணட்டுவல கிராமத்தில் 425 குடும்பங்கள் வாழ்கின்றன, இதில் 35 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

மில்லகாமுல – கோணட்டுவல கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் அங்கிருந்து எவரும் வெளிப்பகுதிக்கு செல்வதற்கும், வெளியில் இருப்பவர்கள் அங்கு வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா, வெயாங்கொட பகுதியிலுள்ள விகாரையொன்றில் தொழில்செய்த நிலையில் கடந்த 3 ஆம் திகதி இருவர் மேற்படி கிராமத்திலுள்ள தமது வீடுகளுக்கு வந்துள்ளனர்.

இவ்விருவரிடமும் கடந்த 16 ஆம் திகதி பீ.சீ.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன. வைரஸ் தொற்று உறுதியானது, இதனையடுத்து அவர் மாத்தளை, லக்கல பல்லேகம வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

பலாங்கொடை வலவ தோட்ட தொழிலாளர்கள் பணி நிறுத்தம்

ஆபத்தான மரங்களை அகற்றும் வரை பணிநிறுத்தம் தொடரும் என எச்சரிக்கை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை வளவ தோட்டத்தின் கெபொக் பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ப் பணிநிறுத்தமொன்றை மேற்கொண்டுள்ளனர். கடந்தவாரம் இத்தோட்ட பிரிவில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த போது மரமொன்று முறிந்து விழுந்ததில் இரண்டு பெண் தொழிலாளர்கள் பலியானதையடுத்தே இவர்கள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த இரண்டு அப்பாவி தொழிலாளர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் அனைத்து அரசியல் தொழிற்சங்க தலைவர்கள், தோட்டத் தொழிலாளர்கள், தோட்டப் பிரிவு தலைவர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் என அனைத்து தரப்பினரும் இதுதொடர்பில் முறைப்பாடுகளை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பில் தோட்ட நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவதானத்துக்குரிய மரங்களை இனங்கண்டு அவற்றை அகற்றி விட தோட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்த ஆபத்தான மரங்களை வெட்டி ஒதுக்கும் வரை தமது வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும் என தொழிலாளர்கள் உறுதியாக தெரிவித்தனர்.

மாத்தளை மாவட்டத்தில் 5000 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவுபயிர்ச்செய்கை

மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளை மாவட்டத்தில் பெரும் போகத்தில் 5000 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவுபயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையச் செய்யும் அரசின் கொள்கையின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கமைய உப உணவுச் செய்கை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையில் மெதரட விவசாய அமைப்பின் ஏற்பாட்டில் மாத்தளை மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச் செய்கையில் முதற்கட்டமாக தம்புள்ள,கலேவெல,சீகிரியா,தேவஹுவ,நாவுல,லக்கல, வில்கமுவ,யடவத்த ஆகிய பிரதேசங்களில் 5000 ஏக்கர் விவசாய நிலங்களில் சோளம்,எள்ளு,மிளகாய் ஆகிய பயிர்கள் இந்த பெரும் போகத்தின் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த பயிர்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் 5000 பேருக்கு விவசாயத்துக்கு தேவையான விதை, உரம் என்பன மானிய அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதோடு, சலுகை அடிப்படையிலும் வங்கிக் கடனும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உப உணவுப் பயிர் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு மூன்று இலட்சம் ரூபாய் வரையிலான கடன் குறைந்த வட்டியில் வங்கிகள் ஊடாக வழங்கப்பெற்று கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அறுவடைசெய்யும் விவசாய உற்பத்திகளை கூடிய விலைக்கு சந்தைப்படுத்துவதற்கான உரிய வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதாக மெதரடகொவி திட்டதம்புள்ள காரியாலயத்தின் அதிகாரி திலகே தெரிவித்தார்.

கண்டி மாநகரசபை எல்லைக்குள்

ஆபத்தான கட்டிடங்கள் தொடர்பான கோவைகள் மாயம்

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி மாநகரசபை எல்லைக்குள் அடையாளம் காணப்பட்ட மிகவும் ஆபத்தான 14 கட்டிடங்களில் ஏழு கோவை (பையில்) கள் காணாமல் போயுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

ஆபத்தான கட்டிடங்கள் குறித்து ஆராய மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே நியமித்த 25 பேர் கொண்ட குழுவின் அறிக்கையின் உள்ளடக்கங்களை ஆய்வு செய்வதற்காக ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (19) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கண்டி நகரத்தில் ஆபத்தான கட்டிடங்கள் அதிகாரிகளின் ஒப்புதலைப் பெற்றபின்னரே கட்டப்பட்டுள்ளது. அவ்வாறு அனுமதியுடன் கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் ஆவணங்கள் அவசியம் என்பதனால் காணாமல் போன கோவைகள் தொடர்பில் அதற்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டறிவது மிக முக்கியம்.

குறித்த கட்டிடங்களுக்கான அனுமதி சான்றிதழ்களைப் பெற்ற பிறகு, அனுமதியின்றி சட்டவிரோதமாக நிர்மாணப்பணிகள் இடம்பெற்றிருப்பதை காணமுடிகின்றது. ஆய்வுக்குழு அறிக்கை மூலம் எதிர்காலத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்புதல்களை வழங்குவதில் எந்தவிதமான தளர்வான கொள்கையும் இருக்கக்கூடாது. மாநகரசபையின் சட்டத்தில் குறைபாடுகள் இருந்தால், அவற்றை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்ப்பில் ஆளுநர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் :

தற்போது அடையாளம் காணப்பட்டிருக்கும் ஆபத்தான கட்டிடங்களின் பாதுகாப்பு குறித்து உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்தவகையில் அதிக ஆபத்துள்ள கட்டிடங்களின் உரிமையாளர்களை வரவழைத்து அவற்றை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் ஆர்வம் காட்டாவிட்டால் அவை இடிக்கப்பட வேண்டும்.

முறையான விசாரணையை நடத்தி நகரத்தில் பாதிக்கப்படக்கூடிய அனைத்து கட்டிடங்கள் குறித்த அறிக்கையையும் தயாரிக்க வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளதுடன் குறித்த விடயங்கள் தொடர்பில் ஒரு சுயாதீன குழுவை நியமிக்கவும் சபை முடிவு செய்துள்ளது என அவர் தெரிவித்தார்.

கண்டி மாநகர சபையின் புதிய ஆணையாளராக அமில நவரத்ண நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமன கடிதத்தை மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே வழங்குவதை படத்தில் காணலாம்.

(படம்: கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)

அயோத்தி இராமர் ஆலயத்திற்கு சீதையம்மன் ஆலயத்தில் இருந்து புனித கல் அனுப்பிவைப்பு

நுவரெலியா தினகரன் நிருபர்

அயோத்தியில் அமைக்கப்படும் ஸ்ரீ இராமர் ஆலயத்திற்கு சீதையம்மன் ஆலயத்தில் இருந்து புனித கல் அனுப்பி வைக்கப்படுகின்றது.

இந்தியாவின் அயோத்தியில் பிரதமர் மோடி தலைமையில் அமைக்கப்பட்டுவருகின்ற ஸ்ரீ இராமபிரானின் ஆலயத்திற்கு இலங்கையின் சீதையம்மன் ஆலயத்தில் இருந்து புனித கல்லொன்று அயோத்திக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளை நுவரெலியா ஹாவாஎலிய ஸ்ரீ சீத்தாஎலிய சீதையம்மன் ஆலய நிர்வாக சபை மேற்கொண்டுள்ளது.

இதன்படி சீதையம்மன் ஆலயத்தின் கடந்த 25 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணப் பணிகளின் பொழுது எடுக்கப்பட்ட புனித கல் ஆலயத்தில் வைக்கப்பட்டு கடந்த பல வருடங்களாக பூஜை செய்யப்பட்டு வந்தது.இந்த

புனித கல்லையே அயோத்திக்கு அனுப்புவதென நிர்வாக சபை முடிவு செய்தது.

இதன்படி புனித கல் கடந்த வாரம் சீதையம்மன் ஆலயத்தில் விசேட பூஜை நடாத்தப்பட்டு நுவரெலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டு அங்கும் விசேட பூஜைகள் நடைபெற்று ஆலயத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணனிடம் புனித கல் கையளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து அந்த கல் கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள மயூரபதி பத்திரகாளியம்மன் ஆலயத்தின் அறங்காவலர் சபை தலைவர் பெரியசாமி சுந்தரலிங்கம் மற்றும் உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.அவர்கள் அந்த புனித கல்லை பட்டை தீட்டி அதில் சீதையம்மன் ஆலயத்தின் பெயர் பதிக்கப்பட்டு பின்பு கொழும்பில் அமைந்துள்ள இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்படவுள்ளது. இந்திய உயர்ஸ்தானிகர் அதனை விமானம் மூலமாக இந்தியாவின் அயோத்தி நகருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.அந்த புனித கல் ஸ்ரீ இராமர் ஆலயத்தின் கட்டிட நிர்மாணத்தின் பொழுது அங்கு பிரதிஷ்டை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுத்தமான குடிநீரை வழங்க இலங்கை – சீனா ஒப்பந்தம்

(எம்.ஏ அமீனுல்லா)

நாட்டின் பல பகுதிகளுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு நீர் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் சீன தூதரகத்தில் அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள சீனத் தூதரகத்தின் இணைப்பதிகாரி ரு ஹு வீ,(Hu Wei) , நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் பேராதனை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் உபுல் பி. .திசநாயக்க உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

மேலும் நீண்டகால சிறுநீரக நோய்க்கு ஒரு தீர்வாகவும் முன்னெடுக்கப்படும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், பேராதனை பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஒரு அதிநவீன ஒருங்கிணைந்த தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் (ஜே.ஆர்.டி.சி) நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் சிறுநீரக நோயை எதிர்கொண்டுள்ள சுமார் 4000 நோயாளர்கள், 1300 பாடசாலை மாணவர்களுக்கு மிக சுத்தமான குடிநீரை வழங்கும் வகையில் நிலத்தின் கீழ் மூன்று நீர் சுத்திகரிப்பு திட்டங்களும் மேலும் 20 ற்கும் மேற்பட்ட மழைநீர் சேகரிப்பு திட்டங்களும் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொவிட் 19 அச்சம் : கலவான பிரதேசத்தில் மட்டுப்படுத்தப்பட்ட மனித நடமாட்டம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான பிரதேச செயலகப் பிரிவில் மனித நடமாட்டம் மற்றும் அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மேல் மாகாணத்தின் எல்லை கிராமமான மதுகம பிரதேசத்தில் கொரோனா தாக்கம் காரணமாகவே இரத்தினபுரி மாவட்டத்தின் எல்லை பிரதேசமானகலவான பிரதேசசெயலக பிரிவிலும் மனித நடமாட்டம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய கலவான நகருக்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் மதுகம மற்றும் பதுரளிய பிரதேசங்களிலிருந்தும் பொது மக்கள் வரவு அருகி சன நடமாட்ட ம் குறைந்து காணப்படுகிறது. இதேவேளை இப்பிரதேசங்களுக்கிடையிலான இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சேவைகளை நேற்று முதல் இடைநிறுத்தியுள்ளதாக மதுகம மற்றும் கலவான டிப்போ முகாமையாளர்கள் நேற்று தெரிவித்தனர். அத்துடன் கலவான பிரதேசத்திலுள்ள சகல பொதுச் சந்தைகளையும் காலவரையறையின்றி மூடிவிட கலவான பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கலவான அரச வைத்தியசாலையின் பீ.சீ.ஆர்.பரிசோதனைப் பிரிவை தனிப்பாதுகாப்பு இடத்துக்கு ஒதுக்க வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அத்துடன் நகரிலுள்ள சகல உணவுச்சாலைகள் மற்றும் ஏனைய வியாபார நிலையங்கள் தீவிரக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதேவேளை கலவான பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சகல கிராம சேவை பிரிவுகள் மற்றும் பொது சுகாதார பிரிவுகளில் வைத்திய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது தொடர்பில் மிகவும் கடுமையான நிலைப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக பொது சுகாதாரப் பிரிவுகளின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாத்தளை மாநகர முதல்வருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

உக்குவளை விஷேட,அக்குறனை நிருபர்கள்

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, மாத்தளை மாநகர முதல்வர் சந்தனம் பிரகாஷ், மாநகர ஆணையாளர் சமன் கலு ஆராச்சி உட்பட 40 பேருக்கு எதிராக முன்னாள் மாநகர முதல்வர் டல்ஜித் அலுவிஹாரையினால் மாத்தளை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிபதி சுமுது பிரேமசந்ரவினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளரான டல்ஜித் அலுவிஹாரையினாலேயே வழக்கு வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டதையடுத்தே மாத்தளை உயர் நீதிமன்ற நீதிபதி சுமுது பிரேமசந்ரவினால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மாத்தளை பதில் முதல்வர் சந்தனம் பிரகாஷ், மாத்தளை மாநகர சபை உறுப்பினர் அமில நிரோஷன் உட்பட சில மாநகர சபை உறுப்பினர்கள் மாத்தளை மாநகர சபையின் 252ஆவது மற்றும் 2771 சட்டவிதிப்படி மாத்தளை மாநகர முதல்வர் டல்ஜித் அலுவிஹாரவுக்கு எதிராக பூரண விசாரணைகளை மேற்கொள்ளும்படியும், விசாரணைகள் முடிவுறும் வரை தற்காலிக பதவி நீக்கம் செய்யப்படவேண்டுமெனவும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகேவிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுகெதிராக டல்ஜித் அலுவிஹாரையினால் மாத்தளை உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

மேற்படி வழக்கு கடந்த 19ஆம் திகதி விசாரனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மத்திய மாகாண ஆளுநரால் டல்ஜித் அலுவிஹாராவுக்கு எதிராக ஒரு விசாரணை குழுவை ஏற்படுத்தி அவருக்கெதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி பணிப்புரைகள் வழங்கப்பட்டிருந்த நிலையில் தன்னால் தொடரப்பட்ட வழக்கில் தனக்கு எந்த விதமான சாதகமான தீர்வும் பெற்றுக்கொள்ளமுடியாது என்ற கருத்துக்களை முன் வைத்து டல்ஜித் அலுவிஹார வழக்கினை வாபஸ் பெற்றுக்கொண்டார்.



பாலஸ்தீன் இஸ்ரேல் குறித்த உரையாடல்களிலும் நேர்ப்படையான களத்திலும் எட்வேர்ட் செய்த தன்னுடைய வாழ்வினை முழுமையாக காணிக்கையிட்டார். ஓரியண்டலிசம் உலகம் முழுவதும் பெரும் கவனயீர்ப்பினை பெற்றதோடு வரலாற்றின் நெடுகில் கிழக்கின் மீதான மாற்றியல் பார்வையினையும் வெளிப்படுத்தியது.

என் எதிரி என்றோ இது எனக்கு எதிரானது என்றோ இதை நான் விரும்புகிறேன் அல்லது

கீழைத்தேயத்தின் குரல் - எட்வேர்ட் செய்த்

மேற்கு கிழக்கு போராட்ட வடிவத்தில் கிழக்கு பற்றிய அந்நிய பார்வையில் அதிகார வர்க்கங்களின் நிலைப்பாடு எள்ளி நகையாடுவதாக வரலாற்றில் இருந்திருக்கிறது. எட்வேர்ட் செய்த் ஓரியண்டலிசம் பற்றிய தன்னுடைய பார்வையினை மேற்கு நோக்கி வீசும் போது அங்கு ஏற்பட்ட அதிர்வலைகள் உலகப் புத்திஜீவிகளிடத்தில் பெரும் உரையாடல்களை உருவாக்கின.

பாலஸ்தீன் இஸ்ரேல் குறித்த உரையாடல்களிலும் நேர்ப்படையான களத்திலும் எட்வேர்ட் செய்த தன்னுடைய வாழ்வினை முழுமையாக காணிக்கையிட்டார். ஓரியண்டலிசம் உலகம் முழுவதும் பெரும் கவனயீர்ப்பினை பெற்றதோடு வரலாற்றின் நெடுகில் கிழக்கின் மீதான மாற்றியல் பார்வையினையும் வெளிப்படுத்தியது. இதுவரைகாலமும் மேற்கு நோக்கிய கிழக்கின் முகத்தினை ஓரியண்டலிசம் மாற்றுவதற்கான அனைத்து விவாதங்களையும் தோற்றுவித்தது.

'ஓரியண்டலிசமும் அதன் சூழலும் அவமதிக்கப்பட்டதன் எல்லையை விட மிக விரிந்த சூழலில் ஓர் ஆசிரியன் என்ற முறையில் நான் அதற்குச் சார்பானவன் என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

ஆனால் மிக முக்கியமான விஷயம் அந்தப் புத்தகம் பகுப்பாய்வு முறை ஒழுங்கமைக்கப்பட்ட கோட்பாட்டுச் சட்டகம் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. அது எவ்வகையிலும் இந்த ஓரியண்டலிஸ்ட் இதை வெறுக்கிறேன் என்றோ குறிப்பிடவில்லை. மேலும் அரபு சமூகத்தில் அந்த முறைமையின் அடிப்படையில் நாங்கள் சிறைக்கைதிகள் நாங்கள் கடந்தகால இருளிலிருந்து விடுபட்டு ஒன்றை வளர்த்தெடுக்க இயலாதவர்களாக இருக்கிறோம் என்பதையே இங்கு குறிப்பிட விரும்புகிறேன்' என்கிறார் எட்வேர்ட் செய்த்.மேற்கும் கிழக்கும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த செமிடிக் மதம் மற்றும் மார்க்கங்களினூடாக நில அதிகார அரசியலை யூத சியோனிஸ்டுகள் முன்னெடுத்த சுரண்டல் பற்றி; எட்வேர்ட் செய்த் முன்வைத்த உரையாடல்கள் மேற்கின் புத்திஜீவிகளுடனான பனிப்போரினை துளிரவைத்தது.

இஸ்ரேல் உருவாக்கத்தின் பழமையான வரலாற்று துணிக்கைகளை மறுத்துவிடாத எட்வேர்ட் செய்த் பாலஸ்தீனின் இருப்பு பற்றியும் அதற்கான நியாயங்களின் இடையீடாக மேற்கும் கிழக்கும் மாத்திரமன்றி கிறிஸ்தவமும் இஸ்லாமும் முன்நிற்பதாக உரையாடல்களையும் எழுத்துக்களையும் முன்வைத்தார்.

பாலஸ்தீன் தேசிய கவுன்சிலின் உறுப்பினராக அவரது தீர்மானங்கள் உலகின் விரிந்த கதையாடலுக்கான தோற்றுவாயாக விருந்தது.

முத்தாரம்

ஏ.எம்.சாஜித் அஹமட்

800 சினிமா அறமல்ல; வணிகம்

மிகப் பழமை வாய்ந்த தமிழ் சினிமாவின் நல்ல படங்களாக ஒரு நூறு படத்தினை தாண்டி விடுவது விசித்திரம் தான். கலைத்துவமிக்க படங்கள் தியேட்டரை விட்டு ஓரிரு நாட்களில் கழற்றப்பட்டு விடும். மசாலா காவியங்களுக்கு மட்டும் அலையடித்துச் செல்கின்ற ரசனை கொண்டது தமிழ் சினிமா.

இன்றைய தமிழ் சினிமா வர்த்தகத்தில் விஜய் சேதுபதி வளர்ந்து நிற்கிறார். இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை சரித்திரத்தினை '800' படமாக நடித்துக் கொண்டிருக்கிறார். இலங்கை கிரிக்கெட் அணி மீது ஆர்வம் கொண்ட பெரும்பாலான ரசிகர்களுக்கு முத்தையா முரளிதரனும், லசித் மலிங்கவும் ,மெண்டிசும், மஃரூபும் ஒன்றுதான். இதில் மத அடையாளத்தினை வைத்து பிரித்து பார்ப்பதற்கான எந்த ஒட்டைகளும் இருந்து விடவில்லை.

யுத்தத்தால் முழு இலங்கையும் பாதிப்புற்றது. பௌத்ததமிழ் இஸ்லாமிய மக்கள் அனைவரும் துன்புற்றனர். முரளி தன் மொழி பேசும் மக்களுக்காக எதனையும் பேசவில்லை என்பதற்கு அப்பால் இதுவரைக்கும் முரளி சரியாக தமிழே பேசவில்லை என்பதுதான் நிதர்சனம். முரளியின் தமிழை அந்தக் காலங்களில் கேட்டு விழுந்து விழுந்து சிரித்திருக்கிறோம். சனத் ஜயசூரிய கூட ஒரு நிகழ்வில் முரளியை விட அழகாக தமிழ் பேசினார். முரளியைப் போன்று விஜய் சேதுபதியால் இலகுவாக நடிக்க முடிந்தாலும் முரளியின் கொச்சை தமிழை பழக அவர் நீண்ட பிரக்ஞை எடுக்க வேண்டும்.

முரளியின் பந்து வீச்சில் தவறிருப்பதாக நடு மைதானத்தில் அறிவிக்கப்பட்ட போது அவர் திடுக்கிட்டு நின்றார். முரளியின் கண்களில் தீர்ந்து விடாத பயமும் கலக்கமும் ஒரே சேர ஒட்டிக் கொண்டன. அப்போதைய இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராக இருந்த அர்ஜுன ரணதுங்க முரளி எனும் சகபாடி விளையாட்டு வீரனுக்காக போட்டியிலிருந்து நீங்கி மைதானத்தினை விட்டு வெளியேறினார். அன்று முரளிக்காக நின்ற ஒரே பலம் இலங்கை அணியின் ஒட்டு மொத்த வீரர்களும் அர்ஜுன ரணதுங்க எனும் தலைமையும் தான். பிறகு ஏராளமான பரிசோதனைகளுக்குப் பிறகு முரளி கடந்து வந்த பாதைகள் அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

முரளி பலரையும் போன்று ஒரு கிரிக்கெட் விளையாட்டு வீரர். 800 விக்கட்கள் வீழ்த்திய சாதனையாளர். விஜய் சேதுபதி பலரையும் போல ஒரு நடிகர். நல்ல படங்களை தருபவர். விசித்திரமான கோணங்களில் நடிக்கக் கூடியவர். சினிமா என்பது வணிகம். கடந்து விட்டு போக வேண்டிய சமாச்சாரத்தினை ஊதிப் பெரிதாக்கி விஜய் சேதுபதிக்கும் முரளிக்கும் கிராக்கியை ஏற்றிய சிலரே பாவமும் பரிதாபங்களும்...

ஜே.ஜே. சில குறிப்புகள்



ஜே.ஜே. சில குறிப்புகள் நாவலுக்குப் பிறகு தமிழ் சூழலின் வாசிப்பு மனோ நிலை மாறியதாக பலரும் கூறுவர். நானும் அப்படித்தான் வாசிக்கத் தொடங்கினேன். ஆனால் ஜே.ஜே. என்னுள் ஏற்படுத்திய திகைப்பு மாற்றமானது.

சுந்தர ராமசாமியின் எழுத்துக்களை கதையாடுவதற்கு முன்பாக காலத்தின் சக்கரங்களை தன் படைப்புக்களின் விவாதப் பொருளாக உருவாக்கிக் கொண்டார் என்பதே பொருத்தம். சு.ரா வின் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என்னை ஆழ்ந்து பயணிக்க வைத்த படைப்பு. என்றுமே மறக்க முடியாத ஒரு புளிய மரத்தின் கதையும் தொடரான இலக்கிய விவாதங்களும் கடிதங்களும் காத்திர வாசிப்பின் மூல அடையாளங்களாயின.

சு.ரா வின் முதல் மொழிபெயர்ப்பான தகழியின் தோட்டியின் மகன் வாசித்த போது எந்த மாதிரியான கதைகளின் உலகத்தில் சு.ரா தனது காலினை பதிக்க விரும்புகிறார் என்பதை உணர முடிந்தது. பிற்காலத்தில் எல்லா வெரைட்டியான இலக்கிய சமாச்சாரங்களிலும் சு.ராவின் பங்கிருந்தது. மனதுவையமான கதைகளிலும் கவிதைகளிலும் காத்திரமான விமர்சனங்களின் தோற்றமிருந்தன. சு.ராவின் இறப்பிற்கு பின்னரே அவரது படைப்புக்களை வாசிக்க கிடைத்த ஜெனரேஷனில் நானும் ஒருத்தன்.

பிறகு தீவிர விசிறியாகி தொடராக சு.ராவை தேடிப்படித்தேன். எங்களது நூலகத்தில் பரந்து கிடந்த புத்தகக் கோவைகளில் சு.ராவிற்கு என்றே தனிப் பாகங்களை அமைத்தேன்.

சு.ராவை வாசிக்க கையில் எடுக்கும் போது இருக்கின்ற தெளிந்த மனம் வாசித்து முடிக்கையில் இருக்கப் போவதில்லை என்பது உறுதி. அது ஒரு வகையான கலக்கல் மனம்தான். மங்க வைக்காத ரச போதை போன்றது.

'சிந்திக்கும் மனிதனுக்கு பாஷை உண்டு. அது உண்மையின் பாஷை. அதை தேடியலைந்தவன் ஜே.ஜே.' என்கிறார் சு.ரா. மலையாள எழுத்தாளர் ஜே.ஜே. எட்டிப்பார்த்து தனது முழு மூச்சிலும் கொட்டித்தீர்க்கும் தத்துவசாரமும் தமிழக சூழலுக்கு முன்பாக வைக்கும் அடுக்கடுக்கான கேள்விகளும் காலத்தின் திசைகளை மாற்றுக் கேணியின் பக்கம் திருப்பி விடுகிறது. ஜே. ஜேயினை புரிந்து கொள்வதில் உள்ள சிக்கலும் ஒவ்வொரு பார்வையில் லயித்திருக்கின்ற வாசகனின் கோணத்திற்கு ஏற்ப ஜே.ஜேயின் பக்கங்கள் புரிந்து கொள்ளப்படும் அழகியலும் தேர்ந்த கதை சொல்லிகளுக்கு மாத்திரமே வாய்க்கின்ற பேனாக்களின் தாரக மந்திரம்.

சு.ராவின் பேனாக்கள் செய்த மந்திரங்கள் சுகபோகமானவை.

இலக்கிய உலகில்

ஜே.ஜே. சில குறிப்புகள்

கொம்பர்

கொம்பரின் மாட்டு வண்டியினை யாரும் தொட்டுக் கூட பார்த்திருக்கமாட்டார்கள். அதற்கான அனுமதியினை கொம்பரின் மாடுகள் தரா. ஆனாலும் ஒரு நாள் கொம்பர் என்னை மாட்டு வண்டியில் ஏற்றினார். நான் முதல் முதலாக ஏறிய மாட்டு வண்டிலது. கொம்பரின் கேட்டிக் கம்பின் விலாசலில் புழுதியியை கிளப்பிக் கொண்டு பாதையை கடந்தன மாடுகள். காடுகளை ஆண்டமை பற்றியும் மாட்டு வண்டிகல்களின் உலா வலம் பற்றியும் தான் வாழ்ந்த ராஜ வாழ்வு பற்றியும் கொம்பர் பேசிய பேச்சுக்கள் இப்பொழுதும் என் காதுகளில் சப்தமிடுகின்றன.

நாமத்தும்மா மௌத்தாகிப் போனார். தனக்கான ராஜ்ஜியத்தின் பெரும் பகுதி தகர்ந்து போனதாகவே கொம்பர் உணர்ந்தார். யாரிடமும் இதனைச் சொல்லி அழுதிருக்க வாய்ப்பில்லை. கொம்பர் அழக்கூடிய ஆளில்லை. தனது மாட்டு வண்டிலின் கம்பீரமும் அதன் வருகைக்காய் காத்திருக்கும் நாமத்தும்மாவின் புன்னகையும் அச்சமும் காற்றோடு கலந்திட்டு. கொம்பரின் மாடுகள் நாமத்தும்மாவின் தீனிக்காய் காத்திருந்திருக்கக் கூடும். கொம்பரின் கேட்டிக் கம்புகள் பாதைகளை தேடியிருக்கக் கூடும். நாமத்தும்மாவின் மரணம் கொம்பரின் மூர்க்கத்தினை அசைத்துப் பார்த்திருந்தது. காலத்தின் பெருவெளியில் நாமத்தும்மா லயித்துப் போனாள். கொம்பரின் மாடுகள் புகையிருட்டில் கத்தாமல் அடங்கியிருந்தன. கொம்பரின் குரலும் அடங்கிப் போயிருந்தது.

கொம்பரை அவரது மரணத்தின் போதே இறுதியாகப் பார்த்தேன். முறுக்கு மீசையின் கம்பீரம் சோகமாய் பரவியிருந்தது. கேட்டிக் கம்பின் பாடலின்றி மாடுகள் அசைய மறுத்தன. மாட்டு வண்டிலின் அச்சாணி கூர்மையற்றிருந்தது. மழைத் தூறலின் மெலிதான பரப்பில் கொம்பரை தூக்கி சென்றனர். இன்னும் சொற்ப நேரத்தில் மண்ணின் அடி ஆழத்தில் கொம்பரை அடக்கி விடுவர். கொம்பரின் வண்டிலும் மாடும் தனித்து நின்று வழியைப் பார்த்துக் கொண்டிருந்தது. வாசலினை திறந்து விட நாமத்தும்மா இல்லை. நீண்ட காடுகளில் வழி நடாத்த கொம்பரும் இல்லை. சலங்கைகளின் சப்தமின்றி வானினை புகை மூடியிருந்தது. நாமத்தும்மாவும் கொம்பரும் சுவனத்திலிருந்து மாடுகளை பார்த்திருக்கக் கூடும். யாரும் தொட்டு விடாதபடி நிமிர்ந்து நிற்கிறது கொம்பரின் மாட்டு வண்டில்....

கொம்பர் அழக்கூடிய ஆளில்லை. தனது மாட்டு வண்டிலின் கம்பீரமும் அதன் வருகைக்காய் காத்திருக்கும் நாமத்தும்மாவின் புன்னகையும் அச்சமும் காற்றோடு கலந்திட்டு. கொம்பரின் மாடுகள் நாமத்தும்மாவின் தீனிக்காய் காத்திருந்திருக்கக் கூடும். கொம்பரின் கேட்டிக் கம்புகள் பாதைகளை தேடியிருக்கக் கூடும். நாமத்தும்மாவின் மரணம் கொம்பரின் மூர்க்கத்தினை அசைத்துப் பார்த்திருந்தது.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
9
2020 ஒக்டோபர் 21
புதன்கிழமை

தமிழர்களை இந்தியா

பகடைக்காய்களாக பயன்படுத்தக் கூடாது

ஓமந்தை விஷேட நிருபர்

இலங்கை தமிழர்களை இனியும் இந்தியா பகடைக்காய்களாக பயன்படுத்தக்கூடாது. 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுலாக்குவதிலிருந்து அதனை மேம்படுத்தி அரசியல் தீர்வொன்றை நிலைபெறச் செய்வதற்கு உடனடியானதும் காத்திரமானதுமான தலையீடுகளை இந்தியா செய்ய வேண்டும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 33ஆண்டுகளைக் கடந்துள்ளபோதும் தற்போது வரையில் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் மாறிமாறி ஆட்சிப்பீடமேறிய ஆட்சியாளர்கள் அலட்சியம் செய்தே வந்திருக்கின்றனர்.

அவ்வாறான நிலையில் தற்போதைய ஆட்சியாளர்கள் தமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தினை பாராளுமன்றில் கொண்டிருக்கின்றோம் என்ற இறுமாப்புடன் அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பகிர்வு தொடர்பில் காணப்படும் ஒரேயொரு ஏற்பாடான 13ஆவது திருத்தச் சட்டத்தினை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள்.

விடயதானத்திற்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் சரத்வீரசேகரவே மாகாண சபை முறைமைகளை ஒழிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக கூறிவருவதோடு, இந்திய எதிர்நிலை வாதத்தினையும் தோற்றம்பெறச் செய்து வருகின்றார். அதேநேரத்தில் தேர்தல்கள் ஆணையாளர் மாகாண சபை தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதிக்கு கடிதமும் எழுதியுள்ளார்.

ஆனால் இதுவரையில் மாகாண

சபைகளுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பாக ஆட்சியில் உள்ளவர்கள் எந்தவிதமான பிரதிபலிப்பையும் செய்ததாக இல்லை. அதேநேரம் ஜனநாயக கட்டமைப்புக்களை தகர்த்து ஜனநாயக விழுமியங்களுக்கு மரண அடி அளிக்கப்போகும் 20ஆவது திருத்தச் சட்டத்தினை நிறைவேற்றுவதற்கே அரசாங்கம் முனைந்துகொண்டு இருக்கின்றது.

அதற்கு அடுத்ததாக புதிய அரசியலமைப்பு ஒன்றையும் உருவாக்குவதற்கான முனைப்புக்கள் செய்யப்படுகின்றன. 'ஒரேநாடு ஒரே சட்டம்' என்ற கோட்பாட்டில் சர்வாதிகாரத்தினை முன்னெடுக்கும் வகையில் தனி நபருக்கான அதிகாரக்குவிப்பை இலக்கு வைத்தே புதிய அரசியலமைப்பு மேற்கொள்ளப்படப் போகின்றது என்பது திண்ணம்.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்தியா 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுயையாக நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தங்களை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். அந்த தார்மீக கடமையிலிருந்து இந்தியா தவறும் பட்சத்தில், இந்திய, இலங்கை ஒப்பந்தம் கேள்விக்குள்ளாக்கப்படுவதோடு மாகாண சபை முறைமையும் நீர்த்துப்போகும் பேராபத்தே உள்ளது.

136 பேர் வீடுகளுக்கு அனுப்பி வைப்பு

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களில் 136 பேர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

வெளிநாடுகளிலிருந்து வருகைதந்த 220 பேர் இங்கு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வந்த நிலையில் இவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது அவர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் 136 பேரும் 5 பேருந்துகளில் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். இதேவேளை கேப்பாபிலவு 59 ஆவது படைப்பிரிவின் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் கம்பஹா மாவட்டத்தினை சேர்ந்த 125 பேர் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றார்கள்.

வடக்கில் 24,641 வெடிபொருள் அகற்றல்

பரந்தன் குறூப் நிருபர்

வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் ஸார்ப் நிறுவனம் இதுவரை 24,641 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக தெரிவித்துள்ளது.

ஜப்பான் நாட்டு நிதியுதவியில் 2016ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2020 ஒக்டோபர் 18ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவின் ஒட்டுசுட்டான் அம்பகாமம், தச்சடம்பன் ஆகிய பகுதிகளிலும், கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி, முகமாலை மற்றும் ஆணையிறவு ஆகிய இடங்களில் 1,471,912 பரப்பளவில் இவ் அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியதாக குறிப்பிட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலை மனித கழிவுகள்

பாதுகாப்பற்ற முறையில் கொட்டுவதற்கு எதிராக போராட பிரதேச மக்கள் முஸ்தீபு

வவுனியா விசேட நிருபர்

வவுனியா இராசேந்திரம் குளம் பகுதி மயானத்தில் வைத்தியசாலை மனிதக் கழிவுகள் கொட்டப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்களால் முன்னெடுக்கப்படவிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு பொலிசார் தடைவித்தனர்.

எனினும் மேற்படி சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்ததை தொடர்ந்து மக்கள் கலைந்து சென்றனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இப் பகுதியில் மக்கள் குடிமனைகளையண்டியதாக காணப்படும் மயானத்தில் வவுனியா வைத்தியசாலையின் மனிதக் கழிவுகளால் கொட்டப்படுவதால் தமக்கு பாதிப்பு ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் சுட்டிகாட்டியுள்ளனர். பாதுகாப்பற்ற முறையில் அவை கொட்டப்படுவதால் விலங்குகள், காற்று, நீர் என்பவற்றின் மூலம் மக்கள் குடியிருப்புக்களில் பரவல் அடைவதாகவும் அதனால் தமக்கும் நோய் ஏற்படுவதாவும் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முனைந்தனர்.

இதற்காக நேற்று அவர்கள் குப்பை கொட்டப்படும் இடத்துக்கு முன்பாக ஒன்கூடிய போது பொலிசார் கொரோனா சூழ்நிலையை காரணம் காட்டி ஆர்ப்பாட்டம் நடத்த தடைவித்தனர்.

இந்நிலையில், அவ்விடத்திற்கு வந்த வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர் விக்டர்ராஜ் இது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் நந்தகுமார் ஆகியோருடன் தொலைபேசியில் உரையாடினார்.

இப் பிரச்சினை தொடர்பாக தான் கவனம் செலுத்துவதாக வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் வழங்கிய உறுதிமொழியையடுத்து போராட்டம் கைவிடப்பட்டதுடன், மக்களும் அவ்விடத்தில் இருந்து கலைந்து சென்றனர்.

கிருஷ்ணபுரம் கொரோனா வைத்தியசாலைக்கு பிரதேச மக்கள் எதிர்ப்பு – பொலிசாருக்கு மகஜர்

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் கொரோனா சிகிச்சை நிலையம் தொடர்பில் அச்சமாக உள்ளது என தெரிவித்து பிரதேச மக்கள் ஒன்றுகூடி பொலிசாருக்கு மகஜர் கையளித்தனர்.

நேற்று காலை 9 மணியளவில் இப் பகுதியில் ஒன்றுகூடிய பிரதேச மக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமது நிலைப்பாட்டை தெரிவிப்பதற்காக ஊடகவியலாளர்களையும் அழைத்திருந்தனர். இதன்போது அங்கு கிளிநொச்சி தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரியும் உத்தியோகத்தர்களும் வருகைதந்திருந்தனர்.

இதன்போது, இங்கு அமைக்கப்பட்டுவரும் சிகிச்சை நிலையத்தினால் தாம் அச்சமுறுவதாகவும், இவ் விடயம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்யுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். இதன்போது பொலிசாருக்கு அவர்கள் விளக்கமளித்திருந்தனர்.

இக் காணியானது 14 பேருக்கு சொந்தமான காணி எனவும், அது இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டு அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டனர்.

இது தொடர்பாக பொலிஸ் பொறுப்பதிகாரி பதிலளிக்கையில்,

இது தொடர்பில் அரசாங்க அதிபரிடம் பேசுகின்றோம். ஆனால் இவ் வைத்தியசாலை இப்பகுதி மக்களிற்காகவே பயன்படவுள்ளது. யாழ் மருதங்கேணி பகுதியிலும் மக்கள் இவ்வாறு எதிர்ப்பினை வெளியிட்டுவந்த நிலையில் பின்னர் அப்பகுதி மக்களின் பயன்பாட்டிற்கு என்பதை உணர்ந்து ஏற்றுக்கொண்டனர்.

வெளியிடங்களில் இருந்து இங்கு அழைத்துவந்து சிகிச்சை வழங்கப் போவதில்லை. இப் பகுதி மக்களுக்காகவே இது உருவாக்கப்படுகின்றது. இது தொடர்பாக அரச அதிபருடன் கலந்துரையாடி அது தொடர்பாக உங்களுக்கு தெரியப்படுத்துகிறேன் என்றார்.

மன்னாரில் விபத்து சிறுமி உட்பட மூவர் காயம்

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் பஸார் பகுதியில் நேற்று காலை பொலிஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி இடம்பெற்ற விபத்தில் சிறுமி உட்பட மூவர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 67 வயதுடைய கணவன் அவருடைய மனைவி மற்றும், அவர்களுடன் வருகை தந்த 6 வயது சிறுமி ஆகியோரே காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஊடகவியலாளர்களை தாக்கியோருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

முல்லைத்தீவில் ஊடகவியலாளர்களை தாக்கிய சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவ் வழக்கு விசாரணை நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதவான் எஸ். லெனின்குமார் சந்தேக நபர்களை எதிர்வரும் 03ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கட்டளையிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

முல்லையில் நீண்ட நாட்களின் பின்னர் மழை

மாங்குளம் குறூப் நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்ட நாட்களின் பின்னர் நேற்று மழை பெய்துள்ளது. மிகவும் நீண்ட நாட்கள் மழை பெய்யாத நிலையில் வயலில் நெல்லை போட்டுவிட்டு மழைக்காக விவசாயிகள் ஏங்கி தவிக்கும் நிலையில் நேற்று மழை பெய்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவில் காடுகள் அழிக்கப்படுவதும் இதனால் உரிய காலங்களில் மழை வீழ்ச்சி இல்லாது போவதுமாக நிலமைகள் மோசமடைந்து வருகின்றன. இந்நிலையில் நீண்ட நாட்களின் பின்னர் மழை பெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்ட போது...

புங்குடுதீவின் முடக்கம் நீங்கியது யாழ். அரச அதிபர் அறிவிப்பு

யாழ்.விசேட நிருபர்

புங்குடுதீவில் அமுல்படுத்தப்பட்ட தற்காலிக முடக்கம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை நீக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேஸ்வரன் தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் கூறியுள்ளதாவது, கடந்த மூன்று வாரங்களாக யாழ்ப்பாணம் புங்குடுதீவு பகுதி, தற்காலிக முடக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்த நிலையில், அப்பகுதியில் சுய தனிமைப்படுத்தப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, இதனடிப்படையில் புங்குடுதீவு பகுதியானது தற்காலிக முடக்கத்திலிருந்து நீக்கப்பட்டு வழமைக்கு திரும்புகிறது. எனினும், மக்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளினை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

மேலும், புங்குடுதீவுக்கு சென்றுவரும் பொது மக்களும் சுகாதார நடைமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும். குறித்த பகுதி, சுகாதாரப் பிரிவினரால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படும் என்றார்.

6 மில்லியன் செலவில் நூலகம் அமைப்பு

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் ஆறு மில்லியன் ரூபா செலவில் நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. கடந்த காலத்தில் நிலவிய யுத்தம் காரணமாக வடக்கில் இலங்கை இராணுவத்தினதும் விடுதலைப் புலிகளதும் முன்னரங்க பகுதியாக காணப்பட்ட முகமாலை பகுதியிலேயே இந் நூலகம் அமைக்கப்படுகின்றது. இருபது ஆண்டுகளுக்கு மேலாக இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடியேறியதையடுத்து அம் மக்களின் தொடர்ச்சியான வேண்டுகோளையேற்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் நூலகம் அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா தனிமைப்படுத்தல் முகாமில் 20 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, தேசிய கல்வியற் கல்லூரி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள கம்பஹாவை சேர்ந்த 20 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் அவர்களது உறவினர்கள் எனப் பலர் வவுனியா, பூந்தோட்டம் தேசிய கல்வியற் கல்லூரி தனிமைப்படுத்தல் முகாமிற்கு அழைத்து வரப்பட்டனர்.

அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள 324 பேருக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் பி.சி.ஆர் பரிசோதனைகள் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. அதில் 194 பேரின் பி.சீ.ஆர் பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெற்றிருந்தது.

அதன்படி 20 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களை யாழ்ப்பாணம், மருதங்கேணி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அழைத்து செல்லப்பட்டுள்ளனர். இதேவேளை, திங்கட்கிழமை இங்கு தங்க வைக்கப்பட்டிருந்த மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆர்வமே சிறந்த மூலதனம்

கராத்தே தற்காப்பு கலையின் சிறந்த பெண் போட்டியாளர் சாரா

நாம் எந்த துறையில் சாதிக்க வேண்டுமாக இருந்தாலும் அதில் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் ஆர்வம் மட்டுமே சிறந்த மூலதனம் என கராத்தே போட்டியில் 2020ஆம் ஆண்டுக்கான சிறந்த பெண் போட்டியாளருக்கான விருதை பெற்றுக்கொண்ட சாரா தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக தொழில் நுட்பபீட மாணவியான இவர் யாழ்ப்பாணம் ஜே.கே.எஸ் தற் காப்பு கலையகத்தின் கராத்தே மாணவியாவார். இவர் தனது பயணம் தொடர்பாக தினகரன் வடக்கின் திடலுக்காக பகிர்ந்து கொண்டதாவது,

கேள்வி: உங்களைப் பற்றி கூறுங்கள்?

நான் சாரா, வயது 23. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப பிரிவில் இளங்கலை மாண வியாக இறுதியாண்டில் கல்வி கற்று வருகின்றேன். அத்துடன் கராத்தேயையும் பயின்று வருகி றேன். காராத்தேத்துறை என்னும் போதே உள்ளுக்குள் ஒரு மகிழ்சி யும், நானும் பயில்கின்றேன் என்ற கர்வமும் எப்போதும் உள்ளது.

என்னைப்பற்றி கூறச் சொல் லும்போது வெறுமனே கல்விப் பின்புலத்தை பற்றி மட்டும் கூறாமல் எனக்கான ஒரு அடையா ளமாக இத்துறையை கூறுவதில் ஒருவித கர்வம் உள்ளது.

என்னை பெறுத்த வரையில் விளையாட்டுதுறையில் எந்தவொரு பின்புலமும் ஆர்வமும் இல்லாத நான் பாடசாலையை தொடர்ந்து பல்கலைக்கழகம் சென்ற பிற்பாடு கராத்தேத் துறையில் எனக்கான அடையாளத்தைப் பெற்றுக் கொண்டேன்.

கேள்வி: இத்துறையில் நீங்கள் ஜெயித்துக்கொண்டிருப்பதற்கு உங் களது குடும்பத்தின் ஒத்துழைப்பு எவ்வாறுள்ளது?

நான் குடும்பத்தில் மூத்த மகள்; எனக்கு இரண்டு தம்பி இருக்கின் றனர். எனது குடும்பம், அம்மா அப்பா தம்பி நான் உட்பட்டதான ஓர் சிறிய நடுத்தரக் குடும்பமாகும்.

ஆரம்ப காலங்களில் காரத்தே துறையில் ஈடுபடுவதற்கோ போட் டிகளுக்கு செல்வதற்கோ எனது குடும்பத்தினர் விருப்பம் தெரிவிக் கவில்லை தற்போது முழு ஒத்த ழைப்பையும் வழங்கி எனக்குப் பக் கபலமாகவும், உறுதுணையாகவும் இருந்து வருகின்றார்கள்.

கேள்வி: எப்படி நீங்கள் காரத்தே துறையில் நுழைந்தீர்கள்?

நான் பல்கலைக்கழகத்தில் 1ஆம் வருடத்தில் படித்து கொண் டிருக்கும்போது, காரத்தே வகுப் புக்கள் ஆரம்பிக்கப்படும் என்ற அறிவித்தலை பார்த்து காரத்தே வகுப்பில் தற்செயலாக இணைந்து கொண்டேன்.

கேள்வி: நீங்கள் பங் குபற்றிய போட்டிகள் பற்றி கூறுங்கள்?

2018ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா காரத்தே சம் மேளனத்தினால் நடத்தப் பட்ட காரத்தே போட்டியில் 21வயதுப் பெண்களுக்கான கறுப்புப்பட்டிப் பிரிவில் குமித் தேயில் வெள்ளிப் பதக்கதினையும் காட்டாவில் வெண்கலப் பதக் கத்தினையும், ஸ்ரீலங்கா தேசிய காரத்தே சம்பியன்ஷிப் போட்டி யில் பெண்கள் பிரிவில் குமித்தே யில் வெண்கலப் பதக்கதினையும் பெற்றேன். 2019ம் ஆண்டு சோட் டோக்கான் காராத்தே சம்மேளனத் தினால் 21 வயதுப் பிரிவுப் பெண் களுக்காக நடத்தப்பட்ட காரத்தே போட்டியில் குமித்தே, காட்டாப் போட்டிகளில் தங்கப்பத்தினையும் பெற்றுக்கொண்டேன்.

2017ஆம் 2018ஆம் ஆண்டுக ளில் யாழ்.பல்கலைக்கழகத்தின் வருடாந்த உள்ளக விளையாட்டுப் போட்டிகளில் காராத்தே போட்டி யில் குமித்தேயில் தங்கப்பதக்கதி னையும் காட்டாவில் வெள்ளிப்ப தக்கதினையும் 2019ஆம் ஆண்டு குமித்தேயில் தங்கப்பதக்கதினை யும் காட்டாவில் வெண்கலப் பதக் கத்தினையும் பெற்றிருந்தேன்.

அதேயாண்டு மத்திய மாகாண வருடாந்த விளையாட்டு விழாவில் பெண்கள் பிரிவில் பங்கு பற்றி குமித்தேயில் தங்கப் பதக்கதி னையும், அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான காரத்தே போட்டியில் குமித்தேயில் வெள்ளிப் பதக்கதினையும் பெற் றுக்கொண்டேன்.

கேள்வி: உங்கள் பயிற்றுவிப்பாளர் பற்றிக் கூறுங்கள்?

எனது பயிற்றுவிப்பாளர்களாக சென்சே.றோசி ஹரிந்த் மற்றும் சென்சே.பௌஷனா ஆகியோர் உள்ளனர். ஆரம்ப காலங்களில் சக நண்பர்களைப் போல என்னால் அவ்வளவாக சிறப்பாக செயற்பட முடியவில்லை.

ஆனாலும் பயிற்சிகளை ஒரு போதும் இடைநிறுத்த நினைத்த தில்லை. காரணம் எனக்குப் பயிற்று வித்த ஆசிரியர்கள் இருவருமாகும். பூச்சிய நிலையிலிருந்து என்னைப் பயிற்றுவித்துக் கொண்டிருப்பவர் கள் எப்போதும் ஊக்கமளித்துக் கொண்டேயிருந்தார்கள்.

முக்கியமாக சென்சே.றோசி ஹரிந்த் அவர்களின் சில வார்த்தை கள் என்னை எப்போதும் ஊக்கப்ப டுத்துவதாகக் காணப்படும். அதில் எனக்கு மிகவும் பிடித்த வார்த்தை 'வெல்லோணும் வென்றுபோட்டு ஆடோணும்' மிகவும் துடிப்பான, நான் எப்போதும் நினைவுகூரும் வார்த்தைகள் இவை. ஆரம்ப காலங்களில் மிகவும் கடுமையான பயிற்சிகளால் எம்மைப் பண்ப டுத்தினர். எம்மை உருவாக்கியது; ஊக்குவித்தது இப்போதும் எங்க ளைக் கௌரவப்படுத்துவது எமது ஆசான் சென்சே றோசி ஹரிந்த் அவர்களே.

கேள்வி: உங்களைப் போன்று எதிர்காலத்தில் இந்த காரத்தேயில் ஈடுபடவிருக்கும் வீர வீராங்கனை களுக்கு என்ன கூற விரும்புகிறீர் கள்?

என்னைப் பொறுத்தமட்டில் கராத்தே எனக்கு வெறுமனே ஒரு கலையோ விளையாட்டோ அல்ல. இவற்றுக்கப்பால் பின்தங் கிய தாழ்வு மனப்பான்மையுடன் சமூக அறிவற்று கேலி கிண்டல்க ளுக்கு மத்தியில் வாழ்ந்த எனக்கு, எனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கவும் பல சவால்களுக்கு எதிர் நீச்சல் போடவும் கற்றுத்தந்த ஒரு விடயம்.

மற்றவருக்கு இது ஒரு கலையா கலாம். ஆனால் இது எனக்கு உயி ரினும் மேலானது, என் வாழ்வின் திருப்பமுனை. யாரேனும் தம்பி தங்கைகள் சகதோழிகள் எந்த வயதுப் பிரிவினராயினும் கராத்தே கற்க வேண்டுமென நினைத்தால் எதைப் பற்றியும் யோசிக்காமல் கற்கத் தொடங்குகள்.

உடல் உள ரீதியில் ஆரோக்கிய மான மாற்றத்தை நிச்சயம் காண்பீர் கள். ஒரு சிறந்த கட்டுக்கோப்பான உடல் தரும் தன்னம்பிக்கையை யாராலும் தர முடியாது. என்னைப் பொறுத்தவரையில் ஆர்வம் மட்டுமே சிறந்த மூலதனம்.

தமிழினியன்
யாழ்.விளையாட்டு நிருபர்

லங்கா பிரீமியர் லீக்குக்கு யாழ். இளைஞர்கள் தெரிவு

லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் ஜெப்னா ஸ்ரலியன்ஸ் அணி சார்பில் விளை யாடுவதற்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 3 வீரர்கள் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் கேல் கிளாடியேட் டர்ஸ் அணி, காண்டி டூஸ்கர் அணி, தம்புல்லாஹாக் அணி, ஜெப்னா ஸ்டாலியன்ஸ் அணி, கொழும்பு கிங்ஸ் அணி ஆகிய 5 அணிகள் பங்கு பற்றுகின்றன.

இதில் திசாரா பெரோர தலைமையிலான ஜெப்னா ஸ் டாலியன்ஸ் அணியில் யாழ்ப்பாணம், சென்.ஜோன்ஸ் கல்லூரியை சேர்ந்த கபில் ராஜ், டினோசன் மற்றும் யாழ்ப் பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த வியஸ்காந் ஆகிய மூவருமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் விவசாயிகள் இம்முறை 3,3-1/2 மாத நெல்லையே விதைக்க வேண்டும்

பதில் அரசாங்க அதிபர் குணபாலன்

தலைமன்னார் விஷேட நிருபர்

மன்னார் விவசாயிகள், காலத்துக்கு ஏற்றவாறு நடப்பு வருடத்துக்காக தீர்மானிக்கப்பட்டிருக்கும் கால போகச் செய்கையை மேற்கொள்வார்களாயின்அறுவடையில் முன்னேற்றம் காண முடியும் என மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தெரிவித்தார்.

மாவட்ட காலபோக செய்கை தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

கட்டுக்கரை குளத்தில் 6 அடி (10900 கன அடி) நீரை கொண்டதாக காணப்படுகின்றது. இதற்கமைய இவ் நடப்பு வருடத்தில் இங்குள்ள முழுமையான 24,438 ஏக்கர் பரப்பளவில் இக் காலபோகச் செய்கைப் பண்ணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம் முறை இப் பகுதியில் 3, 3-1/2 மாத நெல்லையே விதைப்பு செய்யும்படி விவசாயிகளிடம் வேண்டப்பட்டுள்ளது. ஏனென்றால் தற்பொழுது காலநிலைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதால் வரட்சி அல்லது மழையினாலோ பயிர்ச் செய்கை பாதிப்பு அடைந்து விடக்கூடாது என்பதற்காக இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னாரில் நெற்செய்கை காலப் பகுதியில் கால்நடை வளர்ப்பில் பெரும் பிரச்சினை தலை தூக்கியிருப்பதால் கடந்த வருடங்களைப் போல் ஒரு பகுதி கால்நடைகளை மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பெருவழி பிரதேசத்துக்கு கொண்டு செல்வதென்றும், ஏனைய கால்நடைகளை நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இனம் காணப்பட்ட இடத்துக்கு கொண்டு செல்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இங்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி பயிர்ச் செய்கை நடைபெறுமாயின் அறுவடையில் முன்னேற்றம் காண முடியும் என்றார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் மாவட்ட ஒருங்கிணணப்பு குழு பாராளுமன்ற உறுப்பினர் காதர்மஸ்தானால் திறந்து வைக்கப்பட்ட போது... (படம்: தலை மன்னார் குறூப் நிருபர்)

சாவகச்சேரி நகரசபை எல்லை பகுதியில் நடைபாதை புடவை வியாபாரத்துக்கு தடை

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் எதிர்வரும் தை மாதம் முதல் நடைபாதை புடவை வியாபாரத்தை தடை செய்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகர்கள் மற்றும் நகரசபை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று இந் நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு முன்பாக நடைபெற்றுவருகின்ற துணி வியாபாரம் தொடர்பாக அண்மைக்காலமாக சாவகச்சேரி நகரசபைக்கு வர்த்தகர்கள் மற்றும் உறுப்பினர்களால் சில முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. குறிப்பாக நடைபாதை துணி வியாபாரத்தால் வர்த்தகர்கள் பாதிக்கப்படுவதாகவும் அத்துடன் சுகாதார நடைமுறை பேணப்படுவதில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபை சபையில் ஆராய்ந்து எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதியில் இருந்து நடைபாதை புடைவை வியாபாரத்தை சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் முற்றாகத் தடை செய்வதெனத் தீர்மானித்திருந்தது.

அத்துடன் கொரோனா அச்சநிலைமை இல்லாவிடின் பண்டிகைக் காலங்களில் நகரசபையால் ஒதுக்கப்படும் இடங்களில் நடைபாதை புடைவை வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நடைபாதை துணி வியாபாரங்களைத் தடை செய்வதனால் பல பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பாதிப்பை எதிர்நோக்குவார்கள் எனவும், தையல் தொழிலில் ஈடுபடும் பல பெண்களுக்கு நடைபாதை துணி வியாபாரம் பெரிதும் உதவியாக இருக்கும் எனவும் சில உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவ மயானத்துக்கு இடம் ஒதுக்க தீர்மானம்

சாவகச்சேரி விசேட நிருபர்

கத்தோலிக்க மதம் சாராத கிறிஸ்தவ பொது மயானத்திற்கு இடம் ஒதுக்கிக் கொடுக்க சாவகச்சேரி நகரசபை முடிவெடுத்துள்ளது. நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் விடுத்த கோரிக்கையை அடுத்து கிறிஸ்தவ மயானத்திற்கு இடம் ஒதுக்கிக் கொடுக்க நகரசபை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் கருத்து தெரிவிக்கையில்,

அண்மையில் மேற்குறிப்பிட்ட மதத்தை சேர்ந்த பெண் ஒருவர் நோய்வாய்ப்பட்டு மரணித்த போது அவரின் உடலை கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் புதைக்க சாவகச்சேரி நகரசபை முதலில் அனுமதி கொடுத்து பின்னர் அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தது.

இருப்பினும் பின்னர் எனது கோரிக்கையின் பயனாக இந்து மயானத்தில் அடக்கம் செய்ய அனுமதிக்கப்பட்டது. ஓர் சடலத்தை அடக்கம் செய்யும் வேளையில் இடம் ஒதுக்க முடியாது என மறுப்பது மனசாட்சிக்கு விரோதமான செயற்பாடு. ஓர் மனிதன் கருவில் உருவானதில் இருந்து இறக்கும் வரை அந்த மனிதனுக்கான சேவைகளை வழங்குவதில் நகரசபையின் பங்கு அளப்பரியது.

இந்து மயானத்திற்கு கொடுக்கும் அதே முக்கியத்துவத்தினை கிறிஸ்தவ பொது மயானம் அமைக்கவும் வழங்க வேண்டும். சாவகச்சேரி நகரில் 300க்கு மேற்பட்ட கத்தோலிக்க மதம் சாராத கிறிஸ்தவர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் எமது நகரசபையில் தொழிலாளர்களாக உள்ளனர். அவர்களின் உடல்களை புதைப்பதற்கான இடத்தை இதுவரை ஒதுக்காமல் விட்டது நகரசபையின் தவறு என்றார்.

சபை நிதியில் மரண அமரர் ஊர்தி கொள்வனவு செய்ய வேண்டும்

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் பிரேரணை

சாவகச்சேரி விசேட நிருபர்

ஏழைக் குடும்பங்களுக்கு உதவும் நோக்கில் சாவகச்சேரி நகரசபை வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் மரணச் சடங்கிற்கு வாடகைக்கு அமர்த்தும் அமரர் ஊர்தி ஒன்றினை கொள்வனவு செய்ய வேண்டுமென நகரசபையின் கல்வயல் வட்டார உறுப்பினர் ப.நந்தகோபால் சபையில் பிரேரணை சமர்ப்பித்துள்ளார்.

அவர் தனது பிரேரணையில்;

சாவகச்சேரி நகரசபை 2021ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் மரணச் சடங்குகளுக்கு வாடகைக்கு விடும் அமரர் ஊர்தி ஒன்றினைக் கொள்வனவு செய்ய வேண்டும். சாவகச்சேரியில் பல ஏழைக் குடும்பங்கள் மரணச் சடங்கின் போது அத்தியாவசிய செலவுகளை ஈடுகட்ட முடியாத நிலையில் உள்ளனர்.எனவே சாவகச்சேரி நகரசபை காரினை கொள்வனவு செய்து மிகக் குறைந்த வாடகையில் அதனை ஏழைக் குடும்பங்களின் மரணச் சடங்குகளின்போது சடலத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்ல உதவ வேண்டும். இது பல குடும்பங்களுக்கு மிகப்பெரிய உதவியாக அமையும்.

கச்சாயில் வாள் வெட்டுகளுடன் தொடர்புபட்ட சந்தேகநபர் கைது

பருத்தித்துறை விசேட நிருபர்

சாவகச்சேரி கச்சாய் பகுதி வீடொன்றில் வைத்து வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சாவகச்சேரி கச்சாய் பகுதியில் வாள் வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் ஒருவர் பதுங்கியிருப்பதாக பொலிசாருக்கு ஞாயிற்றுக்கிழமை இரகசிய தகவல் கிடைத்துள்ளது. பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிசார் குறித்த வீட்டினை சுற்றிவளைத்து தேடுதலில் ஈடுபட்டனர்.

இந்த சுற்றிவளைப்பின் போது யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் 31 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டதாக பொலிசார் குறிப்பிட்டனர்.

பொலிசார் மேற்கொண்ட ஆரம்ப விசாரணையில் குறித்த இளைஞன் வவுனியா பேருந்து நிலையத்தில் சாதாரன ஊழியராக பணியாற்றுவதாகவும் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவங்களுடன் பிரதான சந்தேகநபராக தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இருப்பதாகவும் பொலிசார் கூறினர்.

யாழில் குளங்கள் புனரமைப்பு

புங்குடுதீவு குறூப் நிருபர்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பெரியகுளம், சின்னக்குளம் ஆகியவற்றை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் கே.எம் நிலாம் மேற்கொண்ட நடவடிக்கையின் பலனாக கடந்த 3 தினங்களாக இவ் இரு குளங்களில் போடப்பட்ட குப்பைகூழங்கள் காடுமண்டிய இடங்கள் என்பன கனரக வாகனங்களின் உதவியுடன் அகற்றப்பட்டு வருகின்றன.

யாழ் மாநகர சபையின் 2020 ஆண்டிற்கான நிதியொதிக்கீட்டின் கீழ் இப் பகுதியில் சீரற்று காணப்படும் இரு குளங்கள் மற்றும் வடிகால்கள் அனைத்தும் இனங்காணப்பட்டு சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜே87 ஜே88 கிராம சேவகர் பிரிவில் உள்ளடங்கும் பொம்மைவெளியின் சில பகுதி மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டதுடன் இதற்கு நிரந்தரத் தீர்வொன்று அவசியம் குறித்தும் மாநகர சபை உறுப்பினரால் யாழ் மாநகர முதல்வரின் கவனத்திற்கு எடுத்தச் செல்லப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இதன் ஒரு கட்டமாக இரு குளங்களும் தூர்வாரப்பட்டு நீர் வழிந்தோடும் சீரற்ற வடிகான்கள் அடையாளம் காணப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு குப்பைகூழங்களை அகற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒரு மாதத்தில் 8 வீடுகளில் தண்ணீர் மோட்டர்கள் களவு

கோப்பாய் நிருபர்

யாழ்.கொக்குவில் கிழக்குப் பகுதியில் கடந்த ஒரு மாதத்திற்குள் 8 வீடுகளில் தண்ணீர் இறைக்கும் மின்சார மோட்டார்கள் களவு போயிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கொக்குவில் சபாவதி ஒழுங்கை, பழைய தபால் கந்தோர் ஒழுங்கை, அச்சுக்கூட ஒழுங்கை, தலையாளி போன்ற பகுதிகளில் உள்ள வீடுகளிலே இந்த திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் அந்த இடங்களிலேலே இருப்பதாகவும் இரவு நேரங்களில் நடமாடுவது சி.சி.ரி கமெராவில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் வீடுகளில் இறங்கும் திருடர்கள் கைக்கு அகப்படும் இலத்திரனியல் பொருட்கள் உட்பட வாழைக்குழை, அம்மி தொடக்கம் ஒன்றையும் விட்டு வைப்பதில்லை என தெரிவிக்கின்றனர்.

வாழ்வாதார உதவி வழங்கல்

கோவில்குளம் குறூப் நிருபர்

வவுனியா செட்டிக்குளம் மணியர்குளத்தில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பம் ஒன்றிற்கு தமிழ் மக்கள் நிலம் அமைப்பினரால் வாழ்வாதார உதவி வழங்கி வைக்கப்பட்டது.

வடக்கில் நடைபெற்ற உள்நாட்டு போரின் போது கணவனை இழந்த நான்கு பிள்ளைகளின் தாயார் ஒருவருக்கு வாழ்வாதார உதவியாக பல் பொருள் அங்காடி ஒன்று திறந்து கையளிக்கப்பட்டது. தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் தலைவர் வி.விநோதரன் தலைமையில் ஒரு இலட்சம் ரூபா புலம் பெயர் நிதியினூடாக குறித்த பல் பொருள் அங்காடி திறந்து கையளிக்கப்பட்டது.

இந்நிதியானது புலோலி வடக்கு பருத்தித்துறையை சேர்ந்த லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட நாகராசா கிருஸ்ணகாந்தன், நாகராசா மதனகாந்தன், சிவநேசன் நந்தகோபாலன், இராமேஸ்வரன் அங்கனன், தாவடி கொக்குவில்லைச் சேர்ந்த சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகக் கொண்ட யோகலிங்கம் வசந்தன் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் இவ் வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது.

மீனவரின் படகு, உபகரணங்கள் எரிப்பு

பருத்தித்துறை விசேட நிருபர்

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று தனிப்பனை கிராமத்தில் கடற்றொழிலாளர் ஒருவரின் படகு, வெளியிணைப்பு இயந்திரம் மற்றும் பெறுமதியான வலைகள் விஷமிகளால் தீயிட்டு எரிக்கப்பட்டு ள்ளன.

தனிப்பனை கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த கிராமத்தை சேர்ந்த தர்மபிரகாசம் உதயதாஸ் என்பவரின் படகே இவ்வாறு விசமிகளினால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார். அத்துடன் யாழ் மாவட்ட நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்கும் தகவல் வழங்கியுள்ளார்.

வெட்டுச் சம்பவத்தில் காயமடைந்தவர் மரணம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாணிக்கர் வளவுப்பகுதியில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற வெட்டுச் சம்பவத்தில் காயமடைந்திருந்தவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார். முல்லைத்தீவு கரிப்பட்ட முறிப்பு பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவாகரன் என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி இப் பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற வெட்டுச் சம்பவத்தில் இரண்டுபேர் மரணமடைந்திருந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்திருந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருந்ததுடன் கடந்த இரண்டு நாட்களாக வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

04 கஞ்சா செடிகளும் துப்பாக்கியும் மீட்பு

வவுனியா விசேட நிருபர்

வவுனியா முருகனூர் பகுதியில் 6 அடி நீளமான கஞ்சா செடி நான்கு மீட்கப்பட்டதுடன், துப்பாக்கி ஒன்றும் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் சந்தேகநபரொருவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய உப பொலிஸ் பரிசோதகர் பிரனீத் திலா நாயக்கா தலைமையில் பொலிஸ் சார்ஜன்களான விக்கிரமசூரிய, நிசாந்த மற்றும் பொலிஸ் கொஸ்டபிள்களான தயாளன், உபாலி, சமீர, ரணசிங்க ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினர் முருகனூர் பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

துளிர்

பவதாரணி ராஜசிங்கம்

Anticipation என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் எதிர்பார்ப்பு என்பது மனரீதியான எதிர்காலத்திற்கான வேட்கை எனலாம். அதாவது ஒரு விடயம் அல்லது சம்பவம் இப்படியாக நடக்க வேண்டும்; இப்படியாகவே அமைய வேண்டும் என்ற எண்ணம். இதுவே எதிர்பார்ப்பு எனலாம். இந்த எதிர்பார்ப்பானது உளவியலாளர்களின் கருத்துப்படி ஒருவர் தன் வாழ்வினை இரசிக்கவும், மகிழவும், வலியிலிருந்து மீளவும் உதவுகின்றது.

நாம் வாழ்க்கையின் பல சந்தர்ப்பங்களிலும் எதிர்பார்கின்றோம். அந்த எண்ணம் பெரியதோ சிறியதோ என்பதெல்லாம் பொருட்டில்லை. மனிதன் அவனது குழந்தைப் பருவத்திலிருந்தே எதிர்பார்க்க தொடங்குகின்றான். தமக்கு இப்படிப்பட்ட குழந்தைகள் பிறக்கவேண்டும், அவர்கள் என்னவாக உருவாக வேண்டும், குழந்தைகளுக்கோ தாங்கள் எப்படி விளையாட வேண்டும், இளவயதினருக்கு தங்களது வாழ்கை பற்றிய எதிர்பார்ப்பு இப்படி அவை விரிந்துகொண்டே செல்லும்.

நமக்குள் இருக்கின்ற அல்லது உருவாகின்ற எண்ணமே எதிர்பார்ப்பு. ஆக நாம் எதிர்பார்பதெல்லாம் நடந்துவிடுவதில்லை. அதற்கு நமது முயற்சியும் அவசியமானது. நாம் எதையும் எதிர்பார்க்கலாம். ஆனால் நீ எதுவாக நினைக்கின்றாயோ அதுவாகவே ஆகின்றாய் என்ற வாக்கினை நாம் மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும். அத்தோடு இன்னுமொன்றும் முக்கியமானது. நாம் எதனை; எப்போது; எதிர்பார்கின்றோம் என்பதுவே அது.

ஆம், எந்த முயற்சியும் இல்லாத ஒருவன் தனக்கு வேலை கிடைக்க வேண்டும் என்றோ அல்லது பணக்காரன் ஆகவேண்டுமென்றோ எதிர்பார்ப்பது வேடிக்கையானது. அப்படி நடந்தால் இது அதிஷ்டம். சினிமாபாடல் ஒன்றுகூட உள்ளது.

"கிழிந்த பாயில் கவுந்து படுக்கும் போது உன் கனவில் கிளியோபேட்ரா வந்தா லவ்வில்லை" இது கேளிக்கைகுரியதாயினும் இதுவே யதார்த்தம். இதன் அர்த்தம் தகுதி பற்றியது அல்ல. முயற்சியுடன் இணைந்தது.

நம்மிடம் எதிர்பார்புகள் ஏராளம் இருக்கலாம். ஆனால் எதை; எப்போது; எவ்வாறு; எதிர்பார்க்கின்றோம் என்பது மிக முக்கியமானது. பொருத்தமானவற்றை பொருத்தமான நேரத்தில் எதிர்பார்த்தருக்கிறோமா? அப்படி பொருத்தமானவை தோற்றுப்போகாது.

ஏதோ ஒரு விடயத்தை நாம் நீண்டகாலமாக எதிர்பார்த்திருக்கிறோம் என்பதைவிடவும் அதனை உரிய நேரத்தில் உரிய காய்நகர்த்தல்களின் மூலம் வெற்றிகொள்வதே வெற்றி. நேரம் தவறிய எந்தவொரு எதிர்பார்ப்பும் பலனை பெற்று வெற்றி தருவதில்லை.

இங்கிலாந்தின் பிரதமர் வின்ஸடன் சர்சில் அவரது பாராளுமன்ற உரையை தயாரிக்கும்போது அவற்றில் இடைவெளிகளிட்டு அந்த இடைவெளிகளில் அடைப்பு குறிக்குள் மக்கள் கைதட்டுவர், சபை சிரிக்கும் என எழுதியிருப்பாராம்.

இதுவும் ஒரு எதிர்பார்ப்பே. தன்னை மிகச்சிறப்பாய் தயார்ப்படுத்திய பின்னர் தன்மீதான மக்களின் விருப்பு இப்படியிருக்கும் அதனது பேச்சன் மீதான ஆரவாரம் இப்படியாக இருக்கும் என அவர் எதிர்பார்த்தார் அது நிறைவேறியது.

பல்துறைசார்ந்த வெற்றியாளர்களும் மிகச் சரியான நேரத்தில் தங்களை முன்னிலைப்படுத்தி தமது எதிர்பார்ப்பை பூர்த்தி செய்துள்ளனர். காலம்தவறிய எதிர்பார்ப்புகளே தோல்விகளை சந்திக்கின்றன; ஆனாலும் அத்தனை கடினமில்லை; தொடர்முயற்சி வெற்றியை தரும்.

பொதுவாக அறிவியலாளர்கள் தமது எதிர்பார்புக்களுக்கு இடம்கொடுப்பது அதிகம். ஒருவிடயம் தன்னால் கண்டுபிடிக்கப்பட்டு இருப்பினும் நீண்ட அல்லது குறுகிய காலத்தின் பின்னர் நிச்சயம் அந்த கண்டுபிடிப்பு மெருகேறலாம்; வளரலாம்; என்பது அவர்களது எதிர்பார்ப்பு.

உதாரணமாக மெண்டலிவ் தணிமங்களின் அணு எடையை வரிசைப்படுத்தும்போது தான் கண்டறித்த இடங்களை நிரம்பி மிகுதியாக இடம் விட்டிருந்தார். ஏன் என்ற கேள்விக்கு பின்னாளில் புதியவை வரும் என அவர் எதிர்பார்த்தார். ஆக இந்த எதிர்பார்ப்பே அவரை வெற்றியாளராய் இன்றும் நம்மிடையே அடையாளப்படுத்துகின்றது.

நாமும் காலத்தை தக்கபடி பயன்படுத்திக் கொண்டு சிறப்பாக வாழவேண்டும். நமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக்கொள்ள நாம் காலத்தே பயிர் செய்வதே சமயோசிதமானது. பகல் சாதமான சுழலை ஆந்தைக்கு தருவதில்லை என்பதனால் அது இரவில் வேட்டையாடும். இரை அதன் எதிர்பார்ப்பு; ஆனால் காலமே அதற்கு தேவையுடையது. காலம் கருதி காத்திருப்பதும் நம்மை செம்மைபடுத்தி வெற்றிக்கான பயணத்திற்கு வழிவகுக்கும்.

"பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது"

அதாவது பகலில் வெற்றி பெறும் காகம், இரவில் வெற்றி பெறும் கூகை. வெல்வது பொதுவான எதிர்பார்ப்பு. அதனை உருவாக்கிக்கொள்ளவதற்கு உரிய நேரத்தை கைக்கொள்ள வேண்டும். வெற்றி பெறுவோர் எதிர்பார்பை மட்டும் நம்பியிருத்தலன்றி முயற்சியுடன் காலத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.

கிழக்கின் குரல்

தமிழ் மக்களின் பூர்வீகம் அழிக்கப்படுவதாக மக்கள் அச்சம்

ஆக்கிரமிக்கப்படும் பொத்துவில் செங்காமம்

வாச்சிக்குடா விஷேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள செங்காமம் கிராமத்தில் அம் மக்களின் ஜீவனோபாய சேனை பயிர் செய்கையினை ஊடறுத்து வன பரிபாலன இலாகாவினால் இரவோடு இரவாக எல்லை கல் நடப்பட்டு அந்த மக்களின் வாழ்விடங்களில் இருந்து அரச காணியை அபகரித்ததாக சோடனை செய்து விரட்டி விடப்பட்டுள்ளனர். இதனை மீறி அந்த மக்கள். வாழ்ந்த காணிக்குள் சென்ற குடியிருப்பு வாசிகள் மீது சட்டத்தை பிரயோகிப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

81% மேற்பட்ட முஸ்லிம்கள் வாழும் பிரதேசத்தில் தமிழ் மக்கள் 18%வீதம் வாழ்கின்றனர். அண்மை காலங்களாக தமிழர்களின் ஆதிக்கம் பொத்துவில் பிரதேசத்தில் அரசியல், நிருவாக ரீதியாக வளர்ச்சி பெற்று வருகிறது. குறிப்பாக பொத்துவில் பிரதேச சபை உப தவிசாளராக பி.பார்த்தீபன், வரலாற்றில் முதல் தடவையாக பொத்துவில் பிரதேச செயலாளராக ஆர். திரவியராஜ் ஆகியோர் நியமிக்கப்பட்டார்.

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள செங்காமம் பிரதேசம் கடந்த காலங்களில் யுத்த சூழ்நிலையில் வெகுவாக பாதிக்கப்பட்ட ஒரு கிராமம்.

முஸ்லிம் சமூகத்தின் ஆதிக்கம் நிறைந்த பகுதி என்பதால் அந்த மக்களின் அடிப்படை ஜீவனோபாய வசதிகள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளன.

கடந்த சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பல வீட்டு திட்ட வசதிகள் மூலம் நூற்றுக்கணக்கான வீடுகள் குறித்த பகுதியில் அமைக்கப்பட்டன. ஆனால் வீட்டிற்கான எந்த வித அறுதி பத்திரங்களோ ஆவணங்களோ அன்றி வாழ்ந்து வந்த நிலையில் தற்போதைய பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் அப்துல் வாஷித் உள்ளிட்ட உள்ளூர் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் சொந்தம் கொண்டாடி வருகின்றனர்.

கிழக்கு மாகாண

வைத்தியசாலைகளில் நோயாளர் பார்வையிடல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

ஒலுவில் விசேட நிருபர்

கொரோனா தொற்றுத் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களை பார்வையிடச் செல்பவர்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ. லதாகரன் தெரிவித்தார்.

வைத்தியசாலை விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களை பார்வையிடுவதற்காக அதிகமானவர்கள் செல்ல வேண்டாமெனவும் நோயாளிக்கு தேவையான பொருட்களை வைத்தியசாலை நிருவாகத்தின் ஆலோசனைக்கமைவாக பொருத்தமான வழிமுறைகளை கடைப்பிடிக்குமாறும் தெரிவித்தார்.

வைத்தியசாலைகளுக்குச் செல்லும் பொதுமக்கள் முகக்கவசம் கட்டாயம் அணிந்திருத்தல் வேண்டுமெனவும், சமூக இடைவெளியைப் பேணுதல் மற்றும் கை கழுவுதல் ஆகியவற்றை கட்டாயம் கடைப்பிடித்தல் வேண்டுமெனவும், தெரிவித்தார்.

அத்தியாவசிய மருந்துத் தேவைகளுக்காக மட்டுமே வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டுமெனவும், உடனடியாக வைத்தியசாலையை விட்டும் வெளியேற வேண்டுமெனவும், பொது மக்களை கேட்டுள்ளார்.

நிந்தவூர் பிரதேசத்தில் அடிக்கடி நீர் வெட்டு

அதிகாரிகள் அசமந்தம், மக்கள் தவிப்பு

நிந்தவூர் குறூப் நிருபர்

நிந்தவூர் பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக எவ்வித முன்னறிவித்தலும் இன்றி, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் தடைப்பட்டு காணப்படுவதனால் பொதுமக்கள் பெரிதும் அசௌகரியத்திற்கு உள்ளாவதுடன், நீரின்றி தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையானது நிந்தவூர் பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக தொடராக நிகழ்ந்து வருவதோடு, இவ்விடயத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகள் அசமந்தமாக செயற்படுவதுடன், எவ்வித முன் அறிவித்தல்களும் இல்லாமல் நீர் விநியோகம் துண்டிக்கப்படுகிறது.

குறிப்பாக காலை வேளையிலும், இரவு நேரத்திலும் இந்நீர் விநியோகம் தடைப்படுவதினால், நீரை சேமிக்க முடியாமல் இப்பிரதேச மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

எனவே தொடர் நீர் தடை விடயத்தில், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும், நீர் விநியோகத்தினை முறையாக தங்களுக்கு வழங்க வேண்டும் எனவும் இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுப்பதுடன், குறிப்பாக நீர்தடை ஏற்படுமிடத்து முன்கூட்டியே தங்களுக்கு அறிவுக்குமாறும் பொது மக்கள் கோருகின்றனர்.

கொமர்ஷல் வங்கியின் சமூகப்பணித் திட்டத்தின் மூலம் அக்கரைப்பற்று அர்ரஹீமியா வித்தியாலயத்தில் 15 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கணினி தொழில் நுட்பக் கூடத்தின் திறப்பு விழா பாடசாலையில் நடைபெற்ற போது.

(படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய 49 வர்த்தகர்களுக்கு 02 இலட்சம் அபராதம்

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 49 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 02 இலட்சத்து 02 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி என்.எம். சப்றாஸ் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில், நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, அம்பாறை, தெஹியத்தக்கண்டி ஆகிய பிரதேசங்களிலுள்ள வர்த்தக நிலையங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் இம்மாதம் மேற்கொள்ளப்பட்ட 120 பரிசோதனையின் போது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 49 வர்த்தகர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதல் விலைக்கு அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அரிசியை விற்பனை செய்த வர்த்தகர்கள் இச் சுற்றிவளைப்பின் போது கண்டுபிடிக்கப்பட்டதாக, கூறினார்.

மேலும் வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவே, நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும், கூறினார்.

மருதமுனையில் 15 குழுக்கள் டெங்கு ஒழிப்பு செயலணியில்

பெரிய நீலாவணை தினகரன் நிருபர்

கல்முனை தெற்கு சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட மருதமுனைப் பிரதேசத்திற்கான டெங்கு ஒழிப்பு செயலணி வேலைத்திட்டம் தொடராக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மருதமுனை அக்பர் கிராமம் பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு உள்ளிட்ட பகுதிகளில் 15 பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுக்களால் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பகின்றன.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஐ.றிஸ்வின் தலைமையில் நேரடித் தரிசிப்பின் மூலம் முன்னெடுக்கப்படும் இவ் வேலைத் திட்டத்தால் வீடுகள் மற்றும் காணிகள் பரிசோதிக்கப்பட்டன. நுளம்கள் பரவுவதற்கு சாதகமான இடங்கள் இனங்காணப்பட்டதுடன் குடியிருப்பாளர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டன.

மக்கள் பிரச்சினை தீர்க்க மாற்று ஏற்பாடு; கிழக்கு மாகாண ஆளுநர் அறிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் மக்கள் பிரச்சினைகளை தீர்க்க அவசர தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்க கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தீர்மானித்துள்ளார்.

கோவிட் 19 வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த நாட்டின் பல அரச நிறுவனங்கள் சிறப்பு சுகாதார அறிவுறுத்தல்கள் குறித்த பொது நடவடிக்கைகளை தடை செய்துள்ளதால் ஆளுநர் இந்த முடிவை எடுத்துள்ளார். இந்த வைரஸ் காரணமாக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது ஒத்திவைக்கப்படுவது நியாயமில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் செய்திகளுக்கு மேலதிகமாக, அஞ்சல் மூலமும் மக்கள் தங்கள் கோரிக்கைகளையும் சமர்ப்பிக்க வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இது கோவிட் 19 வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தவும், பல்வேறு முகவர்களால் மக்களை தவறாக வழி நடத்துவதைத் தடுக்கவும் உதவும்.

ஆளுநர் அலுவலகத்தில் உள்ள மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி மூலமாகவும் 0262222102, governorep@gmail.com மக்கள் தங்கள் பிரச்சினைகளை முன்வைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேகக்கட்டுப்பாட்டை மீறி கார் விபத்து; இருவர் படுகாயம்

வெல்லாவெளி தினகரன் நிருபர்

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு பிரதான வீதியில் அதி சொகுசு கார் விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளதுடன் கார் முற்றாக சேதமடைந்துள்ளது.

நேற்று அதிகாலை தேற்றாத்தீவு உபதபால் அலுவலகத்துக்கு முன்னால் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கி பயணித்த அதிசொகுசு கார் வேகத்தினை கட்டுப்படுத்த முடியாமல் வீதியில் அமைக்கப்பட்ட மதகினை ஊடறுத்துடைத்து மோதுண்டு தடம்புரண்டுள்ளது.

இவ்விபத்தில் காரில் பயணித்த சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சிசிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்தின்போது கார் முற்றாக சேதமடைந்துள்ளதுடன். இது தொடர்பான மேலதிக விசாரணையை களுவாஞ்சிக்குடி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டு. போதனா வைத்தியசாலையில் குருதித் தட்டுப்பாடு

மண்டூர் குறூப் நிருபர்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அதிகளவு குருதி தேவை உள்ளதனால் குருதி கொடையாளர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக குருதிக் கொடையாளர்களின் வரவு கணிசமாக குறைந்துள்ளமையினாலே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பல்வேறு நோய் நிலைகளில் உள்ளவர்களுக்கு நாளொன்றுக்கு சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட குருதி பக்கெற்றுக்கள் தேவைப்படுவதனால் குருதித் தானம் செய்ய முன்வரும் குருதிக் கொடையாளர்கள் பாதுகாப்பான முறையில் வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவுக்கு வருகை தந்து குருதிக் கொடைகளை வழங்குமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

'சாரா என்ற புலஸ்தினி உயிருடன் இருக்கிறார்' தகவல் வழங்கிய நபருக்கு அச்சுறுத்தல்

சாய்ந்தமருது தற்கொலை தாக்குதலில் சம்பந்தப்பட்டவர் என கூறப்படும் சாரா என்ற புலஸ்தினி உயிருடன் இருப்பதாகவும் தான் அவரை கண்டதாக தகவல் வழங்கிய நபருக்கு இனந்தெரியாதவர்கள் அச்சுறுத்தல் விடுப்பதாக கல்முனை நீதிமன்ற நீதவானின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட வழக்கு விசாரணை தேவை ஏற்பட்டின் அழைப்பு விடுக்கப்படும் என கல்முனை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு திங்கட்கிழமை கல்முனை நீதிமன்ற நீதவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் மேற்கண்டவாறு உத்தரவு வழங்கப்பட்டது.

இதன் போது கடந்த தவணையில் அச்சுறுத்தல் தனக்கு விடுக்கப்பட்டதாக தெரிவித்து வாக்குமூலம் வழங்கிய நபர் ஆஜராகவில்லை. அவர் சார்பாக சட்டத்தரணி ஆஜராகி இருந்தார்.

இந்நிலையில் விசாரணை நடத்திய நீதவான் எதிர்வரும் தவணைகளில் வாக்குமூலம் வழங்கிய நபர் ஆஜராக தேவையில்லை எனவும் தேவை ஏற்படின் அழைப்பாணை வழங்கப்படும் என குறிப்பிட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை குறித்த வழக்கினை ஒத்தி வைத்தார்.

மேலும் சாய்ந்தமருது தற்கொலை தாக்குதலில் கொல்லப்பட்டதாக கூறப்படும் 16 பேரின் உடற் பாகங்களையும் குடும்ப உறுப்பினர்களின் மரபணு பரிசோதனை அறிக்கைகளை கொண்டு பகுப்பாய்வு செய்ததில் சந்தேகத்திற்கிடமாக தேடப்படும் சாரா எனப்படும் புலஸ்தினி மகேந்திரன் என்பவரின் மரபணுபரிசோதனை அறிக்கை(DNA) பொருந்தவில்லை என மன்றில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர் தப்பி சென்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு விசாரணையை தொடர்ந்து தற்கொலை குண்டுத் தாக்குதல் இடம்பெற்று சில தினங்களுக்கு பின்னர் மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் எல்லைக்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் சாரா என்றழைக்கப்படும் புலஸ்தினி என்பவரை கண்டதாக 43 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் பாதுகாப்பு தரப்பினரிடம் தகவல் ஒன்றினை வழங்கி இருந்தார்.

இவ்வாறு தகவல் வழங்கிய குறித்த நபருக்கு இனந்தெரியாதோரினால் தொலைபேசி ஊடாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக சட்டத்தரணி ஒருவர் ஊடாக கடந்த ஒக்டோபர் மாதம் திங்கட்கிழமை (5) அன்று கல்முனை நீதிமன்ற நீதவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் தனக்கு நிகழ்ந்த அச்சுறுத்தல் விடயமாக நீதவானுக்கு மூடிய அறையில் வாக்குமூலம் ஒன்றினை வழங்கி இருந்தார்.

இதற்கமைய குறித்த விடயத்தை விசாரணை செய்த நீதவான் மேலதிக நடவடிக்கை ஒன்றை எடுப்பதற்காக இன்று ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாறுக் ஷிஹான்

கிழக்கின் குரல்

கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழு

முறைப்பாடுகளை தொலைபேசி மூலம் மட்டுமே தெரிவிக்கலாம்

இணைப்பாளர் இஸ்ஸதீன் லத்தீப்

நாட்டில் மீண்டும் ஏற்பட்டுள்ள கொரோன வைரஸ் அச்ச நிலையை அடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய அலுவலகம் கடந்த (16) முதல் மறு அறிவித்தல் வரும்வரைக்கும் மூடப்பட்டிருப்பதுடன் ஆணைக்குழுவில் முறைப்பாட்டுகளை அறிவிக்க தொலைபேசி இலக்கம் தொலை நகல் இலக்கம் அறிமுகம் செய்துள்ளது.

இதற்கமைய அலுவலகம் மூடப்பட்ட காலப்பகுதியில் மனித உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகளை 1996 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் இஸ்ஸதீன் லத்தீப் தெரிவித்திருந்த நிலையில் மனித உரிமை மீறல் தொடர்பாக முறைப்பாடு செய்ய விரும்புகின்றவர்கள் தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட தொலை நகல் தொலைபேசி இலக்கங்களின் மூலம் மேற்கொள்ள முடியும் என தெரிவித்துள்ளார்.

கொவிட்19 கொரோனா வைரஸ் தாக்கம் இலங்கையிலும் மீண்டும் பீடித்துள்ள நிலையில் அதனை கட்டுப்படுத்த அரசாங்கத்தினால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன்படி அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு கடந்த தினங்களில் அரசு அறிவித்திருந்தது.

இதன்படி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய அலுவலகமும் தற்போது மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரையில் மூடப்பட்டுள்ளது.

மேலும் பதிவு செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பிலான நடவடிக்கை இலகுபடுத்துவதற்காக புதிய தொலைநகல் 0672229728 எனும் இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அவசர மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு மகஜர் ஒன்றின் மூலம் சந்திக்க முடியும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.எல்.இஸ்ஸதீன் தெரிவித்தார்.

உழவு இயந்திரம் - டிப்பர் வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்து

கல்குடா தினகரன் நிருபர்

டிப்பர் வாகனமும் உழவு இயந்திரமும் நேருக்கு நேர் மோதியதில் உழவு இயந்திரத்தின் சாரதி காயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாகனேரி பிரதேசத்திலிருந்து ஓட்டமாவடி நோக்கி வந்த உழவு இயந்திரமும் ஓட்டமாவடியில் இருந்து வாகனேரி பிரதேசத்தை நோக்கி சென்ற டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஓட்டமாவடி பிரதேசத்தில் இருந்து வாகனேரி நோக்கி சென்ற டிப்பர் வாகனம் எதிரே வந்த டிப்பர் வாகனம் ஒன்று போவதற்கு வழிவிட்ட சந்தர்ப்பத்தில் டிப்பருக்கு பின்னால் வந்த உழவு இயந்திரம் டிப்பருடன் மோதியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். காயமடைந்த உழவு இயந்திரத்தின் சாரதி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சிசைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 20ஆவது ஆண்டு நினைவஞ்சலி

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 20ஆவது ஆண்டு நினைவு தினம் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மட்டு. ஊடக அமையம் ஆகியனவற்றின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிமலராஜனின் திருவுருவப்படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு 20 சிட்டிகளில் சுடரேற்றி மலரஞ்சலியும் ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான பா.அரியநேத்திரன் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் எஸ்.நிலாந்தன் பொருளாளர் பு.சசிகரன் உட்பட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ் ஊடகவியலாளர் மீதான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் தமது கடமையை ஊடகவியலாளர்கள் முன்னெடுப்பதற்கான சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை இதன்போது முன்வைக்கப்பட்டது.

ஊடகவியலாளர் நிமலராஜன் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து சுட்டுப்படுக்கொலை செய்யப்பட்டார்.

மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

சந்திரகாந்தன் கலந்துகொள்ள நீதிமன்றில் அனுமதி கோரல்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நீதிமன்றத்தின் அனுமதி கோரி நேற்று முன்தினம் சட்டத்தரணி மூலம் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் கோரப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை வழக்கு நேற்று முன்தினம் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது சிவநேசதுரை சந்திரகாந்தனின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஏ.உவைஸ் இந்த அனுமதியை கோரியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதால் இவர் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கான நீதிமன்ற அனுமதியைக் கோரும் அறிப்பை நீதிதிமன்றத்தில் சட்டத்தரணி உவைஸ் வெளிப்படுத்தினார்.

இதனையடுத்து எதிர்வரும் 23 வெள்ளிக்கிழமை இதனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதென மட்டக்களப்பு மேல் நீதிமன்ற விஷேட நீதிபதி சூசைதாசன் அறிவித்துள்ளதாக சந்திரகாந்தனின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

அன்றைய தினம் விளக்கங்களுடன் இதற்கான அனுமதி கோரும் விண்ணப்பத்தினையும் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கவுள்ளதாகவும் சந்திரகாந்தனின் சட்டத்தரணி உவைஸ் மேலும் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ முன்னெச்சரிக்கை; பிரதேச மட்ட பொதுக் கூட்டம்

வாச்சிக்குடா விஷேட நிருபர்

அனர்த்த முகாமைத்து முன்னெச்சரிக்கை பிரதேச மட்ட பொதுக் கூட்டம்' திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ரி.கஜேந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இராணுவத்தின் 242 ஆவது கட்டளை அதிகாரி ஹெமால் பீரிஸின் பங்குபற்றுதலோடு இடம் பெற்ற இக்கூட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் எதிர்வரும் காலங்களில் ஏற்படக்கூடிய வெள்ள அபாயம், கொவிட்19 தொற்று, டெங்கு மற்றும் மலேரியா பரவல் தொடர்பான அபாயத்தினைக் குறைப்பது தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கை தொடர்பில் ஆராயப்பட்டது.

கலந்துரையாடலில் 242 ஆவது படைப்பிரிவின் சமூக விழிப்பூட்டல் உத்தியோகத்தர் கேணல் விஜயரத்ன மற்றும் சாகாம விசேட அதிரடிப் படை பொறுப்பதிகாரி ஏ.டபிள்யு. ராஜபக்ச, சங்கமன் கிராம கடற்படை பொறுப்பதிகாரி தம்மிக்க, உதவிப்பிரதேச செயலாளர். அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் பின்னர் பல முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன

வடிகான்களை துப்புரவு செய்தல். வெற்று வளவுகளில் அமைக்கப்பட்டிருக்கும் பாவனை அற்ற கிணறுகளை மண் இட்டு மூடுதல். டெங்கு, மலேரியா கட்டுப்படுத்தல் குழுவினர்களின் தீர்மானங்களை நடைமுறைக்கு கொண்டுவருதல், பிரதேச செயலகம், இராணுவம், கடற்படை, பொலிஸ் விசேட அதிரடிப்படை, சுகாதார திணைக்களம், பிரதேச சபை மற்றும் ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் ஒன்றிணைந்ததான வேலை திட்டங்களை அமுல்படுத்துதல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இத்தீர்மானங்களினால் பிரதேச மட்டத்தில் ஏற்படும் அனர்த்த அபாயங்களை கட்டுப்படுத்த முடியும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்திற்கான பொதுச் சேவையில் 93 பட்டதாரிகள் மற்றும் 16 தொழில்நுட்ப அதிகாரிகளுக்கான நியமனங்களை கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத் திருகோணமலை மாகாண தலைமைச் செயலகத்தில் வழங்கி வைத்த போது.

மட்டு. மாவட்டத்தில் கொவிட் 19 விழிப்புணர்வு, பாதுகாப்பு நடைமுறைகள்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்க பொது இடங்களில் விழிப்புணர்வும் தொற்று நீக்கி, முகக் கவசங்கள், துண்டுப் பிரசுர விநியோகமும் மாவட்டம் தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட "அருவி" பெண்கள் வலையமைப்பின் நிறுவனப் பணிப்பாளர் சட்டத்தரணி மயூரி ஜனன் தெரிவித்தார்.

சுகாதாரப் பிரிவு பொலிஸ் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மட்டக்களப்பு மாவட்ட "அருவி" பெண்கள் வலையமைப்பினால் இந்த விழிப்புணர்வு நிகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

செங்கலடி பொதுச் சந்தை வளாகத்தில் நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய மலேரியாத் தடை இயக்க வைத்திய அதிகாரியும் சுகாதார வைத்திய அதிகாரியுமான இளையதம்பி ஸ்ரீநாத், "அருவி" பெண்கள் வலையமைப்பின் அலுவலர்களும் கலந்து கொண்டு விழிப்புணர்வு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் இவ்வருடத்திற்கான ஆய்வு மாநாடு நேற்று பல்கலைக்கழக மட்டக்களப்பு வந்தாறுமூலை வளாகத்தில் நடைபெற்ற போது... (படங்கள்: ஏறாவூர் நிருபர்)

அக்கரைப்பற்றில்

கிளினிக் நோயாளர்களுக்கான மருந்துகள் தபாலில் விநியோகம்

ஒலுவில் விசேட நிருபர்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை கிளினிக் நோயாளர்களின் வீடுகளுக்கு மருந்துகளை தபால் திணைக்களத்தினூடாக இன்று செவ்வாய்க்கிழமை (20) முதல் விநியோகிக்கப்பட்டு வருவதாக, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஜே.எம். ஜவாஹிர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொவிட்19 நோய்த் தொற்று காரணமாக கிளினிக் நோயாளர்களுக்கான மருந்துகளை விநியோகிக்குமாறு சுகாதார அமைச்சினால் விடுத்துள்ள சுற்று நிருபத்திற்கமைய மருந்து விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, தெரிவித்தார். கிளினிக் நோயாளர்கள் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் கிளினிக் பதிவு உள்ள நோயாளர்கள் 0672052068 மற்றும் 0771981879 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

கொவிட் -19 அச்சுறுத்தும் சூழ்நிலையில் சாத்தியமாகுமா சபரிமலை யாத்திரை?

சபரி செல்லாமல் 'விரத முத்திரை மாலை' அணிந்து கொள்வது முறையாகுமா?

அனைத்துக்கும் தெளிவான விளக்கங்கள் தருகிறார் சிவஸ்ரீ. பால. ரவிசங்கர சிவாச்சாரியார்

மகரஜோதி தரிசனத்தின் பொருட்டு இலங்கையிலிருந்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அடியார்கள் வருடந் தோறும் சென்றுவரும் யாத்திரையாக புனித சபரிமலை யாத்திரை விளங்குகிறது. இவ்வருடம் கொவிட் 19 காரணமாக அங்கு செல்லக் கூடிய வாய்ப்பு மிகக் குறைவாக உள்ளன. அந்த யாத்திரைக்கான விரத முத்திரை மணிமாலையை கார்த்திகை 01 ஆம் திகதி அணிவது வழக்கம். எனினும் இவ்வருடம் விரத முத்திரை மணிமாலை அணியலாமா? அணிந்து அந்த விரத அனுட்டானங்களை கடைப்பிடிக்கலாமா? மலை யாத்திரை செல்லக் கூடிய சூழ்நிலை இல்லாத நிலையில் மாலை அணிவது, இங்கேயே விரதத்தினை பூர்த்தி செய்வது, மாலை கழற்றுவது முறையாகுமா?

இவ்வாறான ஐயப்பாடும், முறையான விளக்கமின்மையும் ஐயப்பனடியார்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளன. இந்த சந்தேகங்கள் தொடர்பாக கொழும்பு, கிராண்ட் பாஸ் அருள்மிகு ஸ்ரீ ஞானபைரவர் தேவஸ்தான பிரதம குருவும், ஆதீன கர்த்தாவும், ஸ்ரீ ஐயப்பன் சேவா பீட பீடாதிபதியுமான சிவஸ்ரீ.பால. ரவிசங்கர சிவாச்சாரியார் எமக்கு விளக்கம் அளித்தார்.

கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக புனித சபரிமலை யாத்திரை சென்று வந்தவர் சிவாகம கிரியா பூஷணம் சிவஸ்ரீ.பால. ரவிசங்கர சிவாச்சாரியார் ஆவார்.

கேள்வி: வழமை போல விரத முத்திரை மணிமாலை அணிந்து மகரஜோதி தரிசனத்துக்காக சபரிமலை யாத்திரை செல்லக் கூடிய சூழ்நிலை ஏற்படுமா?

பதில்: கொவிட் 19 காரணமாக முழு உலகமே முடங்கியுள்ள நிலையில் இந்தியாவில்தான் மிக அதிகமாக நோய்த் தொற்றும், அதனால் இறப்பவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகமாக பதிவாகி வரும் சூழ்நிலையை நாம் முதலில் கருத்தில் கொள்ள வேண்டும். இம்முறை இலங்கையிலிருந்து சபரிமலை யாத்திரை செல்வதாயின் நடைமுறையில் மூன்று பிரதான விடயங்களை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். இந்திய மத்திய சுகாதார, சர்வதேச விமான போக்குவரத்து மற்றும் இந்திய விமான சேவைகள் அமைச்சானது இலங்கையிலிருந்து ஏராளமான அடியார்கள் முழுமையாக பதிவு செய்யப்பட்ட தனி விமானங்களில் வருவதற்கு முதலில் அனுமதிக்க வேண்டும். விமான சேவைகள் நடைபெற்றாலும் விமானக் கட்டணங்கள் பல மடங்கு அதிகமாகவே வசூலிக்கப்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. மேலும் இலங்கையிலிருந்து செல்லும் யாத்திரிகர் எவரேனும் தனிமைப்படுத்தல் நடைமுறைக்கு உட்ப

டுத்தப்படலாம். பின்னர் சுயதனிமைப்படுத்தல். இவை அனைத்தும் முதலாவது இந்திய மத்திய அரசின் முடிவுகளிலேயே தங்கியுள்ளன. இந்திய மத்திய அரசு சார்ந்த அமைச்சுகள், துறைசார் அமைச்சுகள் அனுமதியளித்தாலும் கேரள மாநில அரசும், 'தேவஸ்வம் போர்ட்' எனும் அறநெறி துறையும் அனுமதியளிக்க வேண்டும். அதிலும் பிற மாநிலத்தவர்கள் வர அனுமதி, பிற நாட்டினர் வர அனுமதி மற்றும் இணையத்தள (ஒன்லைன்) முன்கூட்டிய முற்பதிவு, கொவிட் 19 தடையில்லாச் சான்றிதழ், தனிமைப்படுத்தப்படல் என்று கேரள மாநில அரசின் விதிமுறைகளும் ஏற்படும். அத்துடன் யாத்திரிகர்கள் பத்து முதல் ஐம்பது வயதுக்குட்பட்டவர்களே அனுமதிக்கப்படுவார்கள் என்ற நிபந்தனைகளும் விதிக்கப்படலாம்.

கொவிட் 19 தற்போதைய நிலையில் பாதிப்பு மிக அதிகமாக உள்ள நாடுகளில் முதன்மையாக உள்ளது இந்தியா. அதுபோல் கொவிட் 19 அற்ற நாடாக முதன்மை வகிப்பது இலங்கை என்பதால் இலங்கையிலிருந்து விமானப் போக்குவரத்து பிற நாடுகளுக்கு ஆரம்பிக்கப்பட்டாலும் இந்தியாவிற்கு குறிப்பாக தென் இந்தியாவிற்கு இயங்கப்படக் கூடிய வாய்ப்பு என்பது அரிது. அதற்கு இலங்கை அரசும், விமான போக்குவரத்து அமைச்சும், சுகாதாரத்துறையும், மத விவகார அமைச்சும் அனுமதி கொடுக்கக் கூடிய வாய்ப்பு என்பது சந்தேகமே. அதிலும் பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் கூடும் மத விடயங்களில் கலந்து கொண்டு விட்டு மீண்டும் இலங்கை வரும் யாத்திரிகர்களால் இலங்கையில் நோய்த் தொற்று பரவி விடக் கூடாது என்பதில் இலங்கை அரசு கண்டிப்பாக கவனம் செலுத்தும். புனித மக்கா யாத்திரை, ரோம் ஜெரூசலம், புத்தகாயா யாத்திரைகளுக்கே இதுவரை அனுமதி இல்லாத நிலையில் சபரிமலை யாத்திரைக்கான அனுமதி என்பது சந்தேகத்துக்குரியதாகும்.

இவைகளைத் தாண்டி கொவிட் 19 நோய்த் தொற்றின் மிக மோசமான தாக்கத்தை புரிந்து கொண்டு இந்துக்களாகிய எமக்கு நம்மையும், நமது குடும்பத்தையும், நமது ஊரையும், தேசத்தையும் இந்த நோய்த் தொற்றில் இருந்து காக்க வேண்டிய பொறுப்பு உண்டு. இவற்றை நன்கு உணர்ந்து இந்த பேரிடக் காலத்தில் மிகுந்த பொறுப்புடன் நடக்க வேண்டியது அவசியமாகும். சமயம், மொழி, இனம் இவை அனைத்திற்கும் அப்பாற்பட்டு மனித இனத்தைக் காக்கும் சுகாதார, தனிமைப்படுத்தல், சுய கட்டுப்பாடு என்ற உயரிய சிந்தனையோடு மனிதர்கள் அனைவரும் செயற்பட்டாலே கொவிட் 19 இல் இருந்து உலகம் மீள முடியும்.

மற்றைய விடயம், இம்முறை சபரிமலை புனித யாத்திரை செல்ல முடியாத சூழ்நிலையில் இலங்கையிலேயே அந்த அடியார்கள் விரதமாலை அணிந்து விரதங்களை கடைப்பிடித்து பூர்த்தி செய்யலாமா?

சபரிமலையைப் பொறுத்தவரை ஆதியான காலத்தில் மகரஜோதி தரிசனத்தின் பொருட்டு மட்டுமே ஆலய நடை திறக்கப்பட்டது. அந்த மகரஜோதி தரிசனம் காண்பதற்கே விரத முத்திரை மணிமாலை அணிந்தார்கள். பின்னர் விஷு, ஓணம், மாத பூஜை, உற்சவம் என நடை திறக்கப்பட்ட காலத்திலும் சபரிமலை செல்வதென்றால்தான் மாலை அணிவது, இருமுடி கட்டுவது என்று ஒரு நியதி கடைப்பிடிக்கப்பட்டது. எனவே மாலை அணிவது, இருமுடி கட்டுவது என்றாலே அது சபரிமலை யாத்திரைக்குத்தான்.

விரதத்தின் அடையாளமான முத்திரையாக உடலையும் தூய்மைப்படுத்தி, மனதையும் இறைவன்பால் லயிக்க வைக்கும் அடையாளமே விரத முத்திரை மணிமாலை. இந்து சமயத்தில் ஏராளமான விரதங்களும், அனுட்டானங்களும் இருப்பினும் ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு விரதமுத்திரை மணிமாலை அணிந்து விட்டால் அணிந்தவர் தற்காலிகத் துறவியாக மாறி விடுகிறார். கடுமையான விரத அனுட்டான கட்டுப்பாடுகளை கடைப்பிடித்து கார்த்திகை முதலாம் திகதி முதல் தை முதலாம் திகதி வரை 60 நாட்கள் முழுமையான ஒரு மண்டலம் மறுபிறவியாக, மறு ஜென்மமாக, புனிதனாக தனக்குள் ஐயப்பனை வரித்துக் கொண்டு தவசீலர்களாக காடு மலைகளைக் கடந்து, சத்தியமான 18 ஆம் படிகளைத் தாண்டி, சன்னிதானத்தில், கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாகிய ஐயன் ஐயப்பனை தரிசித்து, ஜோதியாக மகர சங்கராந்தியில் தரிசனம் கண்டு பூர்த்தி செய்வதே சபரிமலை யாத்திரை. அதுவே பாப விமோசனமாக மறுபிறவியாக புனர் ஜன்மாக ஆசிர்வதிக்கப்பட்ட உடல், உயிர், ஆத்மாவாக மாலை அணிந்து அடியார் விரதத்தை பூர்த்தி செய்கின்றார்கள். எனவேதான் மாலை அணிந்தவர்களை எந்த பாகுபாடும், வேறுபாடும் இன்றி ஐயப்பனாகவே நினைந்து பாத பூஜை, பாத நமஸ்காரம் செய்தார்கள், வணங்கினார்கள்.

ஜீவாத்மா, பரமாத்மா ஐக்கியப்படும் ஒரு தற்காலிக ஏற்பாடே மண்டல விரதம். மாலை அணிவதால் நம்முள் (ஜீவாத்மாவுடன்) வியாபிக்கும் பரமாத்மாவை மீண்டும் சபரிமலை சத்தியமான பொன்னு 18 ஆம் படிமேல் யோக நிலையில் சின்முத்ரா மூர்த்தியாகிய ஐயனோடே ஐக்கியப்படுத்திவிட்டு ஆசீர்வதிக்கப்பட்ட புனர் பரிசுத்த ஜீவாத்மாவாக நாம் திரும்புகிறோம். அதற்கான புனிதம் சபரிமலைக்கு மட்டுமே உண்டு.

எனவே சபரி யாத்திரையே இல்லாவிட்டால் மாலை அணிவதென்பது பெரும் பாவமாகி விடும். எனவே ஐயப்பனடியார்கள் தமது சுயபுத்தியுடன் சிந்தித்து செயற்பட வேண்டும்.

சபரிமலை யாத்திரை செல்லாத நிலையில், விரதமுத்திரை மணிமாலை அணியாத நிலையில் ஐயப்ப பூஜை, வழிபாடுகள் வழமை போல் செல்வது சரியா? அது தூய்மையாகி விடாதா?

இம்முறை துரதிஷ்டவசமாக சபரி யாத்திரை செல்லமுடியாத சூழ்நிலையில், மாலை அணிவதையும் தவிர்த்துக் கொண்டு ஐயப்பனடியார்கள் அனைவரும் இந்த மண்டல பூஜைக் காலத்தில் அதாவது கார்த்திகை 1 ஆம் திகதி தொடக்கம் சாதாரணமாக நாம் சதுர்த்தி, பிரதோஷம் போன்ற விரதங்களை மேற்கொள்வது போல் தூய்மையாக பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து ஐயன்மேல் தூய பக்தியோடு புலான் உணவை முற்றிலும் தவிர்த்து ஆலய மற்றும் ஐயப்ப அமைப்புக்களின் பஜனை, பூஜை, வழிபாடுகளில் கலந்து கொண்டு வழிபாடுகள் செய்யலாம். இதற்காக மாலை அணிய வேண்டும் என்பதோ மாலையணிந்த காலத்தில் கடைப்பிடிக்கும் விரத நியதிகளை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதோ இல்லையே.

